வெளியீடு 21-3-2001 Issued 21-3-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 5, 2000 – தொகுதி 102 – எண் 2

Friday the 5th May, 2000 – Volume 102 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

சிலவற்றைக் குறிப்பிட்டு சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறார்கள். அவற்றிலே கொஞ்சம் நிதியும் கிடைக்கும் என்று கருதுகிறேன். எது எப்படியிருந்தாலும், பாலம் கட்ட வேண்டியது அவசியம் என்பதை நான் மறுக்கத் தயாராக இல்லை. அவசியம்தான். இதுகுறித்து உட்கார்ந்து பேசி, அங்கே இருக்கிற நிதிநிலைக்கேற்ப மாவட்ட முகமையைக் கலந்து M.L.A. அவர்கள் தலையிட்டுச் செய்வார்களேயானால், அப்போது அந்த மாவட்ட நிர்வாகம் என்னிடத்திலே அதைப்பற்றி கேட்டால், அதற்குத் தகுந்த யோசனை அந்த நேரத்தில் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 523, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**523—**

**நகராட்சிகள் நிலுவைத் தொகை**

***25219—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை நகராட்சிகள் நிலுவையில் வைத்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதன் மீது வாரியம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வினாவை எதற்காக எழுப்பினார் என்றே எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் விடை அளிக்க வேண்டிய கடமையில் விடை அளிக்கிறேன்.

(அ) ஆம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு நகராட்சிகள் செலுத்த வேண்டிய பராமரிப்புக் கட்டணம் மற்றும் தண்ணீர்க் கட்டணம் ஆகியவை ரூபாய் 22.46 கோடி நிலுவையில் உள்ளது.



(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| (ஆ) 31-3-2000 வரையிலான காலத்திற்கு பராமரிப்புக் கட்டண நிலுவைத் தொகை | 9.70 |
| 31-3-2000 வரையிலான காலத்திற்கு குடிநீர் கட்டண நிலுவைத் தொகை | 12.76 |
| மொத்த நிலுவைத் தொகை | 22.46 |

(இ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்புக் கோட்ட செயற் பொறியாளர்கள், சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர்களை நேரில் சந்தித்து நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

ஒவ்வொரு மாத வாரியக் கூட்டத்திலும் நகராட்சிகள் செலுத்த வேண்டிய கேட்பு, வசூல், நிலுவை அறிக்கை வைக்கப்படுகிறது. பிரதி மாதமும் நகராட்சிகள் செலுத்த வேண்டிய பராமரிப்பு மற்றும் குடி தண்ணீர் கட்டண நிலுவைத் தொகைகள் தெரிவிக்கப்பட்டு அத்தொகையை உடனடியாக வாரியத்திற்குச் செலுத்துமாறு நகராட்சி ஆணையாளர்களும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் நான் கேட்டேன். ஆகவே அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏராளமான தொகையை நகராட்சிகள் நிலுவையாக வைத்துள்ளன. சாதாரணமாக ஊராட்சிகளைவிட அவற்றிற்கு வருவாய் அதிகம். அங்கே நிலுவையை விட்டுவைத்திருக்கிற குடிநீர் வடிகால் வாரியம் ஊராட்சிகளில் சிறிய தொகை பாக்கி இருந்தாலும்கூட அதைப் பராமரிக்க முடியாது என்று அங்கே இருக்கின்ற பொறியாளர்கள் சொல்கிறார்கள். வருவாய் இல்லாத ஊராட்சிகளுக்கு அந்த தொகைகளைத் தள்ளுபடி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே அதற்காகத்தான் வினாவிற்கு சம்பந்தமில்லாத விவகாரம் என்று நான் ஒதுக்கிவிட்டேன். குறிப்பாக

1996-க்குப் பிறகுதான் அதிக பாக்கியே ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். நகராட்சிக்கு இந்த பாக்கி ஏற்பட்டிருப்பதற்கு நான் தான் காரணம்; இந்த அரசுதான் காரணம். என்ன காரணம் என்றால் நகராட்சியிலே குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நிதித் தட்டுப்பாடு இருந்தது; இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. எப்படியாவது நகரக் குடியிருப்புகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவர்களைத் தீர்மானம் இயற்றிக் கொடுக்கச் சொல்லி அதிலே கடன் வாங்க முடிந்தால் கடன் வாங்கவும், கடன் வாங்க முடியாத சூழ்நிலை இருந்தால் எப்படியும் செய்யுங்கள், எதிர்காலத்திலே கடனை அடைத்து விடுவார்கள் என்று இந்தத் துறைக்கும் அந்தத் துறைக்கும் சேர்ந்து நானே மந்திரியாக இருக்கின்ற காரணத்தினால் அதிகாரிகளும் ஒத்துக் கொண்டு இப்படிச் செய்ததால் அதிக அளவுக்குக் கடன் வந்துவிட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகரக் குடியிருப்புத் திட்டங்களில் இப்படியெல்லாம் கடன் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். எங்கேயாவது ஒரு கிராமத்தில் இவர்கள் நிதியைச் செலுத்தவில்லை என்பதற்காக அந்தக் கட்டணத்தைக் கொடுக்கவில்லை என்பதற்காக, குடிநீர்த் திட்டத்தை நிறுத்தியிருந்தால் இந்தத் தகவலை எங்களுக்குத் தெரிவித்தால் அதை உடனடியாக நாளைக்கே நிவர்த்தி செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகராட்சிக்குக் கடந்த 4 ஆண்டுகளாக மானியமாகவும் கடனாகவும் நிறைய தொகை கொடுத்து நல்ல வளர்ச்சிப் பணிகள் எல்லாம் நடந்து வருகின்றன. குடிநீர்த் திட்டத்திற்காக 1¼ கோடி ரூபாய் [illegible]து அரசு வழங்கி அந்தப் பணிகளும் பூர்த்தியடைந்த நிலையில் குடிநீர்ப் பற்றாக்குறையும் இல்லாத நிலை இருக்கின்றது. என்றாலும்கூட, அங்கு மூடப்பட்டிருக்கின்ற Mettur Textiles ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வரிபாக்கி வைத்துள்ள நிலையில் மேட்டூர் நகராட்சிக்கு சிறப்பினமாகக் கருதி அரசு மானியம் வழங்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வினா எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இதுவரை காத்திருந்து யாராவது ஒருவர் கேள்வி



கேட்பார், அதில் துணை வினா எழுப்பலாம் என்றிருந்தது தவறு. இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்கெனவே இருக்குமானால் என்னுடைய கவனத்திற்கோ அல்லது அதிகாரிகளுடைய கவனத்திற்கோ அல்லது முதலமைச்சருடைய கவனத்திற்கோ கொண்டு வந்து, அது மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுமானால் அது சிறப்பு நேர்வாகக் கருதப்பட்டு எந்த வகையிலாவது குடிதண்ணீர் கொடுக்கின்ற முயற்சியில் முறையாக இந்த அரசு ஈடுபட்டிருக்கும். இதுவரையிலே அந்தத் தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. இனிமேலும் இந்தத் துணைக் கேள்வியோடு நின்றுவிடாமல் அதற்கான proposal என்ன இருக்கிறது என்பதை முறையாக ஆய்ந்து எனக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 80 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி ஓராண்டு ஆகிறது. தேசிய நெடுஞ்சாலை குறுக்கீடு காரணமாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான் பல முறை மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரியிடமும் பேசியும் பலன் இல்லாமல் இருக்கிறது. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது தேசிய நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோ இதில் தலையிட்டு உடனடியாக அந்த இணைப்பை வழங்கினால் கிட்டத்தட்ட பேரூராட்சி முழுவதும் ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் தண்ணீர் கிடைக்கக்கூடிய வசதி கிடைக்கும். அதுவும் அந்த தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கு வெறும் 30 அடிதான். அந்த 30 அடி இடைஞ்சலாக இருக்கிற காரணத்தினாலே அதற்குண்டான அனுமதியை அரசு பெற்றுத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகவல் இதுவரை எனக்குத் தெரியவில்லை. அனேகமாக தேசிய நெடுஞ்சாலை நம்மிடத்திலே குறுக்கிடாது. நாம் தான் அதனிடத்திலே போய் குறுக்கிட்டிருக்கிறோம். தேசிய நெடுஞ்சாலையில் குறுக்கிடுவது நாமே தவிர அவர்கள் அல்ல. ஆகையால் தேசிய நெடுஞ்சாலை என்றாலும் மாண்புமிகு அமைச்சர் திரு. கிருட்டிணன் அவர்கள் அதற்காக மெனக்கட்டு அந்தக்

காரியத்தைச் செய்து கொடுப்பார் என்று நம்புகின்றேன். நாளை காலையில் உறுப்பினர் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து அது பற்றி எழுதிக் கொடுத்தால் அவரைக் கலந்து அதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுத்து அந்தக் காரியத்தை நிச்சயம் முடிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு பாக்கி இருக்கிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அதற்கு வட்டி உண்டா? அது எத்தனை சதவிகிதம்? எல்லா நகராட்சிகளுமா அல்லது எந்தெந்த நகராட்சிகள் என்று அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அதுபற்றி தற்போது என்னிடம் விவரம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் உள்ள பட்டிணம்பட்டியிலே மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அதிலே நீரே ஏற்றாமல் அங்கே தண்ணீர்ப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைத் தீர்த்து வைப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படித் துணை வினா ஆகும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தீர்த்து வைக்க வேண்டியது உண்மைதான். ஆனால் அது உண்மையாக இருந்தால்தானே தீர்த்து வைக்க முடியும்? உண்மையை நிரூபித்தால் தீர்த்து வைக்கத் தயாராக இருக்கிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 524, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



**524—**

**பணியிடங்கள்**

***17645—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:***

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாகவுள்ள உதவி வேளாண்மைப் பொறியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நபருடைய நில இருப்பு, நீர் ஆதாரம் ஆகியவற்றிலே தமிழ்நாடு தேசிய அளவினைவிட மிகக் குறைவானதொரு வளங்களையே பெற்றிருக்கிறது. இந்த வளங்களைக் கொண்டுதான் பெருகிவருகிற மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்தியைப் பெருக்க வேண்டியிருக்கிறது என்று வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே கூறப்பட்டுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, தரிசு நில மேம்பாடு, சொட்டு நீர்ப்பாசனம், டிராக்டர் போன்ற நவீனக் கருவிகளைப் பயன்படுத்தி விவசாயிகளை ஊக்குவிக்கின்ற முறை, பாசனப் பகுதிகளிலே நீர் மேலாண்மையை நிர்வகித்தல் போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களை அரசு தீட்டி வருகிறது. எனவே இந்தப் பணிகளை எல்லாம் முழுமையாக நிறைவேற்றி விவசாயத்தை மேம்படுத்துவதற்கு, விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதற்கு ஏதுவாகவுள்ள பல உதவி வேளாண்மைப் பொறியாளர் பணியிடங்கள் தற்போது காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றை அரசு நிரப்பி விவசாயிகளை ஊக்குவிக்க முன்வருமா? காலியாகவுள்ள இடங்கள் எத்தனை? அவை எப்போது நிரப்பப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96 ஆம் ஆண்டு வரையில் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள உதவி வேளாண்மைப்

பொறியாளர்கள், உதவி வேளாண்மை இளநிலைப் பொறியாளர்கள் பதவிகள் அனைத்தும் நிரப்பப்பட்டு விட்டன. 1996-97 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறையில் கூடுதல் ஒன்றியப் பொறியாளர் பதவியில் பணிபுரிய வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்து உதவி வேளாண்மைப் பொறியாளர்களை அனுப்பக் கோரியதன் பேரில் 150 உதவி வேளாண்மைப் பொறியாளர்கள் மாற்றுப் பணி மூலம் ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதனால் ஏற்பட்ட காலியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் 100 பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. அதாவது, பாசனப் பகுதிகளில் அமைப்பாளர்களாக தினக் கூலி அடிப்படையில் பணிபுரிந்த வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்ற 21 நபர்களும், வேலைவாய்ப்பகம் மூலம் 79 நபர்களும் உதவி வேளாண்மைப் பொறியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது காலியிடங்கள் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர் சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லாமல் இருந்தாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்புடையதாக இல்லாமல் இருந்தாலும் என்று சொல்லிவிட்டு எப்படிக் கேட்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முக்கியமான பிரச்சினை என்பதனால், சொட்டு நீர்ப் பாசனத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள மானியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் நான் ஏற்கெனவே சொன்ன முறைதான். நீங்கள் ரொம்ப முக்கியமான பிரச்சினை என்று நினைத்தால், என் அறைக்கு வந்து, இந்தத் துணை வினாவிற்கும் மூல வினாவிற்கும் தொடர்பு இல்லையென்றாலும் அனுமதி கொடுங்கள் என்று கேட்க வேண்டும். இங்கே நீங்களாகவே எழுந்து நின்று, இது துணை வினாவிற்குத் தொடர்பு இல்லையென்றாலும் கேட்கிறேன்; இது ரொம்ப முக்கியமானது என்று சொல்வது சரியில்லை. இப்போது கேளுங்கள்.

**திரு.பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள மானியத் தொகையை தற்போது அரசு நிறுத்தியிருப்பதாக அறிகின்றேன். அதுவும் குறிப்பாக, சேலம்,



நாமக்கல் மாவட்டங்களில் நிலத்தடி நீரினுடைய அளவு கீழே சென்றுவிட்ட காரணத்தினால், கிட்டத்தட்ட ஆழ்துளைக் கிணறுகள் எல்லாம் 600 அடி, 700 அடி, 1000 அடி என்று போடப்பட்டு மின்மோட்டார்கள் வைத்து, கம்ப்ரசர்கள் வைத்து, விவசாயிகள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சொட்டு நீர்ப் பாசனத் திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆகவே அரசு மறுபரிசிலனை செய்து சொட்டு நீர்ப் பாசனத்திற்கு மீண்டும் மானியம் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா? தமிழ்நாடு முழுவதும் கொடுப்பதற்கு சாத்தியம் இல்லையென்றாலும், அதிக ஆழத்தில் ஆழ்த் துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள சேலம், நாமக்கல், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் முதல் கட்டமாகக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தினப் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து இங்கு இந்தக் கேள்வி எழுப்பப்பட்டதாகத்தான் நான் கருதுகின்றேன். சொட்டு நீர்ப் பாசனத்திற்கு—தெளிப்பு நீர்ப் பாசனத்திற்கு—மத்திய அரசாங்கம் தரக்கூடிய அந்த நிதியைப் பெற்று, நாம்—மாநில அரசாங்கம்—25 சதவீதம் நிதியை ஒதுக்கி வழங்குகிறோம். அதிலே தாழ்த்தப்பட்ட, சிறு, குறு விவசாயிகளுக்கு 90 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு 70 சதவீதம் இதிலே நாம் கொடுக்கின்றோம். ஆகவே இந்த மானியம் எந்த வகையிலும் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

முற்பகல் 9-50

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, வண்ணாரப்பேட்டை வேளாண்மைப் பொறியியல் பணிமனையில் ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்ட பணியிடங்கள் நீண்டகாலமாகக் காலியாகவே இருக்கின்றன. இதுகுறித்து அந்தத் தொழிற்சங்கத்தின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் விரிவாக ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியிடங்களைப் பூர்த்தி செய்து, வேளாண்மை சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் அந்தப் பணிமனையிலேயே செய்வது என்ற ஒரு நிலையை மாநில அரசு செய்யுமானால் உண்மையிலேயே அந்த Workshop மிகச் சிறப்பாக

இயங்க வாய்ப்பாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத்தின் சார்பில் நான் கொடுத்த மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை என்னிடத்தில் தந்தார்கள். அது அந்தத் துறையின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதனுடைய விவரம் குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. அந்த விவரம் கிடைத்தவுடன் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புஞ்சைப் பயிர்களான கம்பு, சோளம், தினை, சாமை போன்ற பொருட்கள் எல்லாம் கையாளப்படுவது பழக்கத்திலே அதிகமாகக் குறைந்து வருகிறது. இந்த உணவுப் பொருட்கள், உடம்புக்குக் கேடில்லாதவை. இவற்றை உணவாகக் கொண்டால் உடல் நலமும் நன்றாக இருக்கும். தமிழகத்திலே தற்போது 2.5 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் மானாவாரியாக இருப்பதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. எனவே இந்த மானாவாரி நிலங்களிலே புஞ்சைப் பயிர்களைப் பயிரிடுவதற்கு ஏதுவாக விவசாயிகளை ஊக்கப்படுத்தும் திட்டங்களை அரசு நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ரொம்ப வேகமாகக் கையைத் தூக்கினீர்களே? இது தொடர்புடைய வினாவா? இதை தனி வினாவாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் அவருடைய துணைக் கேள்வி ஒரு விளம்பரமாகும். நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 525. திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



525—

## PRODUCTION OF MULTI-COLOURED COTTON

***26149—THIRU B. VENKATASAMY:**

Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) Is it a fact that the cotton is naturally produced red and in other colours also; and

(b) If so, will it be given to all the ryots to produce coloured cotton in Tamil Nadu.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இவ்வகைப் பருத்திப் பயிர்களை விவசாயிகள் விளைவிக்கும்படியான திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**THIRU B. VENKATASAMY:** Honourable Speaker, Sir, Naturally coloured cotton is produced in Coimbatore and other places by rich farmers and it is giving huge profits to the agriculturists. May I request the Hon. Minister for Agriculture to see that naturally coloured cotton seeds are imported from other countries for producing coloured cotton in Tamil Nadu and to see that naturally coloured cotton is exported to other countries to get more income, Sir.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணப் பருத்திகள், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, உஸ்பெகிஸ்தான், பெரு மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளிலேதான் உற்பத்தியாகின்றன. பரீட்சார்த்தமாக நம்முடைய இந்தியாவிலேகூட வண்ணப் பருத்தியை உற்பத்தி செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மத்தியப் பிரதேசத்திலே உற்பத்தி செய்தபோது, அவர்களுக்கு அதில் போதிய இலாபம் வரவில்லை என்று கருதி உற்பத்தி குறைந்துவிட்டது. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் நாம் இப்படிப்பட்ட ஆராய்ச்சியிலேகூட ஈடுபட்டோம். அதிலும் அதிகமாக உற்பத்தி கிடைக்கவில்லை. இலாபம் வராது என்ற அளவில் இருக்கிறது. சீதோஷ்ண நிலையும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இப்போது நான் குறிப்பிட்ட அந்த நாடுகளிலேதான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால்

தமிழகத்திலே இஸ்ரேல் நாட்டினுடைய தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு, வண்ணப் பருத்தியை உற்பத்தி செய்ய முடியுமா என்று இஸ்ரேல் நாட்டிலிருந்து வந்த நிபுணர்களிடத்திலே பத்து நாட்களுக்கு முன்புகூட நான் பேசினேன். அதற்கு அவர்கள் இங்கே வேளாண்மைத் துறையில் இருக்கின்ற அதிகாரிகளை எங்களுடைய நாட்டுக்கு அனுப்புங்கள், அங்கேயே நாங்கள் பயிற்சி தருகிறோம். அதுபோல எங்களுடைய விஞ்ஞானிகளையும் இங்கே அனுப்புகிறோம். இங்கேயுள்ள பல்கலைக்கழகத்திலே அதிகாரிகளை வைத்து பயிற்சி தந்து, அவர்கள் தொழில்நுட்பத்தைத் தந்து, இந்த சீதோஷ்ண நிலைக்கு இந்த வண்ணப் பருத்திகளை உற்பத்தி செய்ய முடியுமா என்பதைப் பற்றி நாம் விவாதித்து ஒரு முடிவு எடுக்கலாம் என்ற ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். அதுபற்றி முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி நம்முடைய தொழில்நுட்ப விஞ்ஞானிகளை இஸ்ரேலுக்கு அனுப்பவும், அவர்கள் இங்கே வந்து பயிற்சி தரவும், வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 9.55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே ஓர் ஆராய்ச்சிப் பண்ணை, பொங்கலூருக்குப் பக்கத்திலே இருக்கிறது. கிட்டத்தட்ட 38 ஏக்கர் நிலத்தோடு விதை உற்பத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அந்தப் பண்ணை இப்போது தண்ணீர் இல்லாமல் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல், காய்ந்து போய் இருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதன் பக்கத்திலே வாய்க்கால் போகிறது. அதிலே தண்ணீர் எடுக்க வசதியும் இருக்கிறது. ஆனால் அவர்கள் பலமுறை எழுதியும் உத்தரவு வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பண்ணையை இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்கெல்லாம் உபயோகப்படுத்தலாம். ஆனால் அந்தப் பண்ணை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் வெறும் நெல்லை மட்டும் அரைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு சாதாரண நெல் மிஷினை வைத்துக்கொண்டு அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதைச் செம்மைப்படுத்தி அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து, தண்ணீர் கிடைப்பதற்கு வழி செய்து, இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்கு உதவினால் பருத்தி புடவையாகக் காய்க்கக்கூடிய ஏற்பாட்டைப்போல அங்கே செய்ய முடியும்.



அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 39-க்கும் மேற்பட்ட விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அதிலே சில பண்ணைகளிலே தண்ணீர் வசதி இல்லை என்பதும் உண்மைதான். மூலக்கேள்வி வண்ணப் பருத்தி விளைவிப்பது சம்பந்தப்பட்டது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலேயே நாம் இந்த வண்ணப் பருத்தியை உற்பத்தி செய்வதற்கு முயற்சியை மேற்கொண்டும் அது வெற்றி பெறவில்லை. அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். மகாராஷ்டிராவிலே 1997-98ஆம் ஆண்டு, பழுப்பு நிற பருத்தி இரகங்களைப் பயிரிட அவர்கள் மேற்கொண்ட முதல் முயற்சியே தோல்வி அடைந்திருக்கிறது. ஆகவே அங்கே தண்ணீரே இல்லை. அங்கே போய் இந்த முயற்சியிலே ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் கல்லூரி மாணவனாக இருந்தபோதே, பல ஆண்டுகளுக்கு முன்னால் விஞ்ஞான மேதை ஜி.டி. நாயுடு அவர்கள் இப்படிப்பட்ட வண்ணப் பருத்திகளை விளைவிக்க முயற்சி செய்து, விளைய வைத்தார்கள். அதுபோல அந்த விஞ்ஞான மேதை ஒரு வாழையில் இரண்டு குலைகள் போடுவதற்கான முயற்சி எடுத்து அதையும் செய்து காட்டினார்கள். அவருக்கு ஆதரவு இல்லாத காரணத்தால், அவருடைய கண்டுபிடிப்புகளை எல்லாம் உலகுக்குக் காட்ட அண்ணா தலைமையில், சர்.பி.டி. ராஜன் அவர்கள் முன்னிலையில் ஒரு மாநாடு நடத்தினார்கள். வெளிநாட்டிலே இருந்து ஒரு விஞ்ஞான தொழில்நுட்பத்தைக் கேட்பதாக அமைச்சர் சொன்னார். நம்முடைய நாட்டிலே விஞ்ஞானி ஜி.டி. நாயுடு அவர்கள் அதைச் செய்து காட்டி இருக்கிறார்கள். ஆகவே அவருடைய பண்ணையிலிருந்து இப்படிப்பட்ட குறிப்புகளை எடுத்து அதையும் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.டி. நாயுடு அவர்கள் பல கண்டுபிடிப்புகள் கண்டுபிடித்து அறிவித்திருக்கின்றார்கள். ஆனால்

அதைவிட நல்ல தொழில்நுட்ப அடிப்படையில் விஞ்ஞானிகள் உணவு உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கக்கூடிய வகையில் இப்போது கண்டுபிடித்து நாட்டிற்கு அறிமுகப்படுத்தி வருகின்றார்கள். ஆகவே எந்த அரசாங்கமாக இருந்தாலும், உற்பத்திச் செலவு குறைவாக இருந்து உற்பத்தி அதிகரித்து விவசாயிகளுக்கு இலாபகரமாக இருக்கக்கூடிய ஒரு கண்டுபிடிப்பு என்றால் அதை அரசு பயன்படுத்திக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மான்செஸ்டர் என்று சொல்கின்ற அளவுக்கு கோவையிலே அதிகமான அளவிலே பருத்தி விளைவிக்கப்பட்டு வந்தது. ஆண்டுக்காண்டு பருத்தி பயிரிடுகின்ற பழக்கம் குறைந்து, இப்போது பருத்தியே பயிரிட முடியாத நிலையிருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு பருத்தி விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே அரசு ஏதாவது வழிமுறைகளைக் கையாளுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

*(முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் பருத்தி உற்பத்தியிலே நல்ல தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று ஆலோசனையை வழங்கியிருக்கிறது. நம்முடைய மாநில அரசாங்கமும் பருத்தி உற்பத்தியில் கூடுதலாக நல்ல விளைச்சலைத் தரக்கூடிய இரகங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகிறது. பெரும்பாலும் பருவ மழையை நம்பி பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. பருவ மழை பொய்த்துவிட்டால் பெருத்த நட்டம் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. அதனால் விவசாயிகள் அந்த நட்டத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் ஒவ்வோர் ஆண்டும் பருத்தி உற்பத்தி செய்வதைக் குறைத்துக்கொள்கிறார்கள். அதேநேரத்தில் தண்ணீர் பாய்ச்சி பருத்தி உற்பத்தி விளைவிக்கக்கூடிய இடங்களிலேகூட அவர்களுக்கு சில ஆண்டுகளில் விலை கட்டுப்படியாகாத சூழ்நிலை ஏற்படுகிறபோது, அடுத்த ஆண்டு பருத்தி உற்பத்தி செய்வதிலே அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. அதனாலேதான் ஆண்டுக்காண்டு பருத்தி உற்பத்தி குறைந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அரசாங்கம் விவசாயிகளை ஊக்கப்படுத்தி நல்ல தொழில்நுட்பத்தையும், உதவிகளையும் செய்து வருகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 528, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**528—**

**புதிய பேருந்து**

***15549—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:***

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மனோராவிலிருந்து தஞ்சாவூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*பட்டுக்கோட்டை—மனோரா (வழி) அதிராமபட்டினம் வழித்தடத்தில் தடம் எண் 34-ன் மூலம் தினசரி 2 நடைகள் இயக்கப்படுகின்றன. பேராவூரணி—அதிராமபட்டினம் (வழி) மனோரா வழித்தடத்தில் தடம் எண் 1-ன் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. பட்டுக்கோட்டை—தஞ்சாவூர் வழித்தடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 10 நடைகள் இயக்கப்படுகின்றன. பகுதி வாரியாக போதுமான போக்குவரத்து வசதி உள்ளதால் தஞ்சாவூரிலிருந்து மனோரா கிராமத்திற்கு நேரடிப் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.*

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோரா சுற்றுலாத் தலம் மாமன்னர் சரபோஜி அவர்களால் கட்டப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அங்கே புதையல் காவியத்தைப் படைத்து இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலேயிலிருந்து நாகப்பட்டினம், இராமேஸ்வரம் போன்ற பல்வேறு பகுதிகளுக்கு தொலை தூரப் பேருந்துகள் ஓடுகின்றன. ஆனால் அவை அங்கே நிறுத்தப்படுவதில்லை. அங்கே தினந்தோறும் மிக அதிகமான எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்.

குறிப்பாக, தஞ்சாவூரிலிருந்து மனோரா சுற்றுலாத் தலம் 65 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. எனவே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு மனநிறைவு ஏற்படுகின்ற வகையில் தனியாக தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டை, மனோராவுக்குப் புதிய வழித்தடம் ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடுகின்ற பேருந்துகள் அங்கே நிறுத்தப்படுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பேருந்துகளை நிறுத்துவதற்கான வழிமுறைகளை உடனடியாக அந்தப் போக்குவரத்துக் கழகம் மூலமாகச் செய்யலாம். அங்கே பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிப்பதை முன்னிட்டு வருங்காலங்களில் பேருந்துகள் விடுவதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 529, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**529—**

## பேருந்து இயக்குதல்

***21099**—**திரு. கொ.வீ. நன்னன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்திலிருந்து பெங்களூருக்குப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் (தருமபுரி) பேருந்துகள், பிற போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்,



கர்நாடக மாநிலப் பேருந்துகள், மற்றும் தனியார் பேருந்துகள் ஆகியவை சேர்ந்து, மொத்தம் 62 பேருந்துகள் செங்கம் வழியாக பெங்களூர் வரை இயக்கப்படுவதாலும், செங்கத்திலிருந்து பெங்களூருக்குத் தனியாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பேருந்து இயக்க வேண்டிய அளவிற்கு பயணிகள் அடர்வு இல்லாத காரணத்தாலும் தனியாக ஒரு பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கொ.வீ. நன்னன், இருக்கையில் இல்லை. திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் அனுமதி இல்லாமல் இயக்கப்பட்ட 150-க்கும் மேற்பட்ட சொகுசுப் பேருந்துகளை நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றபொழுது பறிமுதல் செய்து, வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அதனுடைய உரிமையாளர்கள்கூட அந்தப் பேருந்துகளுக்கு உரிமை கோர முன்வரவில்லை. அந்த வழக்கு இப்போது எந்த நிலையில் இருக்கிறது? சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிற கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கிற விதத்திலே அந்தப் இப்படிப்பட்ட பேருந்துகளை இத்தகைய வழித்தடங்களில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற இந்தக் கேள்விக்கான விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் அதற்கான விவரங்கள் பெற்று அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 530, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**530—**

## கான்கிரீட் தளம்

***3180**—**திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் நாச்சியார் திருக்கோயிலின் தேர் ஓடும்

[2000 மே 5

நான்கு வீதிகளிலும் கான்கிரீட் தளம் அமைக்க வடிவமைப்பு வரைபடம் அரசிடம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தப் பணியானது அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இன்னும் இடம் பெறவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சியார் திருக்கோயில் தேர் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய தேர். அரசு முத்திரைச் சின்னத்துக்கு மாடலாக இருப்பதுதான் திருவில்லிபுத்தூர் கோபுரம். ஆகவே சிறப்பினமாகக் கருதி, முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் இருக்கும்போது, கோயிலிலிருந்து சுமார் ரூ.56 ஆயிரம் கட்டி ஆயவெல்லாம் செய்தார்கள். ரத வீதி பூராவுமே போக்குவரத்து சாலைதான். கொஞ்சம் National Highways, மீதிப் பூராவும் நம்முடைய Highways-ல் இருக்கிறது. முன்பு தேர் போக வேண்டுமென்றால் 3 மாதம், 4 மாதம் ஆகும். கீழே வந்து பதிந்துவிடும். இப்போது BHEL கம்பெனியிலிருந்து சக்கரம் எல்லாம் போட்டிருக்கிறது. அதனால் இப்போது 3 நாட்கள், 4 நாட்கள் ஆகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சிறப்பினமாகக் கருதிச் செய்ய வேண்டும். தமிழ்நாடு மட்டத்தில் ஒன்றும் செய்யப் போவதில்லை. இது பெரிய தேர். திருவாரூர் தேர் மாதிரி பெரிய தேர். ஆகவே இவற்றையெல்லாம் நீங்கள் செய்தால் கூடுதல் இலாகாகூட கிடைக்கும். ஏனென்றால், ஆண்டாளுடைய கிருபையெல்லாம் கிடைக்கும்

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் வேலையைப் பாருங்கள். இலாகா கொடுப்பது முதலமைச்சர் பொறுப்பு. அந்த வேலையெல்லாம் உங்களுக்குக் கிடையாது. ஒழுங்காகக் கேள்வியைக் கேளுங்கள்

**திரு. இரா. தாமரைக்கனி:** எனவே சிறப்பினமாகக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் concrete road போடுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



2000 மே 5]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இரண்டு சாலைகள் உள்ளன. ஒன்று தேசிய நெடுஞ்சாலை; மற்றொன்று மாநில நெடுஞ்சாலை. இரண்டு சாலைகள் நகராட்சிப் பொறுப்பிலே இருந்தன. 1996ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறையிலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை, போக்குவரத்திற்குத் தேவையான அளவிற்கு அந்தச் சாலைகளை சரி பண்ணலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர் ஓடுவதற்காக கான்கிரீட் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தேர் ஓடுவதற்கான கான்கிரீட் சாலை அமைக்கின்ற பொறுப்பு, பொதுவாக, அறநிலையத் துறைதான் செய்ய வேண்டும். எனவே நெடுஞ்சாலைத் துறையிடத்தில் அதற்கான மதிப்பீடு தயாரிக்கும்படி கேட்டிருந்தார்கள். ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் இதற்குத் தேவைப்படும் என்று நெடுஞ்சாலைத் துறை மதிப்பீடு தயார் செய்து இந்து சமய அறநிலையத் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். இந்து சமய அறநிலையத் துறையிலேயிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுமானால், கான்கிரீட் சாலை அமைக்கின்ற பணியை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டால் அவருக்குக்கூட தொடர்ந்து பதவி கிடைத்தாலும் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 531, திரு. கு. மனோகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இன்னொரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூலக் கேள்வி ஒழுங்காகக் கேட்டால்தான் . இரண்டாவது கேள்வி கொடுப்பேன். (குறுக்கீடு) அந்தக் கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று கிடையாது. உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தொகுதிப் பிரச்சினை ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன தொகுதிப் பிரச்சினை? இதற்கும் தொகுதிப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு) என்ன கேள்வி ஐயா? தொடர்பு இல்லையென்றால் அமைச்சரைப் பதில் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிடுவேன்.

[2000 மே 5

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை வேறு கிடையாது; நெடுஞ்சாலைத் துறை வேறு கிடையாது. எல்லாமே அரசுதான். அதனால் ஒரு வருடத்திற்கு தேர் இழுப்பதற்கு 20 இலட்சம் ரூபாய் Highways-ல் செலவழிக்கிறீர்கள். அதை பொருத்தமாக நீங்கள் செலவழித்து Concrete road போடலாம். இதில் தேர் மட்டும் போகவில்லை; அது போக்குவரத்து சாலை. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் உங்களுடைய பக்கத்தில்தான் இருக்கிறார்கள். வருமானம் உள்ள கோயில்கள் நிறைய இருக்கின்றன. பழனி கோயில் போன்ற கோயில் எல்லாம் இருக்கிறது. அதைக் குறித்து நீங்களே பேசி எப்படியும் இந்தக் காரியத்தை அடுத்த ஆடி மாதத் திருவிழாவிற்கு முன்பு செய்து கொடுக்க, வேண்டிய நடவடிக்கை எடுப்பீர்களா என்று உங்களைக் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி பிரச்சினை என்பதால் நான் தலையிடுகிறேன். நகராட்சியில் சிமெண்ட் சாலைகள் எப்படிப் போடுவது என்பதற்காக சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 12 அடிக்கு மேற்படாமல் இருக்கிற இடங்களிலேதான் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. நிதி மிகத் தாராளமாக இருந்து, அந்த நகராட்சியே அதை ஈடுசெய்யக்கூடிய நிலை இருக்குமானால் 12 அடி அகலத்திற்கு சிமெண்ட் சாலையும், இரு பகுதிகளையும் தார்ச் சாலைகளாக அமைக்கலாம், அல்லது தேவைப்பட்டால் தனி அனுமதி பெற்று பொருளாதாரத்தில் சங்கடம் இல்லாமல் இருக்குமானால், அந்த நகராட்சியில் end to end, முழுவதுமே சிமெண்ட் சாலை போடலாம் என்கிற அளவுக்குக்கூட அதைத் திருத்தலாம் என்று இருக்கிறேன். இது எந்த அளவில் இருக்கிறது? நகராட்சி மன்றம் நிதி நெருக்கடி இல்லாமல் நகராட்சி பணியை செய்வதற்குத் தயாராக இருக்கிறதா? அப்படியிருந்தால் காலையிலே அனுமதி வழங்கலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்றாவது கேள்வியெல்லாம் கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை.

வினா எண் 531, திரு. கு. மனோகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



2000 மே 5]

**531—**

## தேசிய நெடுஞ்சாலையாக்குதல்

***27020—திரு. கு. மனோகரன்:***

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் செல்லும் சென்னை சாலையில் தருமபுரியிலிருந்து 16 கிலோமீட்டர் வரை உள்ள சாலையைச் சீராகச் செப்பனிட்டு, தேசிய நெடுஞ்சாலையாக நிலை உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அச்சாலையில் செம்மாண்டகுப்பம் ஆற்றின் குறுக்கே தரைப் பாலத்தை மேம்பாலமாக உயர்த்த அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டினன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் வழியாக சென்னை செல்லும் அந்தப் பிரதான சாலையில் முதல் 15 கிலோமீட்டர் மிக மோசமாக உள்ளதை அறிந்து இப்போது 2 கிலோமீட்டர் சரி செய்திருக்கிறார்கள். மீதியுள்ளதை சரி செய்து அந்தப் பிரதான சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். மேலும் தருமபுரியிலிருந்து 6 கிலோமீட்டரில் அதே சாலையின் குறுக்கே செம்மாண்டகுப்பம் என்ற ஓர் ஆறு ஓடுகிறது. அந்த ஆறு மிகக் குறுகலான பாலத்தைக் கொண்டது. தரைப் பாலமாக உள்ளது. விபத்து அடிக்கடி நடப்பதால் அந்தப் பாலத்தைப் பற்றி கடந்த 4 ஆண்டு காலமாகக் கேட்டு வருகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தரைப் பாலத்தை, மேம்பாலமாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் வரையில் 15 கிலோமீட்டர் தூரம் உள்ளது. என்னிடம் இருக்கிற தகவல்படி, அதில் 13.40 கிலோமீட்டர் வரையில் இருவழிப் பாதையாக அமைந்திருக்கிறது. மீதி ஒரு கிலோமீட்டர் சொச்சம் தான் இருவழிப் பாதையாக ஆக்கப்பட வேண்டும். இப்போதைக்கு அந்தச் சாலை நல்ல வகையிலே பராமரிக்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். முதலில் மாநிலச் சாலையாக மாற்றப்பட்டு, அதற்குப் பிறகுதான் அது தேசிய நெடுஞ்சாலை தரத்திற்குச் செல்ல முடியும். எனவே முதலில் அதை மாநிலச் சாலையாக State Highways, ஆக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. பாலத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பாலம் கட்டப்பட வேண்டிய பாலம்தான். 30 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் இது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 532, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**532—**

## கிணறுகளை ஆழப்படுத்துதல்

***22923—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மற்றும் செங்கம் வட்டங்களில் உள்ள விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கூட்டுறவு நிலவள வங்கி மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

223318





திருவண்ணாமலை வட்டத்தில் நிலத்தடி நீர் உள்ள நிலையில் கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற சிறுபாசன காரியங்கட்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் (NABARD) விதிமுறைகளுக்குட்பட்டு கடன் வழங்கப்படும். செங்கம் வட்டத்தைப் பொறுத்தவரை தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினரால் நிலநீர் ஆதாரம் இல்லாத கருமைப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதால், அவ்வட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்த கடன் வழங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போது மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டமாக இருக்கின்றது. அந்தப் பகுதி கருமைப் பகுதியாக அறிவிக்கப்பட்டு இருந்தாலும், விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்தடி நீர் பெற கிணற்றை ஆழப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, அவர்களுக்கு விவசாயக் கடன் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா; அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாவது கடன் தருவதற்கு அரசு சிபாரிசு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொதுப் பணித் துறையினர் அதை ஆய்வு செய்து திருவண்ணாமலை வட்டத்தை வெண்மைப் பகுதியாகவும், செங்கம் வட்டத்தை கருமைப் பகுதியாகவும் அறிவித்து இருக்கிறார்கள். கருமைப் பகுதி என்றால் அங்கு நிலத்தடி நீர் மிகக் குறைவாக இருக்கிறது, அதனால் கடன் வழங்கக் கூடாது என்று அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். NABARD அனுமதியைப் பெற்றால்தான் இந்த விதியைத் தளர்த்த முடியும். அதற்கு முயற்சி செய்யலாம். ஆனால் அனுமதி கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 533, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**533—** [2000 மே 5

## தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு

***31250**— **திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் வேலை இழந்துள்ள தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலே மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் வேலை இழந்துள்ள தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ.250 வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசாணை (நிலை) எண் 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999 மூலம் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி உதவித் தொகை பெறத் தகுதியுடைய தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, ஒவ்வோர் ஆண்டும் தீபாவளியை முன்னிட்டு மேற்படி திட்டத்தில் தகுதி பெறாத தொழிலாளர்களுக்கு தலா ரூ.500 வீதம் கருணைத் தொகையாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவன்றி பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அரசு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் செல்ல விருப்பம் உள்ள தொழிலாளர்களுக்கு மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடுகள்). ஒருவருக்குத்தான் வாய்ப்பு கொடுப்பேன். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி இழந்துள்ள தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கத் தக்க வகையிலே ரூ.250 வழங்கப்படுவதாக மாண்புமிகு



2000 மே 5]

அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த 250 ரூபாய்கூட பல பேர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் பேர்களில் 6,000 பேர்களுக்குத்தான் வழங்கப்பட்டு இருப்பதாகத் தகவல் தெரிகிறது. அனைவருக்கும் வழங்கச் செய்வதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதோடு, 250 ரூபாய் என்பது மிகக் குறைவான தொகையாக இருக்கிற காரணத்தால், அதை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த 250 ரூபாயே இலட்சக்கணக்கான பேர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள்; இதில் மேலும் பேசிக்கொண்டு போகிறீர்கள்; ஆயிரம், இரண்டாயிரம் ரூபாயாக ஆக்க வேண்டும் என்கிறீர்கள். அந்தக் கேள்வியை முதலில் கேளுங்கள். உதவித் தொகை கொடுக்கிறேன் என்று சொல்கிறீர்களே; ஏன் அதை எல்லோருக்கும் கொடுக்கவில்லை என்று முதலில் அதைக் கேளுங்கள்.

முற்பகல் 10-15

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. இது ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் தேக்கத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சரி, சரி. தேக்கம் இருப்பது உண்மை. அதையும் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 இலட்சம் பேர்களில் 6,000 பேர்களுக்குத்தான் கொடுக்கிறீர்கள் என்று ஒரு பெரிய பிரச்சினையைச் சொல்கிறீர்கள். அதை முழுமையாகச் சொல்லி பதில் வாங்குங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்டிருக்கக்கூடிய ஆலைகளில் பணியாற்றிய பலர் பணியிழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு 250 ரூபாய் நிவாரண நிதியாக அரசு வழங்குகிறது. இப்படி வழங்குவதற்கு சில norms, சில வரையறைகள் உள்ளன. மேற்கு வங்காளத்திலே எப்படி சில வரையறைகளை வைத்திருக்கிறார்களோ அதைப் பின்பற்றி உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. அதையே பின்பற்றி, அந்த norms அடிப்படையிலே 250 ரூபாய் வழங்கப்படுகிறது.

1-5-1999 முதல் ரூபாய் 250 வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 6,166 பேர்களுக்கு ரூ.88,76,500/- வழங்கப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 இலட்சம் பேர் இருக்கிறார்கள், மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** அதைத்தான் என்னுடைய பேச்சின் முற்பகுதியிலே, பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னேன். சில norms இருக்கின்றன. ஓராண்டு மூடப்பட்டிருக்க வேண்டும்; அதற்கு முன்பாக 5 ஆண்டுகள் இயங்கியிருக்க வேண்டும். இப்படி பல்வேறு norms இருக்கின்றன. இந்த norms-க்கு உட்பட்டால்தான் அது தரப்பட வேண்டுமென்பது மேற்கு வங்காளத்திலும் இருக்கிறது; இங்கும் இருக்கிறது. ஆகையினாலேதான் அந்த எண்ணிக்கை அதற்கு உட்பட்டு உள்ளது. நாங்கள் மட்டுமல்ல. தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் அரசு உயர்மட்ட அலுவலர்கள் அடங்கிய ஒரு Screening Committee— உட்கார்ந்து தகுதியான தொழிற்சாலைகள் எத்தனை, தகுதியான தொழிலாளர்கள் எத்தனை பேர் என்ற பட்டியலைத் தருகிறார்கள்.

(திரு. சி. ஞானசேகரன் கையை உயர்த்திக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், கையைக் கீழே போடுங்கள். You know it is the Speaker's privilege to call or not to call. Keep quiet.

வினா எண் 534, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**534—**

### தொழிற்சங்க அங்கீகாரம்

***31884*—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தொழிற்சங்க அங்கீகாரம் வழங்கும் முறையை நடைமுறைப்படுத்த அரசு பரிசீலித்து வருகிறதா?



**(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**(அ) ஆம்.**

**(ஆ)** தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வதற்கு ஏதுவாக புதிய சட்டம் ஏற்படுத்துவது குறித்து மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப மகிழ்ச்சி. பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நீண்ட காலத்திற்கு பரிசீலனையிலேயே வைத்துவிடக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட 'பரிசீலனையில் இருக்கிறது' என்றால் அதற்கு என்ன பொருள் என்று சில நாட்களுக்கு முன்னால் இந்த அவையிலே அறிவித்தார்கள். அப்படிப்பட்ட 'பரிசீலனையாக' இது இருந்து விடக்கூடாதே என்கிற அச்சத்தின் காரணமாக இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், தொழிற்சங்கங்கள் என்பது தொழிலாளர்களின் பிரதிநிதி. தொழிலாளர்களின் பிரதிநிதியாகச் செயல்படுகிறவர்கள் தொழிலாளர்களின் அங்கீகாரம் இல்லாமல் செயல்படக்கூடாது என்பதைச் சட்டபூர்வமாக நிலை நிறுத்துவதற்கான முயற்சியைப் பற்றியதுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற விஷயம். எனவே S.L.A.B-ல் சொல்லப்பட்டிருக்கிற அந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் மிக விரைவான முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Trade Union Act, 1926 என்கிற சட்டத்திலே என்ன ஒரு துரதிருஷ்டம் என்று கேட்டால் யூனியன்களை அங்கீகரிக்கிற அதிகாரம் அதிலே இல்லை. Only registration, cancellation of registration and the privileges of registered trade unions இவைதான் அவற்றிலேயுள்ள ஷரத்துக்கள். எனவே இந்தச் சட்டத்திற்கு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமா அல்லது புதிய சட்டமே கொண்டு வர வேண்டுமா என்பது ஆய்வில்

இருக்கிறது. அது Statutory Body அல்ல. Recommendatory Body, Advisory Committee— ஆனால் supreme body அது முத்தரப்பு. அந்த முத்தரப்பினுடைய கருத்துக்கள் ஏற்கப்படலாம், ஏற்கப்படாமலும் இருக்கலாம். இந்த அரசு தொழிற்சங்கங்கள், நிருவாகங்கள், experts ஆகிய எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டு ஒரு முடிவு எடுக்க இருக்கிறது. அந்த அடிப்படையில் தொழிற்சங்க உரிமை வேண்டுமென்று கொடுத்திருப்பதே திராவிட முன்னேற்றக் கழகப் பேரவைதான். எல்லோரும் பேசி ஒரு Sub-Committee அமைத்து அது ஆய்வில் இருக்கிறது. நம்முடைய சுப்பராயன் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் அதில் உறுப்பினராக இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் முறையை அரசு பரிசிலித்து வருவதை நான் மனதார வரவேற்கிறேன். கடந்த சில வருடங்களாக இதே மன்றத்திலே தோட்டத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்து வருகின்றவன் நான். ஒட்டுமொத்தமாக, தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் அதிகப்படுவதற்குக் காரணமே அங்கீகாரமற்ற, அதாவது தொழிலாளர்களுடைய ஆதரவற்ற தொழிற்சங்கங்கள்தான். அவை புற்றீசல் போல் பெருத்து விடுகின்றன. அத்தகைய தொழிற் சங்கங்களையெல்லாம், அவற்றின் நிர்வாகிகளை வைத்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபடாததன் மூலமாக, உண்மையான தொழிலாளர்களுடைய குரல் ஒலிக்காததன் காரணமாக, பல நேரங்களிலே பல பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகின்றன. எனவே தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தையிலே கலந்துகொள்வதற்கு அல்லது அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கங்களாக மாறுவதற்கு, இரகசிய வாக்கெடுப்பு முறைதான் தலைசிறந்தது என்று நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன். எனவே இந்த முறையை தமிழ்நாடு அரசு விரைந்து செயல்படுத்துவதற்கு தனிச் சட்டமோ அல்லது வேறு எந்த நடவடிக்கையோ எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Whether verification of records அல்லது secret ballot election என்பது under the consideration before the



Advisory Committee. ஆனால் அதேநேரத்தில், மத்திய அரசாங்கம், இதுகுறித்து ஒரு சட்டம் கொண்டு வருகிறது. Central Act கொண்டு வருகிறபோது, மாநில அரசாங்கமும் அப்படி ஒரு சட்டம் கொண்டு வருகிறபோது, as a student of the Constitution, I would like to say that only Central Act prevails.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சட்டம் எப்படியிருந்தாலும், மாநிலத்தில் தொழிற்சங்க அங்கீகாரத்திற்காக தனிச் சட்டம் ஒன்று கொண்டு வர வழி உண்டு; வாய்ப்பு உண்டு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனையில் இருக்கிறது என்றார்கள். தனிச் சட்டம் காலதாமதம் இல்லாமல், உரிய காலத்தில் கொண்டுவரப்படும் என்பதைப் பேரவையில் அறிவிப்பாரா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் மதுரை மாவட்டத்திலேயும், திண்டுக்கல் பகுதிகளிலேயும் தொழிற்சங்கங்களைப் பதிவு செய்வதற்காகச் சென்றபோது, வருடக் கணக்கில் தொழிற்சங்கப் பதிவிற்கான certificate forms இல்லை என்ற காரணத்தினாலே, தொழிற்சங்கப் பதிவு நடைமுறையில் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்த விஷயத்திலும் பதிவுகளுக்கு விண்ணப்பித்த தொழிற்சங்கங்களுக்கு forms இல்லை என்பதைக் காரணம் காட்டி நிராகரிப்பதைத் தடுத்து, உடனடியாக forms வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது சொல்லியிருக்கிறேன். இந்த அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கை, தொழிற்சங்க உரிமையை மதிப்பது; மறுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. Unfair Labour Practice என்று சட்டத்திலே இடம் இருக்கிறது. தொழிற்சங்க உரிமையை மறிப்பது, மறுப்பது Unfair Labour practice ஆகும். அதற்கு 6 மாத சிறைத் தண்டனை. மாண்புமிகு உறுப்பினர், சட்டபூர்வமான claim எழுப்பி அதற்கென legal remedy-யைக் காணலாம். அடுத்து இந்தச் சட்டத் திருத்தம் குறித்து இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று, இப்போது இருக்கக்கூடிய Trade Union Act-க்கு ஒரு amendment கொண்டு

வருவது. இன்னொன்று, புதிய சட்டம் கொண்டு வருவது. இதற்கிடையே மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வருகிறது. இரண்டாவது National Conference இதற்கு ஒரு தேசிய கமிஷன், லேபர் சம்பந்தமாகப் போட்டிருக்கிறார்கள். அதனுடைய Terms of Reference-லே அது இருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் பரிசீலித்து, நிச்சயமாக ஒரு நல்ல முடிவை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *535*, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**535—**

### குடியிருப்புகள்

***17293**—திரு. இரா. மகேந்திரன்:*

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீட்டு வசதிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசிடம் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி நகரம் நல்ல முறையிலே வளர்ந்து வருகின்ற நகரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. நாட்ராம்பள்ளி அருகில் திருப்பத்தூர் சர்க்கரை ஆலை இருக்கிறது. அதேபோல் தெற்குப்பட்டு சந்தன ஆலை, கடந்தகால ஆட்சியாளர்களால் மூடப்பட்டு, நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரிய முயற்சியால் இப்போது திறக்கப்பட்டு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவுக்கு இலாபம் வருகிறது. அந்த ஆலைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களும் அரசு அலுவலர்களும்—நாட்ராம்பள்ளி அருகிலே இருக்கிற கிராம மக்கள், கிராமங்களிலே அவர்களுடைய நிலங்களிலே



வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருகிறார்கள்—தற்போது, நாட்ராம்பள்ளி நகரத்திலே வந்து வசிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். எங்கள் நாட்ராம்பள்ளி அருகிலேயே 10 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, நாட்ராம்பள்ளி நகரில் வீட்டு வசதித் துறையின் மூலமாக குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி நடுத்தர வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்காக இடத்தைத் தேர்வு செய்வதற்கு வாரியம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைத்து அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தால், வீட்டு வசதித் திட்டம் நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்ல. நகர்ப்புறங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் குடியேற்றத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, *2000-2001*-ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு *15,000* வீடுகள் கட்ட, ஒரு வீட்டிற்கு ரூ.*25,000* வீதம் மொத்தம் ரூ.*37.50* கோடி கடன் வழங்கப்படும். அதன் மூலமாக, அவருடைய பகுதியிலே உள்ள மக்கள் விண்ணப்பித்தால், வீடு கட்ட கடன் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *536*, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**536—**

### வேலைவாய்ப்பு

***21301**—திரு. நா. பெரியசாமி:*

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் துறையில் எத்தனை தொழிற்சாலைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன?

(ஆ) இதன்மூலம் எத்தனை பேர் நேரடியாக வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்?

[2000 மே 5

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையின்கீழ் 31-3-1999 அன்றைய நிலவரப்படி 3,21,627 தொழிற்சாலைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

(ஆ) 29,21,643 நபர்கள் இதன்மூலம் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில் பிரிவில் எவ்வளவு ஆலைகள் இயங்கி வருகின்றன? அதிலே எவ்வளவு பணியாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்று இருக்கிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அண்மையில் ஏற்பட்டிருக்கிற தொழில் நெருக்கடி காரணமாக பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அது குறித்து இந்தத் துறை ஆய்வு செய்திருக்கிறதா? அதில் ஏதேனும் தொழிலாளர்கள் வேலையிழப்புக்கு ஆளாகியிருக்கிறார்களா என்பது குறித்த விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்மையிலே ஏற்பட்டிருக்கிற மந்த நிலை குறித்துக் கேட்கிறார்கள். இப்போது சிறுதொழில் துறையைப் பொறுத்தளவில் துறையின் சார்பாக கடன் வழங்குவது, மானியம் வழங்குவது போன்ற நடவடிக்கைகளைக் குறைவில்லாமல் தொடர்ந்து எடுத்து வருகிறோம். நலிவு அடைந்திருக்கின்ற ஆலைகள் திரும்பக் கடன் கேட்டாலும் அதை re-schedule செய்து அதைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் இருக்கக்கூடிய அத்தனை துறைகள் மற்றும் வங்கிகள் மூலமாக இந்தத் துறை பெற்று வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். உலக வர்த்தக ஒப்பந்தத்தால் சிறுதொழில்கள் நலிவடைந்திருக்கின்றன என்பதை உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் இப்போது நம்முடைய மத்திய தொழில் வர்த்தகத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தால் நிச்சயமாக



2000 மே 5]

தமிழ்நாட்டிலே, இந்தியாவிலே இருக்கக்கூடிய சிறு தொழில்களுக்கு பாதிப்பு வராது, பாதிப்பு வரவிடமாட்டோம், காரணம் இறக்குமதியாகின்ற பொருள்களுக்குச் சமமான வரிகள் விதிக்கப்படும் என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், நீங்கள் தான் ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்கிறீர்கள். கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்கள் W.T.O. Agreement மூலம் தமிழ்நாட்டின் சிறுதொழில்கள் பாதிக்கப்படாது என்று அறிவித்திருப்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி அறிவித்திருப்பதே சிறுதொழில்கள் பாதிக்கப்படும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விஷயமாக நான் புரிந்துகொள்கிறேன். நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவென்றால் இந்த மாநிலத்தில் 85 சதவீதத்திற்கு மேற்பட்ட, வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்களைக் காப்பாற்றுவதற்காக மாநில அரசு தன்னுடைய அரசு நிறுவனங்கள் 100 சதவீதத்தையும் சிறுதொழில்கள், குறுந்தொழில்களிடமிருந்துதான் purchase செய்ய வேண்டுமென்கிற முறையில் உத்தரவிட்டால்தான் சிறுதொழில்களை, குறுந்தொழில்களைக் காப்பாற்ற முடியும். இல்லையென்றால் நாடு நெருக்கடிக்குள்ளாகும் என்பதால் அத்தகைய உத்தரவையிட அரசு தன் சிந்தனையை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய அரசாணை 75-ஐக் குறிப்பிட்டு அதிலே நூற்றுக்கு நூறு சதவீதம் நம்முடைய மாநிலத்தினுடைய சிறுதொழில் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்றை நான் உதாரணத்திற்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் சிறுதொழிலில் இருக்கக்கூடிய உற்பத்தியாளர்கள் நம்முடைய மின் துறைக்காக வழங்கிய wire கம்பி சாதனங்கள் தயாரித்து அளிப்பதில் 'கார்டல்' முறையில் ஒருவருக்கொருவர் கூட்டணி அமைத்துக்கொண்டு குறிப்பிட்ட விலைக்கு அதிகமான விலையை அரசு செலுத்த வேண்டிய காரணத்தால், பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்

அளவுக்கு மின் இலாகாவிற்கு பெருத்த நட்டம் ஏற்பட்டது என்பதை நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து வைத்தார். அதுபோன்று இன்னும் பல நிகழ்வுகள் நடந்துள்ளன. எனவே போக்குவரத்துத் துறையில், இன்னும் இருக்கக்கூடிய துறைகளில் ஒரு healthy competition— சுகாதாரமான போட்டியை உருவாக்க வேண்டுமென்றும் அதனால் அரசுக்கு பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இலாபம் வரும். அதிலே 50 சதவீதத்தை உறுதியாக தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறுதொழில் செய்யக்கூடிய உற்பத்தியாளர்களிடமிருந்து நாம் வாங்கிக்கொள்வது என்றும் மீதம் இருப்பதை குறைந்த விலையிலே யார் விலைப்புள்ளி கோருகிறார்களோ அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்வது என்றும் அந்த விலைக்கே match செய்து நம்முடைய சிறுதொழில்கள் செய்கின்றவர்களிடமிருந்து வாங்குவது என்றும் அமைச்சரவை முடிவெடுத்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து பற்றி முதலமைச்சர் அவர்கள் தான் வருகின்ற காலத்தில் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்க வேண்டும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் இப்போதுள்ள அளவிலே நிச்சயமாக அரசுக்கு நிதியைப் பொறுத்தளவில் பெருத்த இலாபம் கிடைக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10.30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 537, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்

**537—**

**கால்நடை மருத்துவமனை**

***27995 திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கால்நடைப் பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைக் கிராமத்தில் நிரந்தர கால்நடை மருத்துவமனை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பாரமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைக் கிராமம், திண்டுக்கல் நகரத்திலேயிருந்து ஏறத்தாழ 20 அல்லது 25 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அங்கேயிருந்து கீழே இறங்கி வந்து, கால்நடைகளுக்கு மருத்துவம் பார்ப்பது, சில வசதிகளைச் செய்வது என்பது இயலாத நிலையில் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் குதிரையையும், பால் மாட்டையும் மட்டுமே நம்பி இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிற காரணத்தினால், வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறையோ ஒரு மருத்துவர் வந்து வைத்தியம் செய்வது என்பது போதுமானதாக இல்லை. ஆகவே நிரந்தரமாக அங்கே மருந்தகம் அல்லது மருத்துவமனையை ஏற்படுத்துவதற்கு, அவசர அவசியம் கருதி, மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் சிறுமலை மலைக் கிராமத்திற்கு சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் சிறுமலை பழையூர் என்ற இடத்தில் கால்நடைக் கிளை நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் சிறுமலைப்புதூர் என்ற இடத்தில் பார்வைக் கிளை நிலையமும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும் சிறுமலை மலைக் கிராமத்தில் குறைந்த அளவிலேதான் கால்நடைகள் இருக்கின்றன. சிறுமலை மலைக் கிராமத்திற்கு திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி ஒன்றியத்தில் உள்ள விராலிப்பட்டி கால்நடைக் கிளை

நிலைய ஆய்வாளர், வாரம் 2 முறை சென்று, கால்நடைகளுக்குச் சிகிச்சையளித்து வருகிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மிக முக்கியமாக அந்த மலைக்குத் தேவை எனக் கருதினால்—திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சில கால்நடைக் கிளை நிலையங்களில் கால்நடைகள் சிகிச்சைக்கு வராமல் செயல்படாத நிலையில் இருப்பதாக ஓர் அறிக்கை இருக்கிறது; எனவே, அத்தகைய கால்நடைக் கிளை நிலையங்களில் ஒன்றை மாற்றி அந்த மலைக்கு வழங்கலாம். உறுப்பினர் அந்த மண்டல இணை இயக்குநர் மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துருவை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 538, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**538—**

### இலவச தையல் இயந்திரம்

***29433—திரு. உ. திசைவீரன்:***

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஏழை மகளிருக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் இதுவரை நிறுத்தப்படவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இலவசத் தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம் 1998-99 ஆம் ஆண்டு முதல் கல்வி குடும்பத் திட்டமாக மாற்றப்பட்டு, தையல் இயந்திரங்கள் அதன்மூலம் வழங்கப்பட்டு வந்தன. 1999-2000,



ஆண்டு முதல் தனியாக பழைய முறைப்படி வழங்க அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 1999-2000 ஆண்டில், மாநிலத்தில் எத்தனை மகளிருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன? குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலே எத்தனை தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான நிதியாண்டில் தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குவதற்கு ரூ.13.5 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே குறிப்பாக எவ்வளவு வழங்கப்பட்டது என்று கேட்டார். அதற்குரிய விவரம் என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 539, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**539—**

### சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்துதல்

***26434—திரு. ஐ. கணேசன்:***

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் உள்ள சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் துறையினைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் எந்தவொரு இடத்தையும் குறிப்பிட்டு சுற்றுலாத் தலமாக அறிவிப்பது கிடையாது. மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில், சுற்றுலாப் பயணிகளின்

[2000 மே 5

வருகையினைக் கருத்தில்கொண்டும், நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டும் அந்தந்த இடங்களின் தேவைக்கேற்ப அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்கு, குடிநீர், கழிப்பறை, குளியலறை, தங்கும் வசதி போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. எனவே கொல்லி மலையில் உள்ள சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்துவது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வினா எண் *540*, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு **மீன் வளத்** *துறை அமைச்சர்.*

**540—**

**மண்ணெண்ணெய் வழங்குதல்**

***29455*—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவுட்போர்டு எஞ்ஜின் பொருத்திய மீனவர் படகுகளுக்குக் கேரளாவில் மாதம் 500 லிட்டர் மண்ணெண்ணெய் மானிய அளவில் வழங்கப்படுவது போன்று, தமிழகத்திலும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவுட்போர்டு எஞ்ஜின் பொருத்திய மீனவர் படகுகளுக்கு கேரளாவில் மாதம் 500 லிட்டர் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படுவது போன்ற திட்டம் தமிழ்நாட்டில் இல்லை. எனினும் உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்கள் பிடிக்கும் மண்ணெண்ணெய்/டீசலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 0.50 காசு வீதம் ஒரு மீன்பிடிக் கலனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.125-க்கு மிகாமல் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,500 மானியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த



2000 மே 5]

ஆணையின்படி, மேற்குறிப்பிட்ட மீன்பிடிக் கலன்கள் ஒவ்வொரு மாதமும் பிடிக்கப்படும் டீசல்/மண்ணெண்ணெய்க்கு ஒவ்வொரு மாதமும் 250 லிட்டர் வரையில் சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு மானியம் வழங்கப்படும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மீனவர்களுக்கான எரிபொருளுக்கு மானியம் வழங்க, தமிழகத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? அதில் எவ்வளவு செலவாகியிருக்கிறது? மீனவர்கள் டீசலை அந்தந்த டீசல் Bunk-ல் பெற்று வருகின்றார்கள். மண்ணெண்ணெய் பெறுவதற்கு அவர்களுக்கு மிகச் சிரமமாக இருக்கின்றது. எனவே மண்ணெண்ணெய்கூட இதுபோன்று எளிய முறையில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு மட்டும் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் வெளிப்பொருத்தும், உட்பொருத்தும் இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மானியம் வழங்கப்படுவது குறித்து 1998 ஆம் ஆண்டு அரசாணை பெறப்பட்டு அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் வாயிலாக நமது தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 22 மீனவர்கள் மட்டுமே பயன் அடைந்து இருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில், 72 மீனவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் சரியான முறையில், எளிதான முறையில் செயல்பட அரசு கூடிய விரைவில் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மதிவாணன்.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறையின் இந்த ஆண்டு கொள்கை விளக்கப் புத்தகத்திலே, மத்திய மாநில அரசின் சார்பில் டீசல் மானியம் ரூ.99,64,000 வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த

விசைப் படகுகளில், எத்தனை படகுகளுக்கு டீசல் மானியம் வழங்கப்பட்டுள்ளது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான டீசல் மானியத்தில் பயன்பெற்ற சென்னையைச் சேர்ந்த பயனீட்டாளர்கள் 184 பேர். இதற்காக அளிக்கப்பட்ட தொகை ரூ.18.93 இலட்சம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு டீசல் விலையையும், மண்ணெண்ணெய் விலையையும் உயர்த்தி விட்டது. ஏழை மீனவ மக்கள் மீன் பிடிக்கச் செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். கேரளாவைப் போன்று கொடுக்கவில்லையென்றால்கூட தற்போது மத்திய அரசு உயர்த்தி இருக்கின்ற விலையையாவது மாநில அரசு ஏற்றுக்கொண்டு ஒரு லிட்டருக்கு 0.50 பைசா மானியமாகக் கொடுப்பதை ரூ.2.50 பைசா என்று ஆக்கித் தருவீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முதலமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும். உங்கள் கேள்வி record ஆகும். (குறுக்கீடு) அவர்கள் எப்படிச் சொல்வார்கள்?

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இராஜபாளையம் சுப்புராஜ் காட்டன் மில் தொழிலாளர்கள்.....

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூரில், ஆத்துவல்லி கிராமத்தைச் சேர்ந்த எங்கள்......



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாசுதேவநல்லூரைப் பற்றி, ஓர் உறுப்பினர் இல்லை, பல உறுப்பினர்கள் கேட்டார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி கேட்டார். அந்தத் தொகுதி M.L.A. கேட்டார். முதலமைச்சர் ஊரில் இல்லை என்பது தெரியும். நீங்கள் record-ல் பதிவதற்காகப் பேசுகிறீர்கள். உங்களுக்கும் தெரியும் முதலமைச்சர் ஊரில் இல்லையென்று. நீங்கள் record-ல் பதிவு செய்தால், நான் ஒரு வேலை செய்வேன். வாசுதேவநல்லூர் பிரச்சினையை எடுக்கும்போது உங்களைப் பேச அழைக்க மாட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன இல்லை என்று காரணம் சொல்லுங்கள், உங்களுக்குத் தெரியும் முதலமைச்சர் ஊரில் இல்லை என்று. பின் எதற்காக அப்படிக் கேட்கிறீர்கள் என்றேன். வாசுதேவநல்லூர் தொகுதி M.L.A. என்னிடம் கேட்டார். டாக்டர் கிருஷ்ணசாமி கேட்டார். நான் பதில் வந்தவுடனே பேசுவேன் என்று முதலமைச்சர் உறுதி கொடுத்துவிட்டார். நீங்கள் தீர்மானம் கொடுத்திருந்தால் அது உங்கள் கட்சியா, இல்லையா எனக்குத் தெரியாது. நீங்கள் கொடுத்திருந்தால் உங்களைப் பேசவிடுகிறேன். இப்போது முதலமைச்சர் ஊரில் இல்லாதபோது பேசுவது மாலையில் பேப்பரில் வரவேண்டும் என்பதற்கா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் இல்லாமலேயே சத்தமாகப் பேசுகிறீர்கள். பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பதால் எனக்குப் பொறுப்பு. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று சொல்கிறேன், உங்களுக்கு. நான் உங்களைத் தடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. வேறு ஒரு தீர்மானம் கொடுத்தீர்கள். அதை எடுத்திருந்தால் பெரிய ஆபத்து வந்திருக்கும் என்று உங்களுக்கே இன்றைக்குக் காலையில் சொன்னேன். அதனாலே முதலமைச்சர் வந்தவுடன் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நான் சொல்லியாயிற்று. அப்புறம் பேசிக்கொண்டே இருக்கக்கூடாது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், அமைச்சர் எடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்ட பின்னர்தான் அவையில் எழுப்ப வேண்டுமே தவிர, நான் பொறுப்பாக இருந்தால்கூட என்னுடைய இலாகாவாக இருந்தால்கூட நான் எடுத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளாமலே எழுப்புவது என்பது முறை ஆகாது. முதலமைச்சர் அவர்கள், அந்த விவரம் தெரிந்து சொல்வதற்கு வாய்ப்பு இருந்தாலும் அவர் வந்துதான் தெரிவிக்க முடியும். ஆகவே இங்கே எழுப்புவதே சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் எடுத்துக்கொள்ளப் போகிறேன் என்று சொல்லிவிட்டேன், உங்களிடம் குறிப்பிட்ட தொகுதி M.L.A. கேட்டார். விவரத்தைக் கேட்டு அனுப்பியிருக்கிறேன், வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று முதலமைச்சர் அந்த M.L.A.. விடமே தெரிவித்துள்ளார்.

*முற்பகல் 10-40*

**திரு. பி. ஆர். சுந்தரம்:** அந்தத் தொகுதியின் M.L.A. கொடுத்தது எனக்குத் தெரியாதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களிடம் சொன்னேன் அல்லவா? அந்தத் தொகுதி உறுப்பினர் கொடுத்திருக்கிறார், எடுக்கப்போகிறார்கள் என்று என்னுடைய அறையிலே சொன்னேன் அல்லவா? பிறகு அதற்கு மேல் என்ன? பேரவைத் தலைவருக்கு மேல் முதலமைச்சர் நேரடியாக வந்து சொல்ல வேண்டுமா? உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு.

### (அ) இராஜபாளையம், சுப்புராஜ் காட்டன் மில் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இராஜபாளையம் சுப்புராஜ் காட்டன் மில்ஸ் தொழிலாளர்கள் 7-3-2000 முதல் தொடர் போராட்டம் நடத்தி வருவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் இரா. தாமரைக்கனி அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள், சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம், சுப்புராஜ் காட்டன் மில்லிலே சுமார் 809 தொழிலாளர்கள் கடந்த இரண்டு மாதங்களாக பட்டினிப்



போராட்டம் நடத்தி வருகிறார்கள். மதுரையில் உள்ள D.C.L., விருதுநகரில் உள்ள தொழிலாளர் அலுவலர் ஆகியோர் எல்லாம் கூப்பிட்டுப் பேசினார்கள். அதே மாதிரி இராஜபாளையம் தாசில்தார் மற்றும் ரெவின்யூ அதிகாரிகள் கூப்பிட்டுப் பேசினார்கள். போலீஸ் அதிகாரிகள் பல தடவை கூப்பிட்டுப் பேசினார்கள். ஆனாலும் அந்தத் தொழிலாளர் பிரச்சினை முடியவில்லை.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், இதை இராஜபாளையம் பகுதியிலுள்ள தொழிற்சாலை என்று நினைக்காமல் நேரடியாகக் கூப்பிட்டுப் பேச வேண்டும், அந்த நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் கூப்பிட்டுப் பேசினால்தான் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அதிலே 6 அம்சக் கோரிக்கைகளைச் சொல்லுகிறார்கள். சங்கத் தலைவர் மற்றும் நிர்வாகிகள் 22 பேரை தற்காலிகமாக நீக்கியிருக்கிறார்கள், அவர்களை உடனே வேலைக்கு அழைக்க வேண்டும்; நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நீதிபதி வரதன் அவார்ட் பிரகாரம் சம்பளம் வழங்க வேண்டும்; 480 நாட்களுக்கு மேல் வேலை செய்த தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரம் ஆக்க வேண்டும்; தொழிற்சாலைச் சட்டங்களை முழுமையாக அமல்படுத்த வேண்டும்; 13 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் 400 தொழிலாளர்களுக்கு time card வழங்க வேண்டும்; கதவடைப்பை ரத்து செய்து அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்போது அங்கே 100 தொழிலாளர்கள் வேலைக்குப் போகிறார்கள். 50 தொழிலாளர்கள் அங்கே வேலை பார்ப்பவர்கள், மீதி தொழிலாளர்களை திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள மில்களிலிருந்து தொழிலாளர் சட்டத்திற்கு விரோதமாகக் கூப்பிட்டு வந்து வேலை பார்க்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், அந்தப் பகுதியிலே செல்வாக்கு மிகுந்த ஆள், அந்தப் பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சுருக்கமாகப் பேச வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு, தேவையில்லாமல் அந்தப் பகுதி M.L.A. செல்வாக்கான ஆள் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** முடித்துவிடுகிறேன். நான் அவரைச் சொல்லவில்லை, M.L.A.வைச் சொல்லவில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள சிலரின் சப்போர்ட் இருக்கிற காரணத்தால் அங்கே

[திரு. இரா. தாமரைக்கனி] [2000 மே 5

இருக்கிற அதிகாரிகள் செயல்படாமல் இருக்கிறார்கள். பயப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலன் கருதி, நேரடியாக சென்னையிலே வைத்து பேச்சுவார்த்தை நடத்தினால், இந்தப் பிரச்சினை முடியும். தொழிலாளர்கள் பட்டினிப் போராட்டம் நடத்துகிறார்கள். அவ்வாறு அழைத்துப் பேசினால் அவர்களது வாழ்வு மலரும் என்று கூறிக்கொண்டு, அதில் விஷேச கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் சுப்புராஜ் காட்டன் மில்ஸ் பொறுத்தமட்டில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 525 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப்போல சில கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகள் குறித்து எங்களுடைய துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். அதில் மிக முக்கியமான ஒன்று, இராஜபாளையம் சுப்புராஜ் காட்டன் மில்ஸ் யூனியனைச் சேர்ந்த 13 பேரை suspend செய்துவிட்டார்கள் என்ற ஒரு கோரிக்கைதான் பிரதானமான கோரிக்கையாக வைக்கப்பெற்றது. அதையொட்டி அவர்கள் strike செய்தார்கள். 4ஆம் தேதி, நேற்று கூட பேச்சுவார்த்தை நடைபெற்றது. வருகின்ற 8ஆம் தேதி பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. ஒரு மகிழ்ச்சிகரமான தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த 13 பேர்களையும் வேலைக்கு எடுத்துக்கொள்கிறோம் என்ற நிலைக்கு அவர்கள் வந்து. இப்போது அந்த 13 பேரும், நிர்வாகமும் பேசி தலைக்கு 30 ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குரிய Statutory Benefit எல்லாம் பெற்றுக்கொண்டு அவர்கள் ஆலையைவிட்டு வெளியே செல்வதாக settle செய்யப்பட்டிருக்கிறது அத்தோடு இன்னும் 17 பேர் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். Financial commitment காரணமாக, சிக்கலின் காரணமாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பிரச்சினை இருக்கிறது. Strike திரும்பப் பெறப்பட்டுள்ளது. 18-4-2000 முதல் இந்த ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறது. வேறு பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் பேசப்படுகிறது. இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு கட்டமாக Magistrate Court, Sessions



[திரு. அ. இரகுமான்கான்]
2000 மே 5]

Court, High Court என்று ஓர் அமைப்பு முறையை வைத்திருக்கிறோம்; சட்டப்படி. அந்த அமைப்பு முறையைத் தாண்டி Failure Report வருகின்ற நிலை அல்லது முக்கியத்துவம் வாய்ந்த நிலை ஏற்படுகிறபோது நிச்சயமாகக் கலந்து பேசுவோம். பேசி வருகிறோம்.

*முற்பகல் 10-45*

### (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நீரோடிப் பகுதியில் மீனவர்களுக்கான தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கன்னியாகுமரி மாவட்டம், நீரோடிப் பகுதியில் மீன் வளத் துறையினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இருவரில் ஒருவர் சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கொல்லங்கோடு கிராமத்தில் கடலோரப் பகுதியான நீரோடியில் 1992 ஆம் வருடம் கட்டிக் கொடுக்கப்பட்ட 85 வீடுகளில், 5 வீடுகள் நீங்கலாக 80 வீடுகளும் பழுதடைந்ததோடு ஒரு வீடு முற்றிலுமாக இடிந்து, கடந்த மாதம் பெய்த இரண்டு மழையின் காரணமாக தற்போது சீர்குலைந்து போயுள்ளது. எந்த நேரத்திலேயும் மற்ற வீடுகளும் இடிந்து போகக்கூடிய தருவாயில் உள்ளன. எனவே அதில் குடியிருக்க இயலாத ஒரு சூழ்நிலை அங்கே உள்ளது. எனவே அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் என்ற முறையில், புதிய குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தாலன்றி அந்த மீனவ மக்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதன் மூலமாகத்தான், அந்த நீரோடி கிராமத்து மீனவ மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அந்த வகையிலே அரசு உரிய கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதுபோன்று அதனுடைய காலக்கெடு, பழைய ஒப்பந்தக்காரர்கள் எந்த அளவிற்குச் செய்திருக்கிறார்கள் என்பதெல்லாம் தெரியவில்லை. இருந்தாலும், அது என்ன என்று விசாரித்து இவ்வளவு மோசமான நிலையில் கட்டிக்

கொடுத்த அந்த கான்ட்ராக்டர்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மூஞ்சிறை ஒன்றியத்தின் மூலமாக 1989 90 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட 85 வீடுகளும் 27-3-1992 அன்று பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டன. அந்த வீடுகள இப்போது பழுதடைந்துள்ள நிலையில் உள்ளன. 1996-97 ஆம் ஆண்டு 2,000 வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தில் இந்த அரசால் 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ஆரோக்கியபுரத்தில் 46 வீடுகளும், சின்னமுட்டத்தில் 40 வீடுகளும், இராசாக்கமங்கலத்தில் 34 வீடுகளும், இணையத்தில் 70 வீடுகளும், பெரியவிளையில் 25 வீடுகளும், மேலக்குறும்பனையில் 41 வீடுகளும், மார்த்தாண்டத்தில் 4 வீடுகளும், ஆக மொத்தம் 260 வீடுகள் பழுதுபார்க்கப்பட்டிருக்கின்றன. கேசவன்புத்தன துறையில் 8 வீடுகளும், புத்தன் துறையில் 8 வீடுகளும், ஆக மொத்தம் 16 வீடுகளும் இன்னும் பழுதுபார்க்கப்பட இருக்கின்றன. எனவே 276 வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தில் பழுதுபார்க்க எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் இந்த வீடுகளெல்லாம் கட்டப்பட்டுள்ளன.

தற்போது வீடுகளெல்லாம் மீனவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அந்த வீடுகளை அவர்களே பழுதுபார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், இப்போது பழுது பார்க்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்தத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தந்தால், நிச்சயமாக மீன் வளத் துறையின் பொறியாளர் பிரிவின் மூலமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அந்த வீடுகளெல்லாம் பழுதுபார்த்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## 4. கவன ஈர்ப்பு

### (அ) ஒசூர் தாலுகா, பாகலூர் ஏசியன் பேரிங்ஸ் ஆலை பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒசூர் தாலுகா, பாகலூர் ஏசியன் பேரிங்ஸ் ஆலையை மீண்டும் திறக்க வேண்டிய அவசியம்' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

தருமபுரி மாவட்டம், ஒசூர் தாலுகா, பெலத்தூரில் உள்ள ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் என்ற பால்பேரிங் (Ball bearings) உற்பத்தி செய்யப்படும் நிறுவனத்தில் சுமார் 560 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்நிறுவனத்தில் தருமபுரி மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், ஏசியன் பேரிங்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், தருமபுரி மாவட்ட அண்ணா பொதுத் தொழிலாளர் சங்கம் மற்றும் ஏசியன் பேரிங்ஸ் பாட்டாளித் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் இயங்கி வருகின்றன.

நிறுவனத்தில் அமலில் இருந்துவந்த ஊதிய ஒப்பந்தம் 8-10-1999ல் முடிவடைந்ததைத் தொடர்ந்து நிர்வாகத்திற்கு எதிராக ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் எழுப்பின. நேரடிப் பேச்சுவார்த்தையில் ஒரு சுமுக உடன்பாடு ஏற்படாத நிலையில் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 22 (1)-ன்கீழ் வேலைநிறுத்த அறிவிப்பு கொடுத்து 14-2-2000 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் இப்பிரச்சினை தொடர்பாக சேலம்,

[திரு. அ. இரகுமான்கான்] [2000 மே 5

தொழிலாளர் துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஒரு சுமுக உடன்பாடு ஏற்படாத நிலையில் தொழிலாளர் ஆணையர் பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளார். 6-3-2000, 10-3-2000 ஆகிய தேதிகளில் தொழிலாளர் ஆணையர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்பேச்சுவார்த்தையின்போது ரூ.800/ ஊதிய உயர்வாகத் தர நிர்வாகத் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தொழிற்சங்கத் தரப்பில் தொகை ஏற்காமல் அதிகப்படியான ஊதிய உயர்வு கோரினர். பேச்சுவார்த்தையின்போது வேலைநிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளை கைவிட்டு பிரச்சினையை சுமுகமாக முடிக்க ஒத்துழைக்குமாறு தொழிற்சங்கத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில், 18-3-2000 அன்று ஒரு சில தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஆலை நுழைவாயில் முன்பு அமர்ந்து உண்ணாவிரதம் மற்றும் மறியலில் ஈடுபட்டதாகவும், இதனால் ஆலைக்குள் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சென்று வருவதற்கும், பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் இயலாத நிலை ஏற்பட்டதாகவும், நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சேலம் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு ஏற்படாத நிலையில், இப்பிரச்சினை தொடர்பாக, தற்போது தொழிலாளர் ஆணையர் பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளார். 20-3-2000 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, நேரடி நடவடிக்கை எதிலும் ஈடுபடாமல் பிரச்சினையில் சுமுக உடன்பாடு காண ஒத்துழைக்குமாறு தொழிற்சங்கங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் மூடப்படவில்லை. தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நிலைமை தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, I read the answer given by the Honourable Minister for Labour. The Asian Bearings, a Joint Sector unit at Belathur consisting of about 560 workers went on strike from 14-2-2000 and since 3 months it has not been settled. It is a Public Sector Unit. 560 workers and their families are sitting before the Mill and the Joint Commissioner of....



2000 மே 5]

**HON. SPEAKER:** I am not giving you time to give a lecture. You are allowed to ask only two questions. So, you please ask your question.

**THIRU B. VENKATASAMY:** I request the Hon. Minister for Labour to settle such matters. Actually Premier Mills is also under strike. Lot of mills are under strike in that area. So, I request the Hon. Minister to intervene and see that such strikes do not take place. That is my intention. Last year also Hon. Minister for Labour came there and settled about three or four.... (The gong was sounded)

முற்பகல் 10-50

**HON. SPEAKER:** I have no objection, if you ask two questions.

**THIRU B. VENKATASAMY:** Yes Sir. I am asking in the question form. May I know from the Hon. Minister for Labour whether he would come and sit there. Lot of Industries are in the district. So, may I request the Hon. Minister to come and sit there for one or two days and settle the disputes like this, Sir?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் பகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டபோதெல்லாம், இந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் அங்கு சென்று, அதிகாரிகளுடனும், நிர்வாகத்துடனும் பேசி பல ஆலைகளைத் திறக்க முயற்சிகள் எடுத்து வந்திருக்கிறோம். இப்போதும் சேலம் D.C.L. முன்னாலே இந்தப் பிரச்சினை பேசப்பட்டு, ஒரு சரியான முடிவிற்கு வராத காரணத்தினாலே, Failure Report-ஐ அரசுக்கு அனுப்பினார்கள். ஆனாலும் அது அப்படி இருக்கக் கூடாது என்ற காரணத்தினாலே, நிர்வாகத்தை அழைத்து பழையபடி பேசி, நிர்வாகமும் Counter demand கொடுத்திருக்கிறது. ஆக தொழிலாளிகள் தரப்பிலும், நிர்வாகத் தரப்பிலும் கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து வருகிற 8ஆம் தேதி பேசப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஆ) பாகப் பிரிவினையாகும் சொத்துக்களுக்கான முத்திரைத் தீர்வையைக் குறைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன் கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு வி. கே. லட்சுமணன்.

***திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பச் சொத்துக்களை பாகப் பிரிவினை செய்து கொள்ளும்போது, வாங்க வேண்டிய முத்திரைத்தாள் குறித்து கர்நாடக அரசு புதியதாக சட்டமியற்றியிருப்பதைப்போல, தமிழக அரசும் சட்டமியற்ற வேண்டியதன் அவசியம் குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

கர்நாடக மாநிலத்தில் முழுத் தீர்வை விதிப்பு செலுத்தத்தக்கதும் வருவாய் உடைமை உரிமை நிலவரி ஏற்பாடு (Revenue Settlement) செய்யப்பட்டதுமான ரயத்துவாரி நிலங்கள் சம்பந்தப்பட்ட அசையாச் சொத்துக்கள் குறித்த ஆவணங்கள்மீது, பிரிவினை செய்யப்பட்ட ஒவ்வொரு பாகத்தின்மீதும், அந்த அசையாச் சொத்து நகர்ப்புறங்களிலோ, மாநகராட்சி எல்லைக்குட்பட்டோ அமைந்திருந்தால் ரூ. 1,000 வீதமும் மற்ற இடங்களில் உள்ள சொத்தாக இருந்தால், ஒவ்வொரு பிரிவினை செய்யப்பட்ட பாகத்திற்கும் ரூ. 500 வீதமும் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. மேலும் விவசாயச் சொத்தாக இருப்பின் ஒவ்வொரு பிரிவினை செய்யப்பட்ட பாகத்தின்மீதும் ரூ. 250 வீதமும், அசையும் சொத்து அல்லது பிரிவினை செய்யப்பட்ட தொகைக்கு ரூ. 200 வீதமும் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. மேற்படி மூவகைகளைச் சேர்ந்த சொத்து பிரிவினை செய்யப்படும்போது, எந்த வகைச் சொத்தின்மீது அதிகமான தீர்வை விதிக்கப்பட வேண்டுமோ, அந்த



அளவு முத்திரைத் தீர்வையை ஒவ்வொரு பிரிவினை செய்யப்பட்ட சொத்திற்கும் வசூலிக்கும் வகையில் கர்நாடக மாநிலத்தில் சட்டமியற்றப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (1899 ஆம் ஆண்டு மையச் சட்டம் II) அட்டவணை-I-ல் பிரிவுக் கூறு 45-ன்படி, பிரிவினை செய்யப்பட்ட பங்கினுடைய அல்லது பங்குகளினுடைய மதிப்பின்மீது 4% முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வந்தது. குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே செய்துகொள்ளப்படுகின்ற பாகப் பிரிவினை ஆவணங்களுக்கு ஒரு சலுகையை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாணை (நிலை) எண் 354, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 13-8-1997 ல் பிரிவினை செய்யப்பட்ட பங்கினுடைய அல்லது பங்குகளினுடைய மதிப்பின்மீது 4%-லிருந்து 2% ஆக முத்திரைத் தீர்வையைக் குறைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் விவசாய நிலங்கள் தொடர்பான பாக ஆவணங்களில், முத்திரைத் தீர்வை விதித்திட, சொத்தின் மதிப்பினை வழிகாட்டி மதிப்பின்படி கணக்கிடாமல், விவசாய நிலத்திற்கு விதிக்கப்படும் தீர்வையில் (land revenue) 25 மடங்கு அளவுக்கு முத்திரைத் தீர்வை கணக்கிடப்படுகிறது. இது விவசாய நிலங்களுக்கு அளிக்கப்படும் பெரிய சலுகையாகும்.

மேற்கூறிய சூழ்நிலையில், பாகப் பிரிவினை ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வை விகிதம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில், இது சம்பந்தமாக, கர்நாடக மாநிலத்தில் பின்பற்றப்படுகின்ற நடைமுறையைப்போல இம்மாநிலத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டி, சட்டமியற்றும் சூழல் எழவில்லை.

***திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். ஒரு குடும்பத்திற்குள்ளே பாகப் பிரிவினை செய்து கொள்கின்றபோது அந்தச் சொத்தை குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் தானமாகவும், செய்துகொள்ளலாம், செட்டில்மெண்டாகவும் செய்துகொள்ளலாம். விவசாய பூமியை பாகப் பிரிவினை செய்துகொள்கின்றபோது தீர்வையைப் போல 25 மடங்கு என்று கணக்கிட்டு, அந்தத் தொகைக்கு 4 சதவிகிதம் Stamp duty வசூல் செய்யப்படுகிறது.

இது நீண்ட நாட்களுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டம். இப்போது விவசாயக் குடும்பத்தில் பண்ணை வீடு இருக்கும் என்று சொன்னால், அந்தப் பண்ணை வீட்டுக்கு வழிகாட்டி மதிப்பீட்டின்படி Stamp duty வசூலிக்க வேண்டிய ஒரு நிலை இருப்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அப்படி இருக்கின்றபோது, அந்தப் பத்திரமானது மீண்டும் அரசாங்கத்திற்குச் சென்று, திரும்பி வர ஏறக்குறைய 6 மாத காலமாகிறது. அதுமட்டுமல்லாமல், கர்நாடக மாநிலத்திலே தானம், செட்டில்மெண்ட் போன்றவைகளுக்கெல்லாம் சொத்து மதிப்பு எவ்வளவு இருந்தாலும், அதற்கு முத்திரைத் தீர்வை 1000 ரூபாயாகவும், பதிவுக் கட்டணம் 500 ரூபாயாகவும் இருக்கிறது. அதைப்போலத்தான் விடுதலைக்கும். இதில் முக்கியமான அம்சம் என்ன என்று சொன்னால், சக உரிமையாளருக்கு ஒரு விடுதலைப் பத்திரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், நாம் இப்போது 13 சதவிகிதம் வசூல் செய்கிறோம். அதுமட்டுமல்லாமல், பதிவுக் கட்டணமாக 1 சதவிகிதம் வசூலிக்கிறோம். ஆனால் கர்நாடக மாநிலத்திலே, சக உரிமையாளர்களுக்கு விடுதலை கொடுக்கின்றபோது, அதன் மதிப்பு எவ்வளவு இருந்தாலும், அதற்குக்கூட வெறும் 1000 ரூபாய்க்கு பத்திரம் வாங்கினால் போதும், 500 ரூபாய் பதிவுக் கட்டணம் செலுத்தினால் போதும். நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் தற்போது கார்களின் விலை 3 இலட்சத்திலேயிருந்து, 8 இலட்சம் வரை இருக்கிறது. ஒரு 'லேன்சர்' கார் வாங்க வேண்டுமென்று சொன்னால் 8 இலட்சம் ரூபாய் வேண்டும். ஆனால், 8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காருக்கு, பதிவுக் கட்டணம், Registration fees வெறும் 100 ரூபாய்தான். ஆனால் விவசாய பூமியை வாங்க வேண்டுமென்று சொன்னால், 13 சதவிகிதம் நாம் இப்போது பதிவுக் கட்டணம் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தக் கணக்கிலே பார்த்தோமென்று சொன்னால், ஒரு 'லேன்சர்' காருக்கு 1,40,000 ரூபாய் வெறும் பதிவுக் கட்டணமாக மட்டும் கொடுக்க வேண்டும். ஆனால் வெறும் 100 ரூபாய் மட்டும்தான் நாம் கொடுக்கிறோம். அதற்காக ஏற்ற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதிலுள்ள வேறுபாட்டைச் சொல்கிறேன். ஆக, விவசாய பூமியாக இருக்கின்றபோதுகூட—





முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்களுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும். நீங்கள் நல்ல விளக்கம் சொல்கிறீர்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் கேள்வியாகத்தான் கேட்க வேண்டும். அதுதான் விதி 55.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அதுதான்; அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகப் பிரிவினை, பாகப் பிரிவினை விடுதலை ஏற்பாடு, செட்டில்மெண்ட் ஆகிய மூன்றிலுமே நான்கு சதவிகிதம் தமிழ்நாட்டிலே இருந்தது. அதிலே, கடந்த ஆண்டு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், இங்கே சென்னை மாநகரத்திலே பாரம்பரியமான குடும்பச் சொத்துக்களில் இரண்டு தலைமுறை, மூன்று தலைமுறை இருக்கின்றவர்கள், பிரிக்கப்படாமல் இருக்கின்ற சொத்துக்களைப் பிரிப்பதற்குக்கூட—அதைப் பதிவு செய்ய வேண்டுமென்றால், 4 சதவிகிதம் என்பது மிகக் கூடுதலாக இருக்கிறது, ஆகவே, அவர்களுக்கு சலுகை தர வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடு—அதிலே குறிப்பாகச் சொல்லப்போனால் பாகப் பிரிவினை என்பதிலே ஒரு பிரிவு இருந்தது. அதாவது, அப்பாவுக்கும் பிள்ளைகளுக்கும் செய்தால்தான் பாகப் பிரிவினை. அண்ணன் தம்பிகளுக்குள் செய்தால் பாகப் பிரிவினை இல்லை என்கிற ஒரு clause இருந்தது. அதைக்கூட எடுக்க வேண்டுமென்று சொல்லி சட்டம் கொண்டுவந்து, முழுவதுமாக அதிலே இருக்கின்ற குறைகளை நீக்கி, 4 சதவிகிதம் என்பதை, 2 சதவிகிதமாக, 1997ஆம் ஆண்டு கடைசியில் தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கேற்ப, நம்முடைய தமிழக அரசு குறைத்திருக்கிறது. அதிலே 2 சதவிகிதம்தான். Value in setforth என்று சொன்னால், ஆவணத்தில் குறிப்பிடப்படக்கூடிய விலை. Value in setforth என்று இருக்கக்கூடியதில் Act-படி 2 சதவிகிதம் வசூல் பண்ணலாம் என்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கேற்ப 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் செட்டில்மெண்ட், விடுதலை (Release Deed) பொறுத்தவரையில்

[திரு. இ. பெரியசாமி] [2000 மே 5

4 சதவிகிதம் இன்னும் இருக்கிறது. அதையும் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதுபற்றி அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, கர்நாடக மாநிலத்திலே, தற்சமயம் மாநகராட்சி, நகராட்சியாக இருந்தால் 1000 ரூபாய். ஆக எவ்வளவு பேருக்கு சொத்து சேருமோ, ஒரு Share-க்கு ரூ. 1,000, அதற்குப் பதிவுக் கட்டணம் ரூ.500. 4 Share இருந்தால், ஒவ்வொருவரும் ரூ. 1,500 கட்டினால் அவர்களுக்கு Partition ஆகிவிடும், பாகப் பிரிவினையாகிவிடும். அதேமாதிரி நகராட்சிகளுக்கு ரூ. 500, பேரூராட்சிகளுக்கு ரூ. 500; விவசாய நிலமாக இருந்தால் ரூ. 250; நகரும் சொத்தாக இருந்தால் ரூ. 200 என்று இப்பொழுது புதிய சட்டம் போட்டிருக்கிறார்கள். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டுதான் இதிலே திருத்தம் செய்து 2 சதவிகிதம் வைத்தால் போதும் என்று நாம் சட்டம் இயற்றியிருக்கின்றோம். அது சரிதான். காரணம் என்னவென்றால், ஆவணத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற மதிப்பு என்றால், Value in setforth அவர்கள் என்ன மதிப்பு போடுகிறார்களோ, அந்த மதிப்புதான்; அதிலே 2 சதவிகிதம் என்பது நிச்சயமாக பெரிய தொகையாக இருக்க முடியாது.

இன்னொரு கேள்வியை எழுப்பினார்கள் Co-ownership, அதாவது இருக்கக்கூடிய உரிமையாளர்கள் இரண்டு பேர் இருப்பார்கள். அந்த Co-ownership-க்கு 13 சதவிகிதம் தமிழ்நாட்டிலே வசூல் பண்ணுகிறோம் என்று சொன்னார்கள். 13 சதவிகிதம் என்பது உண்மையிலே நியாயம். காரணம் என்னவென்றால், தெரிந்துதான் கொண்டு வந்தோம். இரண்டு பேர், இரண்டு Partners ஒரு சொத்தை வாங்குகிறார்கள். குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கும் தெரியும். தமிழ்நாட்டிலே, கொடநாடு எஸ்டேட்டை யார் வாங்கினார்கள் என்று தெரியும். அதிலே ஒரு Partner, Working Partner, இரண்டு பேர் Partner-களாக இருக்கிறார்கள் ஒரு சொத்திலே, ஒருவர் என்ன செய்கிறார், திடீரென்று Release Deed கொடுத்துவிட்டு, நான் Working partner-க்கு இந்தச் சொத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லி அந்தப் பணமும் செலுத்தாமல், முத்திரைத் தீர்வையைச் செலுத்தாமல், அரசாங்கத்தை மொத்தமாக ஏமாற்றிச் செல்கிற காரணத்தால், சம உரிமையாளர்கள் என்பதிலே 13 சதவிகிதத்தை அரசாங்கம் வசூலிப்பதற்கு வகை



2000 மே 5] [திரு. இ. பெரியசாமி]

செய்திருக்கிறது. Co-ownership-லே 13 சதவிகிதம் என்பது நியாயம் என அரசு கருதுகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு கேள்வி கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பூமியைப் பொறுத்தவரையில் இப்பொழுதுகூட, கர்நாடக அரசுக்கும், நம்முடைய அரசுக்கும் முத்திரைத்தாள் சட்டத்தைப் பொறுத்தமட்டிலே மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. கர்நாடகத்தைப் பொறுத்தமட்டிலே சொத்தின் மதிப்பு எவ்வளவு இருந்தாலும், முத்திரைத் தீர்வை விவசாய பூமிக்கு 250 ரூபாயும், பதிவுக் கட்டணம் 50 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும். அதுமட்டுமல்லாமல் அந்த விவசாய பூமிக்குள்ளே எந்தப் பண்ணை வீடு இருந்தாலும், அதற்கு வழிகாட்டு மதிப்பீடு எல்லாம் யாரும் போடுவதில்லை. ஆக, தமிழக அரசு விவசாய பூமிக்குள்ளே இருக்கிற பண்ணை வீடுகளுக்கு வழிகாட்டு மதிப்பீடு போடுகின்ற அந்த முறையைக் கைவிட முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவசாய நிலத்திற்கு 25 சதவிகிதம் தீர்வை என்கின்ற அடிப்படையிலே—25 சதவிகிதம் என்றால்—ஒரு ஏக்கருக்கு இப்பொழுது தீர்வையே 100 ரூபாய், 200 ரூபாய் என்று நாம் வரி விதிக்கிறோம். ஆண்டுக்கு வரி, கிஸ்தி போடுவது 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் என்றுதான் இருக்கும். மூன்று போகம் விளையக்கூடிய நஞ்சை நிலத்திற்குக்கூட 300 ரூபாய் இருக்கும். அப்பொழுது 25 மடங்கு போட்டால் மொத்தமே எவ்வளவு வரும் என்று நீங்களே பாருங்கள். 300 ரூபாய் போட்டால் 6000 ரூபாய்தான் வரும். அதிலேதான் 2 சதவிகிதம்— 6000 ரூபாய்க்கு 2 சதவிகிதம் என்று சொன்னால் எத்தனை ரூபாய் என்று பாருங்கள், 120 ரூபாய் ஆகிறது. இப்பொழுது அந்த சர்க்கார் 250 ரூபாய் விவசாயச் சொத்துக்களுக்கு வசூல் செய்கிறார்கள். பாகப் பிரிவினைக்கு, ஒரு ஷேருக்கு 250 ரூபாய். ஆனால் நமக்கு, 6000 ரூபாய்க்கு நீங்கள் வசூல் செய்தாலும், 2 சதவிகிதம் வைத்தீர்கள் என்றால் 120 ரூபாய்தான் வருகிறது மொத்தத்திற்கும். அது நமக்கு

குறைவாகத்தான் வருகிறது. ஏன் என்றால், இப்பொழுது நீங்கள் சொன்னதினுடைய அடிப்படையிலே சொல்கிறேன். 25 சதவிகிதத் தீர்வையிலே 2 சதவிகிதம் வசூல் செய்கிறோம் விவசாய நிலத்திற்கு. அது ஒன்றும் கூடுதல் இல்லை.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது, சரியாகப் போய்விட்டது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

**தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்**

**(ஆ) கோரிக்கை எண் 28—கதர்-கிராமத் தொழில்கள்**

**(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 18675,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்வரிசையிலே இருக்கிறவர்களாவது பேரவை நிகழ்ச்சிகளை கவனமாகப் பார்க்க வேண்டும். திரு. ஞானசேகரனும், சுப்பராயனும் பேசிக் கொண்டே இருக்கிறார்கள்.

வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1678, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் அரியூர் கூட்டுறவு நூற்பாலையை உடனடியாகத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3169, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1996-97 ஆம் ஆண்டில் துணி விற்பனை மானியத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்து நிராகரிக்கப்பட்ட தள்ளுபடி நிலுவைத் தொகை ரூபாய் 10 கோடியை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1676, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகள் கூட்டுறவு சொசைட்டிகளில் தேங்குவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1766, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்துள்ள கூட்டுறவுப் பஞ்சாலைகள் லாபகரமாக செயல்பட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1617, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளுக்கு தள்ளுபடி அளித்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1335, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழாக் காலங்களில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளுக்கு வழங்கப்படுகின்ற மானியத் தொகையை அரசு அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2753, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3737, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் 1993 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள தள்ளுபடித் தொகையினை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1978, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்த நூற்பாலைகளுக்கு சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் வழங்கவும், மேலும் கட்டணத்தை தவணை முறையில் பெற்றுக்கொள்ளவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3378, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4081, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்த கைத்தறித் தொழில் நெசவாளர்களுக்கு சிறப்பு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000 ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3000, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் அய்யம்பேட்டை, கபிஸ்தலம், சுவாமிமலை போன்ற ஊர்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நெசவுத் தொழிலுக்கு வேண்டிய கருவிகளை மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000 ல் ரூ. 100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4224, திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மூடப்பட்டிருக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை உடனடியாகத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

[2000 மே 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1007. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon'ble Speaker, Sir, "To discuss the need to take necessary steps for effective functioning of Co-operative Spinning Mill at Aralvaimozhi (Kanniyakumari District) I move—

"That the sum of Rs. 186,75,92,000/- allocated under Demand No.25-Handlooms and Textiles, be reduced by Rs 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3120. திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker Sir, "To discuss about the Policy matter", I move—

"That the sum of Rs.186,75,92,000/- allocated under Demand No. 25 - Handlooms and Textiles, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2844. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 939. திரு. பா. வேல்துரை.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி சேலைகள் தரம் உள்ளதாக அமைவதாக வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,75,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2000 மே 5]

## (ஆ) கோரிக்கை எண் 26 கதர்-கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 26—கதர்-கிராமத் தொழில்கள். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.32,08,56,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1677. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் விற்பனை நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3173. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், நல்லாத்தூர் பகுதியில் பனைத் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் தொழில் ஒன்று தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1673. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1620. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் கதர் கிராமத் தொழில் தொடங்க மானிய உதவியோடு கடன் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1339. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில் துறை மூலம் தண்டராம்பட்டில் தேனீ வளர்ப்பு தொழில் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2752. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில்கள் துறைக்குட்பட்ட மண்பாண்ட குடிசைத் தொழிலுக்கு 3 சதவிகிதம் சேவைக் கட்டணம் வசூலிப்பதை முழுமையாக இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3743. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1729. திரு. வி.கே. லட்சுமணன்.

*முற்பகல் 11-05*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர்த் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3182, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதியில் தென்னையை மூலப் பொருளாகக் கொண்டு கதர்-கிராமத் தொழில்கள் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4083, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2904, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகாத்மா காந்தி அடிகள் ஆதரித்து வளர்த்த கதர்த் தொழில் மிகவும் நலிவடைந்துள்ளதை மாற்றி கதர் நெசவுத் தொழில் [illegible] செழிப்படையச் செய்ய [illegible] அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3119, திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker, Sir, "To discuss the need to start Village Industries in each Block in Tamil Nadu," I move—

"That the sum of Rs.32,08,56,000—granted under Demand No.26 - Khadi and Village Industries, be reduced by Rs.100/- "

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3553, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள 65 வயதைத் தாண்டிய நலிந்த கைத்தொழில் வினைஞர்களுக்கு (பாய் நெசவு, மண்பாண்டத் தொழிலாளர்கள்) முதியோர் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2832, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஒரு நெசவுத் தொழில் பயிற்சி மையம் நடப்பாண்டில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்—கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,08,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர், உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்க அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அனுமதி வழங்கப்படுகிறது.

---

@ 455 முதல் 506 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@ 507 முதல் 523 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.





## 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்**— தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 26—கதர்-கிராமத் தொழில்கள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் தொடர்கிறது. விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற டாக்டர் இ.எஸ்.எஸ். இராமனுக்கு 15 நிமிடங்கள். மற்ற எல்லா உறுப்பினர்களுக்கும் 10 நிமிடங்கள் பேச அனுமதி அளிக்கின்றேன். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, துணிநூல் துறையின் மீதான விவாதத்தை, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தொடங்கி வைப்பதிலே மகிழ்ச்சியடைகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பொதுவாக ஓர் அரசு ஆளுகின்றபோது அது மக்களுக்கு இணக்கமான அரசுதானா என்ற 'evaluation' -- ஒரு மதிப்பீடு, அந்த ஆட்சியினுடைய இறுதிக் காலத்திலே அல்லது அதனுடைய கடைசிப் பகுதியிலே மக்களால் ஆயப்படும்; ஆய்வு செய்யப்படும். அப்படிச் செய்யப்படுகின்றபோது இப்போது ஆளுகின்ற தமிழக அரசு மக்களுக்கு இணக்கமான அரசுதானா என்ற சந்தேகம் விரிவாக மக்களிடையே எழுந்திருக்கிறது. சென்ற வாரம் விவசாயிகளுடைய கடன்களை இரத்து செய்யக் கோரி, விவசாயிகள்மீது திணிக்கப்பட்டிருக்கின்ற வட்டிச் சுமையைக் குறைக்கக் கோரி, நீக்கக் கோரி, தமிழ் மாநில காங்கிரசும், இதர எதிர்க் கட்சிகளும் இங்கே வாதிட்டன. ஆனால் இதைச் செவிமடுத்து, இதுவரையும் தமிழக அரசு எதுவும் செய்யவில்லை. இப்படிப் பெரும்பான்மையாக இருக்கின்ற விவசாயிகளுக்கு, நீதி கிடைக்காதபோது, சென்ற அரசு 1995 ஆம் ஆண்டு NABARD-உடன் போட்ட ஒப்பந்தம்தான் இதற்குக் காரணம் என்று ஒரு காரணத்தைக் காட்டி, அதை மறுத்ததன் மூலமாக இந்த அரசு இணக்கமான அரசு இல்லை என்ற எண்ணம் வலுப்படுகின்றது. 1995-லே சென்ற ஆட்சி போட்ட ஒப்பந்தம் தவறான அல்லது மக்களுக்கு எதிரான ஒப்பந்தம் என்று

இருக்குமானால், அதை இரத்து செய்யக்கூடிய அதிகாரம் இவ்வமைய அரசிடம் இருக்கிறது என்பதுதான் விவசாயிகளுடைய கருத்து. அவர்களுடைய வாதமும்கூட.

இப்போது விவசாயிகளுக்கு அடுத்தபடியாக மக்கள் தொகையில் அதிகமாக இருப்பவர்கள் நெசவாளர் பெருமக்கள். துறை கொடுத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே முதலிலே ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கொடுத்திருக்கின்ற விளக்கக் குறிப்பிலே, பத்தி 22-லே கூறுகிறார்கள் "தமிழகம் இந்தியாவிலேயே அதிக அளவில் கைத்தறி நெசவாளர்களைக் கொண்ட மாநிலமாக விளங்குகிறது. கைத்தறித் தொழிலில் தேவைக்கேற்ற வருவாய் ஈட்ட இயலாமையால், கைத்தறி நெசவாளர்களின் இளந்தலைமுறையினர் தற்போது இதனை முழுநேர தொழிலாகச் செய்ய விரும்புவதில்லை" என்ற வகையிலே துறை கொடுத்த குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இதன்மூலமாக ஒன்று தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. 1956-லே ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறையின் வித்துக்காக, இந்தத் துறை சிறந்து விளங்குவதற்காக எதையும் செய்யவில்லை என்பதுதான் இந்தக் கருத்தினுடைய பொருளாக இருக்க முடியும் என்று நான் இங்கே கூற விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

பொதுவாக நிதிநிலை அறிக்கை அளிப்பதற்கு முன்பாக வணிகர்களை தமிழக அரசு சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு அழைத்துப் பேசியது வரவேற்கத்தகுந்த நடவடிக்கை. அதற்குப் பிறகு இந்த ஆண்டு விவசாயிகளை அழைத்துப் பேசியது மிகவும் வரவேற்கக்கூடிய நடவடிக்கை. விவசாயிகளுடைய பிரச்சினையை தெளளத் தெளிவாகப் புரிந்துகொண்டு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமைகளை ஆற்ற வேண்டிய நிலையிலே அவர்களை அழைத்துப் பேசியது முற்றிலும் சரிதான். இந்தியாவிலே விவசாயிகளுக்கு அடுத்த எண்ணிக்கையிலே உள்ள நெசவாளர் பெருமக்களை நீங்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக அழைத்துப் பேச வேண்டும் என்று சட்டப் பேரவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற



தமிழ் மாநில காங்கிரஸ் கேட்டபோது அந்தக் கோரிக்கை முற்றிலும் செவிசாய்க்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு பதிவு செய்ய விரும்புகிறேன். ஏன் இந்த நிலைமை என்றுதான் தமிழக அரசைக் கேட்க விரும்புகிறேன். நெசவாளர்களை அழைத்துப் பேசி நெசவாளர்களுடைய பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அதற்கேற்றார்போல் நிதிநிலை அறிக்கையை அளித்திருந்தால், நிச்சயமாக நீங்கள் பெருத்த வரவேற்பைப் பெற்றிருக்க முடியும். ஆனால் அவ்வாறு இந்த அரசாங்கம் செய்யவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த வருத்தத்தின் காரணமாக சென்ற ஏப்ரல் 10 ஆம் தேதி சென்னையிலே அன்புத் தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் தொடங்கி வைத்த ஒரு பேரணியின் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவைக்கூட தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வாங்கவில்லை. கைத்தறி அமைச்சரிடம் கொடுங்கள் என்று சொல்லி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் கோட்டைக்கு வந்து சந்தித்தபோது நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம், கோரிக்கைகளுக்கெல்லாம் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். என்ன பதிலளித்தார்கள் என்றால், இதற்கெல்லாம் நான் பதில் சொல்ல முடியாது, முதல்வர்தான் பதில் சொல்ல வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். கைத்தறித் துறை அமைச்சர் மனு வாங்கிக்கொண்டதை நான் தப்பாகக் கூறவில்லை. ஆனால் அதற்குப் பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இதற்குரிய பதில் கிடைத்ததா என்றால் நிச்சயமாக இதுகாறும் கிடைக்கவில்லை என்பதை நான் மிக்க வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் பல இலட்சக்கணக்கான நெசவாளர் பெருமக்கள் இப்போது வறுமையிலே வாடிக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் சொல்வோம், 'ஊடையும் பாவும்' என்று சொல்வோம். ஊடையும் பாவும் என்பது ஒன்றோடொன்று இணைந்து இருப்பது. அதுபோல் வறுமையும், வாழ்க்கையும் இணைந்து இருக்கின்றது. நெசவாளர் பெருமக்களுடைய வாழ்விலே ஒளி ஏற்படவில்லை. ஏன் ஒளி ஏற்படவில்லை என்பது என்னுடைய கேள்வி. அரசாங்கத்தினுடைய கடமையே அவர்களுடைய வாழ்வை வளப்படுத்துவதுதான். அவர்கள் வளமாக

இல்லை என்று record செய்வதற்கு அரசாங்கம் தேவையில்லை. அதற்கு சாதாரண பத்திரிகையாளர், சாதாரண நோக்காளர் போதும். ஆகவே நெசவாளர்களுடைய வாழ்வு இப்போது தேய்ந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்விலே வறுமை இழையோடிக்கொண்டிருக்கிறது. பல நெசவாளர் பெருமக்கள் எல்லாம் இப்போது விவசாயத் தொழிலுக்கு கூலிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலில் பழக்கம் இல்லாத பெண்கள்கூட விவசாயக் கூலிகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். நான் அரக்கோணம் பக்கத்தில் இருக்கின்ற தக்கோலம் கிராமத்திற்குச் சென்றேன். மிகுந்த வருத்தத்தோடு பார்த்தேன். அவர்களுக்கு எல்லாம் விவசாயத் தொழிலிலே பழக்கம் இல்லை. நான் விவசாயத் தொழிலுக்குச் செல்பவர்களை அவதூறாகக் கூறவில்லை. தரக் குறைவாகக் கூறவில்லை. ஆனால் முற்றிலும் பழக்கம் இல்லாத ஒரு தொழிலுக்குச் செல்லக்கூடிய நிலைமைக்கு அவர்கள் உந்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலைமை என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும். அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும். ஏற்கெனவே இருப்பதை மறுபதிப்பாகவோ திரும்பத் திரும்ப Re-print என்று சொல்லப்படுகின்ற வகையிலே திரும்பத் திரும்ப பட்ஜெட் அளிப்பதன் மூலமாக மக்களை, குறிப்பாக, நெசவாளர் பெருமக்களை மிகுந்த ஏமாற்றத்திற்கு இந்த அரசு உள்ளாக்கியிருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வயதிலும் மிகுந்த தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்பதை நான் மறுப்பதற்கில்லை. கை ரிக்ஷாவை அவர்கள் படிப்படியாக நிறுத்தி, உடல் உழைப்பைக் குறைக்கும் வண்ணம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது வரவேற்கத்தகுந்த திட்டம். அதேபோல கைத்தறியிலே தகுந்த வாழ்வு கிடைக்கவில்லை என்றால் விசைத்தறிக்குச் செல்ல வேண்டும். விசைத்தறிக்குச் செல்ல வேண்டும் என்கிறபோது ஏதோ மும்பை முதலாளி என்று நினைக்கக்கூடாது. எங்களுடைய பகுதிக்கு வந்தால் நீங்கள் பார்க்கலாம். ஓலைக் குடிசையிலே, ஓட்டு வீடுகளிலே தொழிலாளியே முதலாளியாக இருந்துகொண்டு செய்கின்ற தொழிலை நீங்கள் பார்க்கலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய ஊருக்கு



வந்தபோது அவர்கள் சென்று பார்த்தார்கள். சின்னச் சின்ன ஓலைக் குடிசையிலே அவர்கள் தொழில் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் விசைத்தறியாளர்கள்தான். இந்த விசைத்தறியாளர்களுடைய நிலைமைக்கு ஏற்ற வாழ்வுக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதை நான் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன்.

1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் விசைத்தறி வாரியம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். விசைத்தறி வாரியம் அமைக்கப்பட்டுவிட்டதா? அந்த விசைத்தறி வாரியத்தினுடைய கோட்பாடுகள் என்ன என்பது இதுவரையும் எனக்கு விளங்கவில்லை. அன்றைக்கு ஏட்டிலே சொன்னது ஏட்டிலேயே இருக்கிறது இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. ஏன் Power-loom Board அமைக்கப்படவில்லை? Power-loom Board அமைப்பதில் என்ன சிரமம்? இப்போது 25,000 கோடி ரூபாய் ஜவுளித் தொழில் அபிவிருத்திக்காக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது என்று ஜவுளித் துறை அமைச்சர் சொல்கிறார். ஆனால் நடப்பில் நடப்பது என்ன? ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்குக் குறைவாக உள்ள பட்ஜெட்டைத்தான் நம்முடைய தமிழ்நாடு அரசு போடுகிறது. ஆகவே இதிலே இருக்கிற உண்மை என்ன என்பதை கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-15

பொதுவாகவே, இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் ஒரு மிகப் பெரிய தேக்கம் இருக்கிறது. இந்தத் தேக்கத்திற்குக் காரணமாக இருப்பது இப்போது Power-loom என்று சொன்னாலும்கூட, சின்னச் சின்ன looms என்று சொல்லப்படுகின்ற அளவிலே இரண்டு விசைத்தறிகளைக் கொண்ட குடும்பங்கள் இப்போது தங்களுடைய வாழ்வினை இழந்துகொண்டிருக்கின்றன அவர்களுக்கு வேண்டிய ஆர்டர்கள் கிடைக்கவில்லை; அவர்களுக்கு வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லை. இருக்கின்ற தறியை விற்கின்ற நிலைமைக்கு அவர்கள் ஆளாகியிருக்கின்றார்கள் இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், உற்பத்தி ஆர்டர்கள் கிடைக்கவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும்கூட, அவர்கள் கட்ட வேண்டிய மின் கட்டணத் தொகை மிக அதிகமாக இருக்கிறது. மிகவும் அதிகம் என்று சொன்னால் 1 ரூபாய் 30 பைசா என்று ஆரம்பித்து 2 ரூபாய்

40 பைசாவரை இப்போது மின் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இதிலே இருக்கின்ற ஒரு யதார்த்த நிலையை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1991 ஆம் ஆண்டு தேர்தலின்போது எங்களுடைய பகுதிக்கு, குறிப்பாக வட ஆற்காடு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு வந்திருந்தபோது, விசைத்தறி நெசவாளர்களுக்கு நீங்கள் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் எழுத்து மூலமாகவே ஒரு கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கடிதத்தினுடைய சாராம்சத்தை நான் படிக்க விரும்புகிறேன். 28-4-1991 தேதியிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தலைப்பிலே இருக்கின்ற Letter Pad-லே அவர்கள் எழுதியிருக்கின்றார்கள்;

"அன்புள்ள வட ஆற்காடு மாவட்ட கழகச் செயலாளர் தம்பி சகி, எம்.பி. அவர்களுக்கு, தங்கள் கடிதம் கிடைத்தது. விசைத்தறி நெசவாளர்கள் மின்சார சலுகை பற்றிய கோரிக்கை தேர்தல் அறிக்கை வெளியிடுவதற்கு முன்பாகக் கிடைக்காமையால், அதுபற்றி அறிக்கையிலே குறிப்பிட முடியவில்லை. இப்போது புதிதாக அறிவிப்புச் செய்வது முறையாக இருக்காது. கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு மகிழத்தக்க வண்ணம் முடிவெடுக்கலாம். இதனை அந்த நண்பர்களிடம் எடுத்துரைத்து கழக வெற்றிக்கு ஒத்துழைக்குமாறு நான் கேட்டுக்கொண்டதாகக் கூற வேண்டுகிறேன். அன்புள்ள மு. கருணாநிதி" என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கைப்பட அந்தக் கடிதம் அன்றைக்கு மாவட்டச் செயலாளராக இருந்த முகம்மது சகி அவர்களுக்கு எழுதப்பட்டது. எங்களுடைய பகுதியில் இந்தக் கடிதத்தினுடைய பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, நம்முடைய வணக்கத்திற்குரிய கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் வந்தபோது எங்கள் தொகுதியிலே நடந்த கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்த சாராம்சத்தை நான் சுருக்கமாகப் படிக்க விரும்புகின்றேன்.

"தமிழக ஆட்சியில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதைப்போல தங்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கக் கோரி இங்கே நூற்றுக்கணக்கான நெசவாளப் பெருமக்கள் தேர்தலில் நின்று





இருக்கின்றார்கள். எங்களுக்கு அந்தக் கோரிக்கை, கழக ஆட்சியிலே உரிய காலகட்டத்தில் கிடைக்காத காரணத்தால் அதை நிறைவேற்றமுடியவில்லை. சமீபத்திலே காஞ்சிபுரத்தை அடுத்த ஐயம்பேட்டையிலே நெசவாளர்களிடையே தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதைப்போல, ஏழை நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று உறுதி கூறியிருக்கின்றார்கள். எனவே மீண்டும் தமிழக முதல்வராக கலைஞர் அவர்கள் ஆன பின்பு அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று உறுதி கூறுகிறேன்" என்று வணக்கத்திற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் பேசியதாக 11-4-1991 அன்று பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி அது. அப்படிக் கூறியிருக்கின்றார்கள். ஏறக்குறைய 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலே இப்போது தமிழக அரசு இந்த முடிவை, இந்த அறிவிப்பை ஆய்வு செய்ததா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆய்வு செய்திருந்தால், நிச்சயமாக இலவச மின்சாரம் இல்லை என்றாலும்கூட நியாயமான ஓர் அணுகு முறையிலே இதற்குத் தீர்வு கண்டிருக்க முடியும். (மணியடிக்கப்பெற்றது)

பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்தை நாம் பலவற்றுக்கு உதாரணமாக எடுத்துக்கொள்கின்றோம். Ryots Bazaar என்றால் அதைப் பார்த்து நாம் உழவர் சந்தை என்கிறோம். ஜென்ம பூமி என்றால் நாம் நமக்கு நாமே திட்டம் என்கிறோம். ஆந்திராவை Roll Model-ஆகக் கொண்ட தமிழக அரசு இதிலேயும் ஆந்திராவைப் பின்பற்ற வேண்டுமென்ற கருத்தை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

ஆந்திர மாநிலத்திலே சந்திரபாபு நாயுடு அவர்கள் மிகத் தெளிவாக ஓர் அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவர்கள் வெளியிட்ட ஆணையில் சொல்கிறார்கள்: 5 எச்.பிக்குக் குறைவாகக் கொண்ட விசைத்தறி நெசவாளர்களுடைய தொழிற்கூடங்கள் குடிசைத் தொழிலாகப் பாவிக்கப்பட்டு, அவர்கள் அனுபவிக்கக்கூடிய முழு மின்சாரத்திற்கும் யூனிட் ஒன்றுக்கு ரூ.1.20 வீதம் கட்டணம் விதிக்கப்படுகிறது. அதற்கு மீட்டர் வாடகை கிடையாது, அங்கே டாக்ஸ் கிடையாது என்று மிகத் தெளிவாக அதாவது Lighting load உட்பட என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அண்மையில் இருக்கின்ற ஆந்திர மாநிலத்தைப் பல்வேறு வகைகளிலே பின்பற்றுகிற தமிழக அரசு இவ்விஷயத்தில்

இருக்கின்ற நிறைகளை, குறைகளை அறிந்து அதாவது முதல்வர் அவர்களிடம் அனுமதி பெற்று, நிச்சயம் அந்த ஏழை நெசவாளர்கள் விசைத்தறிக்குச் சென்ற காரணத்தினால் அவர்கள் நஷ்டப்படுவதை எப்படியாவது ஒழுங்குபடுத்துகின்ற சட்ட வழிமுறைகளைக் கையாள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** T.I.I.C. நிறுவனத்திலே ஜப்தி நடவடிக்கை நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், ஒருக்கால் அவர்கள் ஜப்தி நடவடிக்கை எடுத்து தமிழக அரசினுடைய பொக்கிஷத்திற்கு அல்லது அதனுடைய பொருளாதார நிதிக்கு மிகப்பெரிய வருவாய் வந்துவிடும் என்றாலும்கூட நான் சந்தோஷப்படுவேன். அவர்கள் ஜப்தி மூலம் எடுத்திருக்கின்ற அந்தப் பொருட்களுடைய மதிப்பு 975 ரூபாய். சாதாரண வீட்டிலிருந்து Mixie, Fan போன்ற பொருட்களை எடுத்து அதற்கு 900 ரூபாய் மதிப்பு என்று போடுகிறார்கள். இந்த 900 ரூபாய் வந்துதான் இந்த அரசு வாழ வேண்டும் என்றால் நிச்சயமாக இது எப்படி நியாயமாக இருக்கும் என்பதை யோசித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

***திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் குறித்த மானியத்தின்கீழ் என்னுடைய கோரிக்கையினை இங்கே விளக்கமாக அளிக்க அனுமதி கொடுத்ததற்காக முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி வளங்களைப் பெருக்க இடையூறுகளை ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயல்படும் திறன் உடையவன் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அய்யன் திருவள்ளுவருடைய கூற்றுக்கேற்ப 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே கைத்தறியும் துணி நூலும் என்கிற துறைக்கு 186 கோடியே 75 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது கைத்தறித் துறை மிகவும் நலிந்த



நிலையிலே இருப்பதை யாவரும் அறிவோம். அப்படி இருக்கின்ற இந்தத் துறையை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்கின்ற நல்ல எண்ணத்தோடு நடவடிக்கை எடுத்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் மூலமாக உலகச் சந்தையைச் சமாளிக்கின்ற அளவிற்கு நல்லமுறையிலே இரகங்களைத் தயார் செய்து ரூபாய் 25 கோடிக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு ஜவுளியை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ததற்கு நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-25

இந்தியாவிலேயே கைத்தறித் தொழில் அதிகமாக உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இந்தத் தமிழ்நாட்டிலே கைத்தறி நெசவாளர்களுக்கு முழுமையாக வேலை கிடைக்கவில்லை என்பதற்காக இந்த அரசு கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பத்திலே இருக்கின்ற மாணவர்களைத் தேர்வு செய்து, National Institute of Fashion Technology என்ற பயிற்சி மையத்திற்கு அனுப்பி அங்கே பயிற்சி பெறச் செய்து, பின் பட்டயம் கொடுத்து தொடர்ந்து அவர்கள் பணியாற்றுவதற்கான வழிமுறைகளையெல்லாம் செய்திருக்கிறது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் சென்னைக்கு அருகிலே 200 ஏக்கர் நிலப் பரப்பிலே ஆடை தயாரிக்கின்ற ஒரு பூங்காவினை அமைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற வகையில் நூதனமான முறையில் அழகான Ready-made ஆடைகளைத் தயாரிக்கின்ற தொழிற் கூடத்தை அமைத்து நூற்றுக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு, ஆண் பெண் இருபாலருக்கும் வேலைவாய்ப்பினைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்ற இந்தத் திட்டத்தையும் நான் மனதார வரவேற்கின்றேன்.

கைத்தறி நெசவாளர்கள் 60 வயதுக்கு முன்பே இறந்துவிட்டால் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதை, இந்த நிதியாண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் கோ-ஆப்டெக்ஸ்

8 ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதையும் உயர்த்தி 10 ஆயிரமாகக் கொடுத்து கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பத்தில் இருக்கின்ற வாரிசுதாரர்களுக்கு உதவியைச் செய்கின்ற இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல் கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க வேண்டும் என்று 1997-லே இதே மன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, கைத்தறி நெசவாளர்களுக்கு 150 ரூபாய் ஓய்வூதியம் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்தில் சில குளறுபடிகள் இருக்கின்ற காரணத்தினால் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலே இருந்தால்தான் கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படும் என்கின்ற அந்த வரையறை இருக்கின்ற காரணத்தினால் 60 வயது நிறைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு அந்த ஓய்வூதியம் கிடைப்பதில்லை. ஒரு நெசவாளர் தொடர்ந்து 30, 40, 50 ஆண்டுகளாக தன்னுடைய பணியைச் செய்தாலும் 58 வயதிலிருந்து 60 வயது நடக்கின்ற அந்த இரண்டு ஆண்டுகளில் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு நிதித் திட்டத்திலே இருந்தால்தான் அவருக்கு ஓய்வூதியம் என்று அரசு விதி இருக்கின்றது. 58 வயதிலே நோய்வாய்ப்பட்டு சிறிது காலம் தனது தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அவருக்கு அந்த ஓய்வூதியம் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள 60 வயது நிறைந்த முதியோர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் கொடுப்பதைப்போல 60 வயது நிறைந்த கைத்தறி நெசவாளர்களுக்கும் ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல் கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்கின்ற சிட்டா நூலுக்கு விற்பனை வரி 2 சதவிகிதம் விதிக்கப்பட்டிருக்கிறது. 1996-லேயிருந்து இந்த மாமன்றத்திலே சிட்டா நூலுக்கு இருக்கிற விற்பனை வரியை இரத்து செய்ய வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இருப்பினும் சிட்டா நூலுக்கு உள்ள விற்பனை வரியை இதுவரை நீக்கவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1996-லிருந்து 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வழங்கியதுவரை விற்பனை வரித் தள்ளுபடியும், விற்பனை வரிச் சலுகையும் என்று 678 கோடி



ரூபாய்க்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. 1996-லிருந்து 2001 வரை எடுத்துக்கொண்டால் ரூ.2,700 கோடிக்கு வரிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தில், கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்கிற சிட்டா நூலுக்கு வரி விலக்கு அளிக்க ஏன் தயக்கம் என்று எனக்குத் தெரியவில்லை. தாயுள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலாவது கைத்தறி ஜவுளி தயாரிக்கின்ற சிட்டா நூலுக்கு இருக்கின்ற விற்பனை வரி 2 சதவீதத்தை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

அடுத்து கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற ஜவுளிகளுக்கு 20 சதவீதம் தள்ளுபடி மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. முன்பெல்லாம் பண்டிகைக் காலங்களிலும் தலைவர்களுடைய பிறந்த நாட்களிலும் மட்டுமே கைத்தறிக்குத் தள்ளுபடி மானியம் கொடுக்கப்பட்டது. கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனே 100 நாட்களுக்கு வழங்கப்பட்டது. மீண்டும் நான்காவது முறையாக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபோது, முந்தைய அரசால் கைத்தறி நலிவுற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு கைத்தறி நெசவாளர்கள் வாழ்வா சாவா என்ற நிலையில் இருந்ததை அறிந்து, வருடத்தில் 365 நாளும் கைத்தறிக்குத் தள்ளுபடி மானியம் வழங்கியவர் நம்முடைய முதல்வர் அவர்கள். அப்படி தள்ளுபடி மானியம் கொடுக்கப்பட்டதால்தான் கைத்தறி நெசவாளர்கள் ஓரளவிற்காவது தங்களுடைய பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது நடைபெறுகின்ற கைத்தறி இருவார விழா கண்காட்சியில் 20 சதவீதம் தள்ளுபடியே கொடுக்கப்படுகின்றது. கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அந்தக் கண்காட்சியில் அரங்குகளை அமைத்து அதற்காகின்ற செலவிற்குக்கூட இன்றையதினம் விற்பனை ஆகாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், கைத்தறி இருவார விழா கண்காட்சியில் சிறப்புத் தள்ளுபடியாக மேலும் 20 சதவீதம் தள்ளுபடி மானியம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் விசைத்தறிகள் மட்டும் 90 ஆயிரம் இருக்கின்றன. ஆனால் சேலம் Region என்கிறபோது 3 லட்சம் விசைத்தறிகள் இருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் இருக்கிற

பெறாமற்றுமானால், நிச்சயமாக பலகோடி மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றக்கூடியதாக இருக்கும் என்று நான் கூற விரும்புகின்றேன்.

அடுத்து நெசவாளர் பெருமக்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள். ஆர்டர்கள் கிடைக்கும், அதனால் ஒரு நல்ல நிலைமை கிடைக்கும் என்று நம்பி அவர்கள் வாங்கிய கடனை எல்லாம் திரும்பக் கட்ட முடியாமல் நடுத்தெருவிலே நிற்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சியிலே ஜப்தி என்பது அரசாங்க உத்தரவில்லாமல் நடக்காது என்று சொன்னார்கள். அது விவசாயிகளுக்கு மட்டும்தான் பொருந்துமா? நெசவாளர்களுக்குப் பொருந்தாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே இருக்கின்ற நிலவள வங்கி எடுத்த ஜப்தி நடவடிக்கையினுடைய பிரதியை நான் கையிலே வைத்திருக்கின்றேன். அந்த நிலவள வங்கியிலே இருக்கிற அதிகாரிகள், அதிகாரப் போக்குடன், இன்னும் சொல்லப்போனால் அதிகார அத்துமீறலுடன் உள்ளே சென்று அங்கே இருந்த Table Fan போன்றவைகளையும் சட்டி, பானைகளையும் வெளியிலே எடுத்துப் போட்டிருக்கிறார்கள். மிகக் கேவலமாக நடத்துகின்றார்கள். 40 ஆயிரம் கோடி ரூபாய் வாங்கி விட்டு இப்போது லாடுகள்போல், ஏதோ மிட்டா, மிராசுகள் போல் நடக்கின்ற தொழில் அதிபர்களை எல்லாம் கௌரவமாக நடத்துகின்ற அரசு, சாதாரண நெசவாளியை ஏன் கௌரவமாக நடத்தவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. அரசுக்குத் தெரியாமல் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று முதல்வர் அவர்கள் சொன்ன பதில் இதற்குப் பொருந்துமா, இல்லையா என்பதற்கு அருள்கூர்ந்து அரசு பதிலளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பேரணியின் சார்பாக நடைபெற்ற அந்தச் சந்திப்பின்போதுகூட நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் 'ஜப்தி நடவடிக்கை எல்லாம் யாருக்கு எடுக்கிறார்கள்? எடுக்க முடியாது. எப்படி எடுக்க முடியும்' என்று கேட்டார்கள். எடுத்ததற்கான ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. இவற்றையெல்லாம் நீங்கள் நிச்சயமாகக் கவனிக்க வேண்டும். அப்படி கவனிக்கவில்லை என்றால், இந்த அரசு நெசவாளர்களுக்கு விரோதமான அரசு, விவசாயிகளுக்கு விரோதமான அரசு, மக்களுக்கு விரோதமான அரசு என்று கூறுவதிலே எந்த ஒரு தவறும்....





***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் இராமன் கவனிக்க வேண்டும். L.D. Bank நம்முடையது எந்தத் தேதியில் ஜப்தி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்துச் சொல்லுங்கள். என்னிடம் கொடுங்கள். முதலமைச்சர் அறிவித்த பின்னால் கொடுத்திருக்கிறார்களா? அதற்கு முன்னால் கொடுத்திருக்கிறார்களா என்று பாருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** 10-2-2000 அன்று உச்சிரெட்டிப்பள்ளியைச் சேர்ந்த டி.எம். சந்திரா என்பவருடைய வீட்டிலே....

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து ஜப்தி நடவடிக்கைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நிறுத்துவோம், அரசு அறிவிக்காமல் ஜப்தி செய்ய மாட்டோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள் 181 வங்கிகள் இருக்கின்றன. யாராவது ஒரு சில அதிகாரிகள் அதை அறியாமல்கூட செய்திருந்தால் நிச்சயமாக அதைத் திருத்திக்கொள்ள முடியும். குறிப்பாக முதலமைச்சர் சொன்ன ஆணையை நிச்சயமாக இந்தத் துறை நிறைவேற்றும். அதில் நீங்கள் எள்ளளவும்கூட சந்தேகப்பட வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்புக்குரிய இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் தெரிவித்த கடன் என்பது, நெசவாளர்கள் விசைத்தறி நெசவாளர்களாக மாற வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்ட கடன். அதுவும் இரண்டு தறி, மூன்று தறி என்ற அளவிலே அந்தக் கடன் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குரிய உற்பத்தித் திட்டம் இல்லாத காரணத்தினால் அவர்களால் அதைக் கட்ட இயலாத நிலை. கட்ட இயலாத நிலை மட்டுமல்ல, துணித் துறையே ஒட்டுமொத்தமாக மிகப்பெரிய சங்கடத்தில் இருக்கும்போது அந்தச் சங்கடம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதைப் பற்றி நிச்சயம் தெரிந்துதான் இந்த அரசு செயல்படுகிறது. இந்த நான்கு ஆண்டு காலமாக திரு. இராமன் அவர்களோடு என்னுடைய தொடர்பு இதைப் பொறுத்தவரையில் அதிகம் என்பது அவருக்கும் தெரியும். ஆகவே நிச்சயம் இதிலே

விசைத்தறியாளர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற ஜவுளிகளைத்தான் உற்பத்தி செய்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் மட்டும் 3,000 கோடி ரூபாய்க்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்தத் துணிகளை வட மாநிலத்தில் இருக்கிற தனிப்பட்ட முதலாளிகள் விலை குறைவாக வாங்கி ஆயத்த ஆடைகளாகத் தைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது ரூ.[illegible],000 கோடி அன்னியச் செலாவணியை ஈட்டிக்கொண்டிருக்கிறது. சேலத்தில் Indian School of Handloom Technology— இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி— ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியிலே Garment Technology and Fashion Technology என்று இரண்டு பயிற்சிகளையும் அங்கே ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்து அங்கேயிருக்கிற கைத்தறி நெசவாளர்கள் குடும்பத்தில் இருக்கிற மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்தால், அவர்கள் தொடர்ந்து அந்தப் பணியை ஆற்றவும் அங்கே இருக்கின்ற ஏற்றுமதி ஜவுளியை ஆயத்த ஆடையாக மாற்றவும் உதவும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசில் கைத்தறித் துறை இணையமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு செஞ்சி இராமச்சந்திரன் அவர்களிடம் இதை எடுத்துக்கூறி மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து அங்கேயிருக்கின்ற தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளியில் இந்த பயிற்சிகளைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ்தான் பெரும்பாலும் கொள்முதல் செய்கிறது. அப்படி கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்கிற காரணத்தால்தான் கைத்தறி நெசவாளர்கள் ஓரளவிற்காவது தொழில் நடத்துவதற்கு ஏதுவாக இருக்கிறது. 1999-2000 ஆண்டில் மட்டும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 182.26 கோடி ரூபாய்க்குத் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்றுமதி செய்வதற்காக 1999-2000 ஆண்டில் 500 இலட்சம் ரூபாய்க்கு கைத்தறித் துணிகளைத் தயார் செய்து, கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி செய்திருக்கிறது. இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பத்தில் படிக்கும் மாணவர்கள் கல்வி கற்பதற்காக உதவித் தொகைகளை இந்தத் துறை வழங்குகிறது. பள்ளியிலே படிக்கின்ற கைத்தறி



நெசவாளர்களுடைய குழந்தைகளுக்கு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயராலே, கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

தொழில் கல்வி, மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் படிக்கின்ற இரண்டு மாணவர்களைத் தேர்வு செய்து, அந்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.2,500 கொடுத்து வந்ததை ரூ.3,000 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. வேளாண்மைக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களில், 2 பேரைத் தேர்வு செய்து 2,000 ரூபாய் என்று வழங்கி வந்துள்ளதை 2,500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறது.

முற்பகல் 11-35

பாலிடெக்னிக்கிலே டிப்ளமோ படிக்கின்ற இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 1,500 ரூபாய் என்று வழங்கி வந்ததை 2,000 ரூபாயாகவும், மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களில் முதல் மதிப்பெண் எடுக்கின்ற மாணவர்கள் இரண்டு பேருக்கு வழங்கி வந்த ரூ.1,000 என்பதை ரூ.2,000 ஆகவும், 10 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களில் முதல் இரண்டு மாணவர்களுக்கு வழங்கிய ரூ.1,000 என்பதை ரூ.1,500 ஆகவும், உயர்த்திக் கொடுத்து இருக்கிறது.

M.A., M Sc., M.Com., M.B.A., M.C.A., போன்ற பட்டப் படிப்புகள் படிக்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பத்திலே இருக்கின்ற இரண்டு மாணவர்களுக்கு ரூ.3,000-மும் இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிற்சி மையத்திலே படித்து பட்டயம் பெற்று வெளி வருகின்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5,000/-லிருந்து ரூ.10,000 வரை கொடுத்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து கதர் வாரியத்தைப் பொறுத்தவரையிலே, என்னுடைய கருத்தைக்கூற விரும்புகிறேன். கதர் வாரியத்தின் வாயிலாக, கதர் கிராமத் தொழிற் கூடங்களில் சோப்புகள் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கதர் வாரியத்தின்கீழ் திருக்கழுக்குன்றத்திலே நடைபெறும் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை, மிகச் சிறப்பாகவும் இலாபகரமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அங்கே இருக்கின்ற வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக்

முற்பகல் 11-40

மேலும் சங்கச் செயலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க போதிய நிதி சங்கத்திடம் இல்லாத காரணத்தால், அரசே அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறியாளர்களின் நலன்களுக்கும், முன்னேற்றத்திற்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழக அரசு, கைத்தறித் துணி உற்பத்திக்குத் தேவைப்படும் சிட்டா நூலுக்கு விதித்து வரும் 2% விற்பனை வரியை விலக்கிக் கொண்டால் கைத்தறித் துணிகளின் உற்பத்தி விலை குறையும். அதனால் விற்பனையும் அதிகமாகும். அண்டை மாநிலங்களில் இந்த வரியை விதிப்பதில்லை. எனவே கைத்தறியாளர்களின் நலனில் அக்கறை காட்டி வரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வரியை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட லுங்கி இரகத்தை விசைத்தறியில் உற்பத்தி செய்வதால்தான் கைத்தறி லுங்கிகள் தேக்கம் அடைந்துள்ளன. எனவே விசைத்தறியில் உற்பத்தி செய்யும் லுங்கி இரகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் போலி உறுப்பினர்களைக் கண்டு தடை செய்வதுடன், உண்மையான நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சமத்துவ வரித் திட்டத்தின் மூலம் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி விலக்கு அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் துறை மற்றும் கைத்தறி, துணிநூல் மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும், நான் முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்துவதற்கும் வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் முதலாவதாக கதர்த் துறை குறித்து ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கதர்த் துறைக்கு நிதியொதுக்கும் என்பது



மிகவும் குறைந்த அளவில்தான் இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஒரு தொழிற்சாலையைப் பற்றி மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அடுத்த விஷயத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் கதர்த் துறையின் சாயச் சலவை அச்சு அலகு ஒன்று இயங்கி வருகிறது. இந்தப் பிரிவுக்கு 'ஜம்போ ஜிக்கர்' இயந்திரம் இரண்டு நிறுவிட அரசு முடிவு செய்திருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தச் சாய ஆலை நீண்டகாலமாக நல்ல முறையிலே இயங்காமல் கோ-ஆப்டெக்ஸ் போன்ற நிறுவனங்கள் அதற்குத் துணி மூலப்பொருள் கொடுத்தும்கூட அதைச் சிறப்பாக நடத்துவதற்கு அந்த நிறுவனம் போதிய முயற்சி எடுக்காத சூழ்நிலை இருக்கிறது. இதனால் அங்கே தொழிலாளர்கள் வேலை இழப்புக்கு ஆளாகி வருகிறார்கள். இதுகுறித்து அமைச்சர் அவர்கள் தீவிரமாக கவனம் செலுத்தி, 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிற, சூரிய வெப்பத்தைக் கொண்டு ஆற்றலை உருவாக்கிக் கொள்கிற வாய்ப்பு இருக்கிற அற்புதமான அந்தப் பிரிவை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் ஏறத்தாழ 55 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. 26-7-1991 முதல் 30-11-1996 முடிய தனி அதிகாரியின் ஆளுகையின்கீழ் செயல்பட்ட இந்த நிறுவனத்தில் நட்டம் மட்டும் ரூ.2,55,310/- ஆனால் இந்த காலகட்டத்தில் இந்தச் சங்கத்தினுடைய செயல்பாட்டிற்காக, விற்பனை நடவடிக்கைக்காக சேவைக் கட்டணம் என்ற அடிப்படையில் 3% விதிக்கப்பட்டு, ரூ. 2,41,440/- கட்ட வேண்டுமென்று வாரியம் வற்புறுத்தி வருகிறது. இதுகுறித்து அந்தச் சங்கத்தினுடைய நிருவாகக் குழு உறுப்பினர் என்ற முறையில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் முதன்மை நிருவாக அலுவலருக்கு எழுதிய கடிதத்திற்கு, வாரியத்தின் மூலமாக order பெற்று விற்பனை செய்யாத சரக்குகளுக்கு சேவைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்று அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். என்றாலும், சேவைக் கட்டணத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். எனவே அதுகுறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரடியாகத்

கொடுக்கின்ற வகையிலே அந்தத் தொழிற்சாலையை விரிவாக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி நெசவாளர்களுடைய கோரிக்கையாக மின் கட்டணம் குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கின்ற தொழில் கைத்தறித் தொழில். அந்தத் தொழிலுக்கு இலவச மின்சாரத்தை நாங்கள் கேட்கவில்லை. மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தாவது வழங்க வேண்டும். அப்போதுதான் கைத்தறித் தொழில் ஓங்கி நடைபெறும். ஏனென்றால் இப்போது கைத்தறித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மின் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விஜி. தனபால் 5 நிமிடங்கள் மட்டும்.

**திரு. விஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துறை இந்தியத் திருநாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நேரடியாகவும், மறைமுகமாகவும் அதிகமான வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய ஒரு துறையாக விளங்குகிறது. கைத்தறித் துறையில் நம்முடைய கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் நீண்ட பாரம்பரியத் தொழிலாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது.

நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, தறியுடன் கூடிய வீடுகள், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை கலைஞர் அரசு செயல்படுத்தி வருகிறது. சென்ற ஆண்டு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து அதன்மூலம் குழு பரிந்துரை செய்த அனைத்துப் பரிந்துரைகளையும் ஒருமாத காலத்திற்குள்ளாகவே நம்முடைய கலைஞர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார். மேலும் வருடந்தோறும் 20 சதவிகிதம் தள்ளுபடி செய்யும், லுங்கி இரகங்களுக்கு குறிப்பிட்ட காலம் வரை 30



சதவிகிதம் தள்ளுபடி செய்தும் ஆணையிட்டார்கள். நெசவாளர்கள் இறந்தால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு 50,000 ரூபாய் கொடுக்கவும், மாத ஓய்வூதியம் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தி இருப்பதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வூதியத் திட்டத்திற்கான வயதை 58 ஆகவும் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களின் குடும்பத்தில் உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து தேசிய நாகரிக வடிவமைப்பு தொழில்நுட்பக் கல்வி நிலையத்தின் மூலம் சான்று பெறும் வகையில் பயிற்சி அளிக்கும் திட்டத்தைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

எனது குடியாத்தம் தொகுதியில் தயாரிக்கப்படும் லுங்கிகள் சிறந்த தரமாகவும், நேர்த்தியாகவும் இருப்பதால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதால் லுங்கி இரகங்களில் அதிகமான தேக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், லுங்கி இரகத்தை அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்ய ஆணையிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நெசவாளர்களுக்கு தறியுடன்கூடிய வீடுகள் கட்ட அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நூல்கள் தரமற்றதாக உள்ளன. அவற்றைத் தரமான நூல்களாக வழங்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதியில் லுங்கி இரகம் விற்பனை ஆகாமல் உள்ளதால் சங்கத்தின்மூலம் ஜனதா சேலையை உற்பத்தி செய்ய நெசவாளர்கள் ஆரம்பித்துள்ளார்கள். தற்போது வழங்கப்படும் 5 மீட்டர் ஜனதா சேலைக்குக் கூலியாக 32 ரூபாய் 50 காசு வழங்கப்படுகிறது. இந்தக் கூலி இவர்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே ஜனதா இரக சேலைகளுக்கு மீட்டருக்கு 9 ரூபாய் உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு நாளைக்கு இரண்டு ஜனதா சேலைகள்தான் நெய்ய வேண்டுமென்று கட்டுப்பாடு உள்ளது. அந்தக் கட்டுப்பாட்டை நீக்கி, எத்தனை சேலைகள் நெய்தாலும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தலையிட்டு உடனடியாக அந்தச் சேவைக் கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்ற நிலையை இரத்து செய்ய வேண்டும். அந்தச் சங்கம் செயல்படுவதற்கு உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

(முற்பகல் 11.45

அடுத்து கைத்தறி, துணிநூல் துறையின்மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கைத்தறி, துணிநூல் துறையைப் பொறுத்தவரையில் நாட்டினுடைய தொழில் உற்பத்தியில் 20 விழுக்காடு பங்கு வகிக்கிறது. ஏற்றுமதிக்கு 30 விழுக்காடு பங்களிப்பு செலுத்துகிறது. வேலைவாய்ப்பு என்று எடுத்துக்கொண்டால், 20 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. ஆனால் கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் இப்போது கடுமையாக தொழில் நெருக்கடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான வழிமுறைகள் கொள்கை விளக்கக் குறிப்பிலே விரிவான அளவிற்கு விளக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். இந்தத் தொழில் நெருக்கடிக்கு முக்கியமான காரணம், உலக வர்த்தக அமைப்பிலே இந்திய நாடு இணைக்கப்பட்டு அதிலேயிருந்து செய்யப்பட்ட தாராளமய நடவடிக்கையின் மூலமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆலைகள் தொடங்குவதற்கு வேண்டிய உரிமம் பெற வேண்டிய அவசியம் இல்லாத நிலையும், பருத்தி ஏற்றுமதி செய்வதற்குக் கட்டுப்பாடு இல்லாத ஒரு நிலையும் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாகத்தான் இந்தத் தொழிலில் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பஞ்சு ஏற்றுமதி செய்வதைக்கூட நிறுத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால் அந்தக் கடிதத்திற்கு ஆக்கபூர்வமான பதில் கடிதம் மத்திய அரசிலேயிருந்து வரவில்லை. எதிர்மறையான, நிராகரிக்கப்பட்ட நிலைதான் மத்திய அரசின் நிலையாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற நூற்பாலைகள் குறித்து நாம் பெருமிதம் கொள்கிறோம். நாடு முழுவதிலும் இருக்கின்ற நூற்பாலைகளில் 30 விழுக்காடு ஆலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்று பெருமை கொள்கிறோம். ஆனால் இந்தப் பெருமையை நாம் தொடர்ந்து நிலைநாட்டிக்கொள்வதற்கான வாய்ப்பை இந்தத் தொழில் நெருக்கடி நமக்கு வழங்கவில்லை. ஏறத்தாழ 200 நூற்பாலைகள் இப்போது மூடிக்கிடக்கின்றன; நசிந்து கிடக்கின்றன. அதிலே பணியாற்றக்கூடிய ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பணியிழந்து நிற்கின்றார்கள்; அல்லது



அரைகுறை வேலைவாய்ப்பைப் பெறுகிற நிலையிலே பெரும் பகுதி தொழிலாளர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த நெருக்கடியிலேயிருந்து தொழிலை மீட்பதற்கான வழிமுறை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலோ அல்லது வேறு வகையிலோ தெளிவாக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கொள்கை விளக்கக் குறிப்பிலே நம்முடைய தமிழ்நாடு துணி வர்த்தகம் உலக வர்த்தக அமைப்போடு ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2005 ஜனவரியிலிருந்து இந்த வர்த்தகம் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுவிடும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற கைத்தறித் துணிகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் சந்தை வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவிற்கு விலை மற்றும் தரம் சிறந்து விளங்கக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனை எந்த அடிப்படையிலே செய்ய முடியும்? மூலப் பொருள் நமக்குச் சாதகமாகக் கிடைக்க வேண்டும், துணித் தொழிலில் சீரான முறையிலே உற்பத்தி நடப்பதற்கான கட்டமைப்பு வசதிகளை நாம் வைத்திருக்க வேண்டும், தொழிலாளர்களுடைய திறன் என்ற இந்த மூன்று முறைகளிலேயிருந்துதான் விலை மலிவாகவும், தரம் அதிகமாகவும் உலகச் சந்தையிலே போட்டியிடக்கூடிய வாய்ப்பில் நாம் நிலைத்து நிற்கவும் முன்னேறுவதற்கான வாய்ப்பையும் உருவாக்க முடியும். ஆனால், அதற்கான வாய்ப்பு இதிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறதா என்றால் எங்கேயும் தெளிவாக்கப்படவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பானாலும், சாதனைத் திட்டமானாலும் நமக்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளிலே இந்தத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியொதுக்கத்தைப் பார்த்தீர்களானால் 1997-98ல் ரூபாய் 138 கோடியே, 26 இலட்சத்து, 34 ஆயிரம் என்று இருந்த நிதி ஒதுக்கீடு, 1998-99 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 35 கோடியே, 67 இலட்சத்து, 78 ஆயிரம் உயர்த்தப்பட்டிருந்தது. அதற்கு அடுத்த ஆண்டு, அதாவது கடந்த நிதியாண்டில், 1999-2000 ஆண்டில் ரூபாய் 22 கோடியே, 94 இலட்சம் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் நடப்பாண்டு, அதாவது இந்த ஆண்டுக்கான நிதியொதுக்கம் என்பது கடந்த ஆண்டைக்

காட்டிலும் ரூபாய் 10 கோடியே 12 இலட்சத்து 27 ஆயிரம் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைந்த நிதியொதுக்கீட்டை வைத்து—நிதியொதுக்கத்திலேயே வெட்டு விழுந்திருக்கின்ற நிலையை வைத்து—நாம் சந்தை நிலையை எதிர்கொள்ள எப்படி தயார்படுத்திக்கொள்ள முடியும் என்பதிலே நமக்குத் தெளிவு இல்லை. அதைத் தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்பும் இல்லை. ஆனால் இந்த நிலையிலே....

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கீட்டிலே குறைவு ஏற்பட்டிருப்பதனுடைய காரணம் நள்ளுபடி மானியத்தை, தவறு ஏதும் செய்யாத முறையில், முறையாக ஒழுங்குபடுத்திய காரணத்தினால் நிதியொதுக்கீடு குறைந்திருக்கிறதேயொழிய வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கம் ஒரு வகைக்கு ஏற்புடையது. மற்றொரு கோணத்திலே பார்த்தால் அதுகுறித்து பாதகமும் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். விலை போகக்கூடிய, விலை உயர்ந்த இரகங்களை உற்பத்தி செய்வதற்கான முறையில் துறை அதிகாரிகள் எந்த அளவிற்கு சங்கங்களுக்கு உதவுகிறார்கள் என்றால் அதிலேயும் முறையான உதவி இருப்பது இல்லை. ஒருமுறை ஓர் இரகத்தைத் தேர்வு செய்யச்சொன்னால், அதை உற்பத்தி செய்ததற்குப்பிறகு அதைக் கொள்முதல் செய்யாத நிலைமையும் இந்தத் துறையிலே இருக்கிறது. எனவே தெளிவான நம்பிக்கையூட்டும் நிலை கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்படவில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஜவுளித் துறையிலே, குறிப்பாக, கைத்தறியைப் பாதுகாப்பதற்காக இரக ஒதுக்கீடு என்கிற முறை நீண்டகாலமாக கைத்தறி நெசவாளர்களால் வலியுறுத்தப்பட்டு 1985 ஆம் ஆண்டுதான் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு நீதிமன்றத்திற்கு எல்லாம் அது பயணம் செய்து, 1995 ஆம் ஆண்டிலேதான் நடைமுறைக்கு வந்தது. ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால், அமலாக்கம் என்கிற அந்தக் கொள்கை பெரிய அளவிற்கு செயல்படுத்தப்படவில்லை. மத்திய அரசாங்கம் அமைத்த சத்தியம்



கமிட்டி இந்த இரக ஒதுக்கீட்டிற்கு எதிராக கருத்தைத் தெரிவித்து இருக்கிறது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், துறைச் செயலாளரும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக மத்திய அரசு வேறு நிலையை எடுத்து இருக்கிறது. அது தற்காலிகமான நிலை. இரக ஒதுக்கீடு சட்டத்தை தற்காலிகமாக அமல்படுத்தப் போவதில்லை என்று பிரதமர் தெரிவித்து இருக்கிறார். ஆனால் அது நிலையானது அல்ல; தலைமேல் தொங்குகிற ஆபத்து நிறைந்த கத்தியைப் போல்தான் இரக ஒதுக்கீடு குறித்த பரிந்துரை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11.50

அடுத்து நூற்பாலைகள் பிரச்சினை. நூற்பாலைகளை எப்படி நாம் இந்த நெருக்கடியிலிருந்து மீட்கப் போகிறோம் என்பதுதான் புரியவேயில்லை. அதிக ஆலைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலே, மிகமிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது சந்தையிலே துணி தேங்கி இருந்தது. தொழில் நிலையிலே கடுமையான நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இந்த நெருக்கடிக்குக் காரணம் தாராளமயக் கொள்கை. இந்த தாராளமயக் கொள்கையை வழங்கிவிட்டு, இதிலே மீட்பதற்கான ஒரு புதிய வழிமுறையைச் சொல்லி இருக்கிறார்கள், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி என்று. (மணியடிக்கப்பெற்றது) இந்தத் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதிக்காக ரூபாய் 25 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். 25 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததில், பஞ்சாலைத் தொழில் இடம்பெறவில்லை. முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக இடம் பெற்றது. ஆனால் என்ன பலன்? நம்முடைய தமிழ்நாட்டில் 30 விழுக்காடு ஆலைகள் இருக்கின்றன. 30 விழுக்காடு ஆலைகள் இருக்கிற இந்தப் பகுதிக்கு இப்போது தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து ஏறத்தாழ 7,500 கோடி ரூபாய் நிதிப் பலனை நாம் பெற்று இருக்க வேண்டும். ஆனால் 801 கோடியே, 75 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் நாம் விண்ணப்பம் செய்து இருக்கின்றோம். அதற்குக் கிடைத்து இருக்கிற தொகை, அனுமதித்து இருக்கிற தொகை என்று பார்த்தால், ரூ. 135 கோடியே 55 இலட்சம்தான். அதிலே நமக்கு வழங்கி இருக்கிற தொகை என்று பார்த்தீர்களேயானால், ரூபாய் 61 கோடியே 75 இலட்சம் மட்டும்தான். இதனைச் சதவீதம் முறையில் கணக்கிட்டுப் பார்த்தால்,

ரூபாய் 25 ஆயிரம் கோடியில் 0.24 சதவீதம்தான் மேம்பாட்டு நிதியிலிருந்து நாம் பெற்று இருக்கின்றோம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, T.U.F. Scheme என்பது 25 ஆயிரம் கோடி ரூபாய். இது 5 ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை. ஆனால் ஓராண்டு ஆகியும் ஒதுக்கப்பட்ட தொகையே ஒட்டுமொத்தமாக ரூ. 501 கோடிதான். ஆனால் ரூ. 5 ஆயிரம் கோடி அளவுக்கு அதிலே தொழில்நுட்ப மேம்பாடு உருவாக்கப்பட்டு இருக்க வேண்டும். ஒட்டுமொத்தத்திலே ஏற்பட்டு இருக்கின்ற சரிவின் காரணமாகத்தான் 501 கோடிக்கு மேலே மத்திய அரசிடமிருந்து அதற்குத் தேவையானதைப் பெற முடியவில்லை. நம்மால் மட்டுமல்ல; யாராலும் இயலவில்லை. ஆனால் பெற்றவர்களுக்குள்ளே அதிகம் பெற்று இருப்பவர்கள் குஜராத்; குஜராத்திற்கு அடுத்து நாம்தான் அதிகம் பெற்று இருக்கிறோம்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது விஷயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக் கூற்றிலே இருந்து நான் மாறுபடுகிறேன். ஏனென்றால், மத்திய அரசாங்கம் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி என்று உருவாக்கி இருப்பதில் பெருமளவிற்கு Reliance Company, Bombay Dying, Mafatlal Group போன்ற பெரும் கம்பெனிகள்தான் பலன் அடைய இருக்கின்றன. தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பயனடைவதற்கான வாய்ப்பு பெருமளவுக்கு இதில் தெரியவில்லை. என்னுடைய ஆய்வில் இருந்து எனக்கு அப்படிப்பட்ட உணர்வு கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு நூற்பாலைகள். தொடர்ந்து எல்லா ஆலைகளும் இயக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை ரீதியாக அறிவித்தார்கள். ஆனால் அந்த ஆலைகள் தொடர்ந்து இயங்குவதிலே கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பதிலாக பின்னடைவுதான் ஏற்பட்டிருக்கிறது. இதிலே 'SITRA'வின் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. SITRA-வினுடைய ஆலோசனை என்ன? தொழிலாளர்களுக்கு மட்டும்தான் தண்டனையாக வழங்கப்படுகிறது; பஞ்சப்படி முடக்கப்பட்டு இருக்கிறது; சம்பளத்தில் 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வெட்டப்பட்டிருக்கிறது. அதே கூட்டுறவு நூற்பாலையிலே Mill Staff



என்று ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். அந்த Staff பகுதியில் அது கை வைக்கவே இல்லை; எந்தக் குறைபாடும் அவர்களுக்கு ஏற்படுத்தவில்லை. ஒட்டுமொத்தமான உற்பத்திச் செலவைக் குறைத்து, உற்பத்தி ஆற்றலை அதிகப்படுத்தி, அந்த உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு சந்தையைத் தேடி, அதன் அடிப்படையிலே அந்த உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டுமே தவிர, ஏற்படுகிற நெருக்கடி முழுமையையும் தொழிலாளர்கள் தலையிலே சுமத்துவது எந்தவகையிலும் ஏற்புடையது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். ஈரோடு மாவட்டம் தொடர்புடையது; நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற ஒரு கோரிக்கையும் ஆகும். இரண்டு விஷயங்களில் ஒரு விஷயத்தைப் பாராட்ட வேண்டும்; மற்றொரு விஷயத்தை வலியுறுத்த வேண்டும்.

முற்பகல் 11-55

மதுரை மாவட்டம் மிசரியர் கூட்டுறவு நூற்பாலையிலே பணியாற்றிய தொழிலாளர்களில் 30 தொழிலாளர்களுக்கு மதுரை மாநகராட்சியிலே மாற்று வேலை கிடைத்திருக்கிறது. இதற்காக முயற்சி எடுத்த அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே வழிமுறையைப் பின்பற்றி எல்லாத் தொழிலாளர்களுக்கும் மாற்று வேலை வாய்ப்பைக் கண்டறிவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். 1996-97-ல் ஈரோடு மாவட்டத்திலே திராகரிக்கப்பட்ட விற்பனை மானியம் ரூபாய் 7 கோடி இருக்கிறது. இதைக் கட்டாயம் கொடுக்காவிட்டால் ஈரோடு நெசவாளர்கள் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. ஈரோடு மாவட்டம், பெருந்துறைப் பகுதியிலும், கோவை மாவட்டத்திலே திருப்பூர், அவினாசி, சோமனூர், பல்லடம், சூலூர் போன்ற பகுதிகளிலும் விசைத்தறியாளர்களுக்கு ஜப்தி நடவடிக்கைக்கான நோட்டீஸ் வந்திருக்கிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கூறியதைப்போல ஜப்தி நடவடிக்கை நிறுத்தப்பட்டிருக்கிறதென்றாலும்—அந்த நோட்டீஸ் கொடுத்து நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக—நேரடியாக, நிர்பந்த நடவடிக்கையிலே அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள். எனவே கையறு நிலையிலே இருக்கிற விசைத்தறியாளர்களையும் காப்பாற்ற வேண்டும். கடுமையான நெருக்கடியிலே இருக்கிற கைத்தறி நெசவையும்

பாதுகாக்க வேண்டும். நலிவடைந்த நிலையில் இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகளையும் காப்பாற்ற வேண்டும். பஞ்சாலை பெரிய அளவிற்கு நெருக்கடியில் இருக்கிறது. எல்லாவற்றையும் காப்பாற்றுவதற்கான நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்து என்னுடைய வார்த்தையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் கதர்த் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தன்னிகரில்லாத் தலைவர், பார்புகழும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் தலையில் சுமந்து விற்ற இந்தக் கைத்தறித் துணி இன்றைய நாகரிக உலகிற்குத் தேவையான முன்னேற்றத்துடன் இராஜநடை போடுகிறது என்றால் அது தலைவர் கலைஞரின் இராசிக் கரங்களால்தான் என்று நினைக்கிறேன்.

1998 ஆம் ஆண்டில் நம்முடைய கலைஞர் அரசால் அறிவிக்கப்பட்ட மாநில துணி நெசவுக் கொள்கையுடன் இணைந்து 'மாநில நெசவு பெருமன்றம்' ஒன்றினை மாநில அரசு அமைத்துள்ளதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

விக்டோரியா மகாராணி காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து கைத்தறிப் புடவைகள் மூங்கில் குழாய்களில் வைக்கப்பட்டு இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததாகவும், இவ்வளவு மெல்லியதாக இருந்ததைப் பார்த்து இராணியார் அவர்கள் தமிழ்நாட்டில் இப்படியும் தரமான துணிகளை உற்பத்திச் செய்கிறார்களா என்று பெருமைப்பட்டு அதற்குப் பரிசு எல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் படித்திருக்கிறேன். இவ்வளவு சிறப்பு வாய்ந்த கைத்தறித் துணிகள் இன்றும் அதே சிறப்பு மாறாமல், தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றால் அது மிகையாகாது. கைத்தறித்



துணிகள் விற்பனையைப் பொறுத்தமட்டில் வெளிநாடாக இருப்பினும் சரி, வெளி மாநிலமானாலும் சரி, தமிழ்நாட்டு கைத்தறித் துணிகளுக்கு தனி வரவேற்பு என்றால் அது மிகையாகாது. அதற்குக் காரணம் அதனுடைய தரம்தான். தரம் உள்ளதாகவும், அதில் போடப்படும் சாயம் வெளுக்காமல் உள்ளதாலும் வெயில் காலத்திலும் பயன்படும் வகையில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான சீருடைத் துணிகளைக் கைத்தறித் துணியில் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் விற்பனையைப் பொறுத்தமட்டில், ஆலைகள் மற்றும் விசைத்தறித் துணிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டும், கூட்டுறவுச் சங்கங்களில் நிலவி வந்த பிரச்சினைகளையும் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்று 1998 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி வழங்க ஆணையிட்டுள்ளதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலவச வேட்டி, சேலை வழங்குகின்ற திட்டத்தைப் பொறுத்தமட்டில், கடந்த அரசு காலத்தில் வழங்கப்பட்ட சேலையின் நீள அளவு குறைவாகவும், துவைக்கும்போது சேலையில் பாதி ஆற்றோடு போய்விடுகிறது என்றும் கிராமப்புற மக்களால் பேசப்பட்டு வெறுக்கப்பட்ட நிலை மாறி இன்று தரமான சேலையை, சரியான அளவில் வழங்கும் அரசுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் தாய்மார்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலவச வேட்டி, சேலையை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதை அதிகம் பேருக்குக் கொடுக்க முடியவில்லை. காரணம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரிசா மாநில மக்களுக்குக், கொடுத்ததால்தான் அனைவருக்கும் கொடுக்க முடியவில்லை என்பதால் வரும் ஆண்டுகளில் அனைவரும் பயன்பெறும் வகையில் வழங்கப்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத்

[திருமதி ஆர். சரஸ்வதி] [2000 மே 5

தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ. 40,000 என்பதை ரூ. 50,000 ஆக உயர்த்திக் கொடுத்த தலைவர் முதல்வர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்க வழங்கப்படும் மானிய உதவியுடன் கூடிய கடனில் மாநில அரசின் மானியத் தொகையான ரூ. 7,000-ஐ ரூ. 10,000-ஆக உயர்த்தித் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். புதிய கடன் வசதியுடன் சென்னிமலையில் 1,010 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் படித்தேன். இதனை நெசவாளர்கள் அதிகமாக வாழுகின்ற தாராபுரம் மற்றும் கரூர் போன்ற இடங்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டுகிறேன்.

நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகையினை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்திக் கொடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்கி வருகின்ற 18 நூற்பாலைகளும் நல்ல நிலையில் இயங்குவதற்கு நமது அரசு எடுத்து வருகின்ற எல்லா முயற்சிகளையும் நாம் அறிவோம். இருந்தபோதிலும் NABARD புதிய காசுக் கடனுக்கு அனுமதி அளிக்காத நிலையில் 8 கூட்டுறவு நூற்பாலைகள் தங்கள் செயல்திறனை அபிவிருத்தி செய்ய இயலவில்லை என்று கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 8 நூற்பாலைகளுக்கும் தனிக்கவனம் எடுத்து NABARD-லிருந்து புதிய காசுக் கடனுக்கான அனுமதியைப் பெற்றிட வேண்டுகிறேன்.

நண்பகல் 12-00

எங்கள் தாராபுரம் பகுதியில் இயங்கிவரும் ஆலை மூடும் அளவிற்கு வந்த சமயத்தில் நம் துறையின் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணையுடன் இன்று நல்லமுறையில் சிறப்பாக நடைபெறுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவைக்கு வந்து 4 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் எழுதிவைத்துப் படித்துக் கொண்டிருக்கிறார்களா?



2000 மே 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கல்விக் கடவுள் சரஸ்வதி, அதனால்தான் படிக்கிறார்கள். (சிரிப்பு)

**திருமதி ஆர். சரஸ்வதி:** இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் பணியாளர் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கதர் பட்டுப் புடவையைப் பொறுத்தமட்டில் அது மக்களிடையே பெருத்த வரவேற்பையும், தரமானது என்ற நம்பிக்கையையும் பெற்றுள்ளது. விழாக் காலங்களில் மட்டுமே அதற்கான தள்ளுபடியை வழங்காமல் வருடம் முழுவதும் குறைந்த அளவிற்காவது தள்ளுபடி வழங்கினால் இன்னும் அதிகமாக விற்பனையாகும். இதனால் நெசவாளர்களுக்கும் வருடம் முழுவதும் வேலை கிடைக்கும், வருமானம் கிடைக்கும் என்பதால் இதனை அரசு பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தாராபுரத்தில் இயங்கிவரும் கதர் கிராமத் தொழில் வாரிய அலகு போன்று தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் வாரியத்தின்மூலம் காலணிகள் சிறந்த முறையில் வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டு வந்தன. இதனால் தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவினருக்கு பெட்டி செய்வது போன்றவற்றிற்கெல்லாம் மானியத்துடன் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன. சரியான முறையில், பயனாளிகள் பயன்பெறாத வகையில் வழங்கப்பட்டு முறைகேடுகள் நடந்த காரணத்தால் அந்தக் கடன் திட்டம் தற்போது அதிகமாக வழங்கப்படுவது இல்லை. ஆகவே மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் உரியவர்களுக்கு, திறமையின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வில் முன்னேற மானியத்துடன் கடன் உதவி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தற்போது புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் கரை ஒட்டாத பட்டுப் புடவைகள் பொறுத்தளவில் அதிக விலை உள்ள புடவைகள் மட்டும் அல்லாது குறைந்த விலை உள்ள புடவைகளையும் தயாரிப்பீர்கள் என்றால் மக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளதாக இருக்கும்.

(மணியடிக்கப்பெற்றது)

துவைக்கும் சோப்பு, சந்தன சோப்பு, வேம்பு சோப்பு போன்ற சோப்புகள் மக்களிடையே அதிகப்படியான வரவேற்பைப்பெற்று உள்ளது. ஆனால் விலையைச் சிறிதளவு குறைத்துக் கொடுப்பீர்கள் என்றால் இன்னும் பொருட்கள் இருப்பில் இல்லாமல் அதிகளவில்

விற்பனையாகும் இதனால் உற்பத்தியாளர்களுக்கும் பணிகள் தொய்வில்லாமல் நடக்கும். இதுபோல் மண்பாண்டங்கள், பிரம்பிலான பொருட்கள், நாற்காலிகள் போன்ற பொருட்களுக்கு வெளிநாட்டிலும் வரவேற்பு உள்ளதாக அறிந்தேன். இந்தப் பொருட்களைச் செய்பவர்களுக்குக் கடன் உதவி வழங்கி இவர்கள் பணிகளை ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடுக்காய் பதப்படுத்தல், பாய் முடைதல், புங்கம் எண்ணெய் பிழிந்து எடுத்தல் போன்ற வேலைகளுக்காக மலைவாழ் மக்களில் 6,086 பேர் பயனடைய 2 கோடி ரூபாய் செலவில் அரசு வேலைவாய்ப்பை உருவாக்கி உள்ளது என்பது போற்றுதலுக்குரியது.

கைத்தறி நெசவாளர்கள் வருத்தமின்றி வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு பல திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் நிலையிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் துணிகளை மாநில சங்கமான கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து விற்பனை செய்வதால்தான் நெசவாளர் சங்கங்கள் அதனை நம்பி வாழும் நெசவாளர்களுக்கு தொழிலையும், கூலியையும் கொடுக்க இயலும். மாநிலச் சங்கத்திற்கு அரசிடமிருந்து பெறக்கூடிய தள்ளுபடி வட்டி மானியம், இலவச வேட்டி சேலை திட்டத்திற்கான தொகை மற்றும் சீருடைத் திட்டத்திற்கான பணம் ஆகியவை அரசிடமிருந்து உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றால்தான் கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தத் தொகைகளை வழங்கி அதன்மூலம் சங்கங்களும் சிறப்பாகச் செயல்பட முடியும். எனவே நெசவாளர்களின் வாழ்க்கையில் வருவாய் கருதி கோ-ஆப்டெக்சுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய தொகையை தடையின்றி உடனுக்குடன் வழங்கிட ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் கடவுளை முழுக்கப் படிக்க அனுமதிப்பதுதான் நல்லது. ஆகவே அவர்கள் முழுக்கப் படித்து முடிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்காக சபை முடியும் வரையிலே படித்துக்கொண்டே இருப்பதா? ஒதுக்கிய நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களில் யாரோ ஒருவர் அல்லது இரண்டு



பேர் பேசுகிறார்கள். எழுதி கையில் வைத்துப் பேசினால் தவறு இல்லை. தயவுசெய்து அதைப் பெரிதாக நினைக்க வேண்டாம்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு சரிசமம் வேண்டும், சரிசமம் வேண்டும் என்றால் இதிலே மட்டும் சரிசமம் இல்லையா என்பதை மாண்புமிகு மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் படித்து முடியுங்கள்.

*பிற்பகல் 12-05*

**திருமதி ஆர். சரஸ்வதி:** கைத்தறித் துணிகள் தேக்கமின்றி விற்பனையாவதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின்படி, தமிழக அரசின் பல்வேறு துறை அலுவலகங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் போன்ற அனைத்து வகை அலுவலகங்களுக்கும் தேவையான துணிகள் வாங்கும்போது, கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. இதனால் கைத்தறித் துணிகளின் விற்பனை முன்னேறி வருகின்றது.

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டுவரும் துணிகளின் தன்மையும், தரமும் பிற மாநிலங்களின் கைத்தறித் துணிகளைவிட நன்றாகவே உள்ளதால், மத்திய அரசுத் துறை நிறுவனங்களான, இரயில்வே, மருத்துவ நிலையங்கள் மற்றும் தபால் துறை ஆகியவற்றிற்கு நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை வழங்குவதற்கு மத்திய அரசிடம் கோரலாம்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறைந்த வட்டியில் நடைமுறை மூலதனம் வழங்குவதற்காக கூட்டுறவு வங்கிகளுக்கு வட்டி மானியம் வழங்கப்பட்டு வந்தது. இது கூட்டுறவு மானியத்திற்கு மிக முக்கியமானது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2000 மே 5

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை, கதர்த் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுகிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு தேர்தல் காலத்திலே வாக்குக் கேட்கிறபோது, மூடிய ஆலைகளைத் திறப்போம் என்கிற வாக்குறுதியை நாட்டு மக்களுக்குத் தந்து ஆட்சிக்கு வந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆனால் திறந்திருந்த ஆலைகளை மூடி சாதனை படைக்க வேண்டும் என்கிற கோணத்தில் இந்த அரசு 18 நூற்பாலைகளில் 4 நூற்பாலைகளை ஏற்கெனவே மூடி இருக்கிறது என்கிற வரலாற்றினைப் புரட்டிப் பார்க்கிறபோது, இந்த அரசு சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. மூடிய ஆலைகளைத் திறப்போம் என்று சொன்ன அரசு, இன்று 4 கூட்டுறவு நூற்பாலைகளை மூடிவிட்டு இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருப்பதைத்தான் எங்களாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே இந்த அரசு 4 கூட்டுறவு நூற்பாலைகளை மூடியதற்கான முகாந்திரத்தை அமைச்சர் அவர்கள் பெரிய விளக்கமாகச் சொல்லக்கூடும். ஆனால் அந்த விளக்கத்தையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலையில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். 185 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இவற்றையெல்லாம் புனரமைப்புச் செய்வதற்குக் கொடுத்தார்கள். ஒரு நூற்பாலைக்கு 10 கோடி ரூபாய் வீதம் 18 நூற்பாலைகளுக்கு ஒதுக்கிக் கொடுத்திருந்தாலும்கூட, அந்த 4 நூற்பாலைகள் இப்போது மூடப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலைக்கு அவலநிலைக்கு ஆளாகியிருக்கிறது. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில், கர்ம வீரர் காமராஜர் காலத்தில் தொடங்கப்பட்ட அரியூர் கூட்டுறவு நூற்பாலை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில்கூட... சில நேரங்களிலே மூடப்படக்கூடிய நிலை வந்தபோது நாங்கள் எல்லாம் போராட்டம் நடத்தி தொடர்ந்து அந்த ஆலையை நடத்தினோம். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், நிச்சயமாக அந்த ஆலையை வெற்றிகரமாக நடத்தும் என்று நினைத்தோம். மாண்புமிகு முதல்வர் அளித்த ரூ. 185 கோடி புனரமைப்பு நிதியிலிருந்து 10 கோடி ரூபாயைக் கொடுத்திருந்தாலே போதும், நிச்சயமாக எங்களுடைய ஆலை தொடர்ந்து அந்த இடத்தில் நடந்திருக்கும். ஆனால் நம்முடைய அமைச்சர் ஏனோ—

*(குறுக்கீடு)*



2000 மே 5]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. ரூ. 185 கோடிக்கு, கட்ட வேண்டிய கடன், attachment ஆகியவைகளையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ரூ. 10 கோடியை நேரடியாகக் கொடுத்து ஆலையைத் திறந்துவிட முடியாது. IDBI ல், ICICI ல் அதுபோல Financial institution-ல் உள்ள நிலுவை மற்றும் பஞ்சுக் கடன் இவ்வளவையும் வைத்துக்கொண்டு இருக்கிறோம். 25,000 ஸ்பின்டில் உள்ளது. 50,000 ஸ்பின்டிலுக்கு அங்கே தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதை யாரும் கண்டிக்கவில்லை என்பதையும் தாங்கள் மறந்துவிடக் கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்போது இந்த ஆலையை நீங்கள் மூடிவிடப்போகிறோம் என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** அப்படியல்ல. அதற்கேற்ற வழிமுறைகள் அனைத்தும் கடைப்பிடிக்கப்பட்டுவிட்டன. 268 பேர் இன்று V.R.S.-லே வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு உரிய நியாயமான பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் விரைவிலே, யார் யார் செல்ல விருப்பம் தெரிவிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுத்த பின்புதான் மிகச் சிறப்பாக, எப்படியும் உங்களையும் கலந்துதான் அந்த ஆலையை இயக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூடிய ஆலைகள் சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அதோடு எனக்கும் தொடர்பு இருக்கிற காரணத்தால் ஒரு விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இந்த அரசு இரட்டை வேடம் போடுவதாகவும், ஆலைகளை எல்லாம் தொடர்ந்து மூடுவதாகவும், திறப்பதற்கு முயற்சிகளை எடுக்கவில்லை என்றும் ஒரு கடுமையான குற்றச்சாட்டை, தேர்தல் வாக்குறுதிக்கு மாறாக நடக்கிறார்கள் என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டை தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டார்கள். அவருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அளவில்—நான் ஏற்கெனவேகூட இதைக் குறிப்பிட்டிருக்கிறேன்—பல்வேறு மாநிலங்கள்

இருக்கின்றன. முற்போக்கான மாநிலம் என்று சொல்லப்படக்கூடிய மேற்கு வங்கத்திலேயே 227 ஆலைகள் B.I.F.R.-லே இருக்கின்றன. 57 ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கிறார்கள். அதைப்போல இராஜஸ்தானில் 83 ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. நான் இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் ஏதோ என்னுடைய கற்பனையிலே இருந்து சொல்லவில்லை. அண்மையில் டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டிலே அந்த அமைச்சர்களே, இந்தப் புள்ளிவிவரங்களை எடுத்து வைத்து அது சம்பந்தமான புத்தகங்களை வெளியிட்டார்கள். இங்கே ஆலைகள் மூடப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. நிதி நெருக்கடி, Liquidation, Court Cases, இன்னும் சொல்லப்போனால் International competition in fixing prices—so many crises எந்த Labour dispute-ம் கிடையாது. Closure of Mills கிடையாது. உதாரணமாகக் கேட்கிறேன். பகாலட்சுமி மில் போன்ற மில்கள் Textiles-லேதான் வருகின்றன. Promoters வைத்து நடத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் நானும் மேற்கொண்டேன். சம்பந்தப்பட்ட அமைச்சரும் மேற்கொண்டார். சென்னையிலே பேசினோம். திருச்சியிலே பேசினோம். எல்லோரையும் அழைத்துப் பேசினோம். ஆனால் இதுவரையில் Promoter கிடைக்கவில்லை. High Court-லே liquidation-ல் இருக்கிறது. Liquidation என்றால் என்ன அர்த்தம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியூர் கூட்டுறவு நூற்பாலை எந்த liquidation-லும் இல்லையே?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** நான் சொன்னது பொதுவான கருத்து.

**திரு. சி. ஞானசேகரன்:** பொதுவான கருத்தை நான் கேட்கவில்லை. அரியூர் கூட்டுறவு நூற்பாலையைப் பற்றிக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நான் தெளிவாகச் சொன்னேன். ஒவ்வொரு மில்லுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. கூட்டுறவு ஆலைகளில் ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு காரணம்



உண்டு. Industries— நிறுவனங்களுக்கு ஒவ்வொரு காரணம் உண்டு. இப்போது நான் சொல்வது, தேர்தல் அறிக்கைக்கு மாறாக இந்த அரசு ஆலைகளை மூடுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது, எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு, பொதுவான உங்கள் குற்றச்சாட்டுக்கு பொதுவான பதில்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கு வங்கத்திலே 227 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்ற விவரங்களை எல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால் மேற்கு வங்கத்திலே மூடப்பட்டிருக்கிற அந்த ஆலைகள் மூடலுக்கு மேற்கு வங்க அரசு காரணமல்ல. மத்திய அரசினுடைய தொழில் கொள்கைகள்தான் காரணம் என்பது நிரூபிக்கப்பட்ட ஒரு விஷயம். இது ஒன்று. இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது ஆளுகின்ற மத்திய ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகமும் ஓர் அங்கம். சமீபத்திலே மத்திய அரசு என்ன முடிவை எடுத்திருக்கிறது என்றால், B.I.F.R. சட்டத்தையே இரத்து செய்துவிடுவது என்று முடிவெடுத்துவிட்டது. நலிவுற்ற ஆலைகளின் நலிவை நீக்கிச் செயல்படுத்துகின்ற சட்டத்தையே நீக்கிவிடுவது என்று மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறதே, அதில் திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அங்கம் ஆயிற்றே. நீங்கள் எப்படி நலிவடைந்த ஆலைகளை மீண்டும் செயல்படுத்துவீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய எல்லாக் கொள்கைகளையும்—இட ஒதுக்கீடு கொள்கை இருக்கிறது. இந்தி சம்பந்தமான கொள்கை இருக்கிறது. சிறுபான்மை மக்களுடைய கொள்கை இருக்கிறது. பல்வேறு கொள்கைகள் இருக்கின்றன. ஆக, எல்லாக் கொள்கைகளையும்—அந்த அணியிலே நாங்கள் இருப்பதால் ஏற்றுக்கொள்கிறோம் என்று பொருள் அல்ல. அது வேறு விவகாரம். ஆனால் மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே SIMA என்று சொல்லக்கூடிய நிருவாகத்தைச் சார்ந்தவர்கள், தொழிலாளர்களின் அத்தனை பேரவைகளையும் கூட்டி வைத்து சென்னையிலே முதலமைச்சர் அவர்களே பேசினார்கள். முதலமைச்சர் பேசியதோடு மட்டுமல்ல, Upgradation fund-லேயிருந்து திறப்பதற்கு பண உதவி செய்ய வேண்டுமென்று நேரடியாகவும் சொன்னார்கள். கடிதமும்

விரும்புகிறேன்; 5 ஆண்டுகள் அவை இயங்கியிருக்க வேண்டும்; இதைக் கொடுப்பதற்கு முன்பாக ஓராண்டு மூடப்பட்டிருக்க வேண்டும்; அந்தத் தொழிற்சாலையில் வேலை பார்த்தவர்கள் வேறு பணிகளில் ஈடுபடக்கூடாது என்பன போன்ற விதிமுறைகள் (norms) இருக்கின்றன— அந்த விதிகளுக்கு உட்பட்டுத்தான் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு கொடுத்திருக்கிறோம். அந்த விதிமுறையை மீறிக் கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கு உரிமையுண்டு. ஆனால் ஒரு சட்டத்தை உருவாக்கிவிட்டு, அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுவதுதான் அரசாங்கத்தினுடைய கடமை. *உண்மைக்கு மாறாக என்று, நாடாளுமன்ற வார்த்தைகளுக்கு விரோதமாக அவர் பேசினார். திரும்ப நான் பேசினால், அவர் தாக்குப் பிடிக்கமாட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்பதற்குப் பதிலாக உண்மைக்கு மாறாக என்று மாற்றிக் கொள்ளவும். திரு. சி. ஞானசேகரன், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தாக்குப்பிடிக்க முடியாமல்தான், இன்னும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் உங்களுக்கு, மூன்றாண்டுகள் ஆகின்றன; ஆலையை மூடி, திறக்க முடியாமல் இருக்கிறீர்கள். 250 ரூபாய் கொடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தும்கூட, இன்றுவரை உங்களாலே கொடுக்க முடியாமல், Screening Committee என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பற்றி நான் சொல்லவில்லை. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் எங்களிடம் தாக்குப்பிடிக்க முடியாமல், சகித்துக்கொண்டு, இன்னும் அந்த 250 ரூபாயைக்கூடக் கொடுக்க முடியாமல், திணறிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உங்களுக்குக் கூறிக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே ஜுன் மாதம் 31 ஆம்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.



தேதியன்று அரியூர் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பேன் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னார்கள், விளையாட்டாக. ஜுன் 31 ஆம் தேதி, கிடையாது என்கிற பொருளிலே சொன்ன காரணத்தினாலோ என்னவோ, இன்றுவரை அந்த ஆலை திறக்கப்படாமல் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள், பாவம், மூன்று வருடங்களாக சம்பளம் பெறாமல் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள், ஏதோ புனரமைப்பு செய்து கொண்டிருக்கிறோம்; NABARD-லே கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், மூன்று வருடங்களாக எப்படிப் பிழைப்பான் அவன். தொழிலாளர்களுக்கு பக்கா விரோதமாக இருக்கக்கூடிய காரணத்தினால் அல்லவா இப்படி அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் எப்போது திறக்க இருக்கிறீர்கள் என்பதையாவது இந்த முறை திட்டவட்டமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆலைக்கு 50 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் இப்போது 20 ஏக்கரில்தான் தொழிற்சாலை இருக்கிறது. மீதமுள்ள 30 ஏக்கர் நிலத்தை விற்றாவது அவர்களுக்கு நிவாரணத் தொகையைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா, நம்முடைய மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள், இன்று நூற்பாலைகளுடைய நிலையை முழுமையாக அறிந்தவர், படித்தவர், மெத்தத் தெரிந்தவர். அரியூர் ஆலைக்கு மட்டும் நீங்கள் வாதாட வேண்டியதில்லை; அனைத்து ஆலைகளுக்கும் வாதாடக்கூட உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் அரியூர் ஆலையிலே இருக்கின்ற பிரச்சினையை நீங்களும் அறியாதது அல்ல, நானும் அறியாதது அல்ல. ஆனால் உங்களுடைய திட்டம் என்னவென்றால், எப்படியாவது வாயைப் பிடுங்கி ஒரு தேதியை வாங்கி, அதை Assurance Committee-யிலே நாளைக்குக் கொண்டுபோய் அல்லது வேறு கமிட்டியிலே அதைக் கொண்டுபோய் இந்த அமைச்சர் இப்படிச் சொல்லிவிட்டு மாற்றிவிட்டாரே என்று அதையே ஒரு குற்றம் குறையாகச் சொல்வதற்கு இதைப் பயன்படுத்துவது நியாயமல்ல. தெரியாத ஒன்றை வேண்டுமானால் எனக்குச் சொல்லித் தரலாம். நீங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய கொறடாவாக இருந்துகொண்டு, ஏன்

எழுதினார்கள். இப்போது அதற்கான முயற்சியை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம். ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விஷயம் வேறு வழியிலே திரும்பிவிட்டது. மன்னிக்க வேண்டும். ஆலையை மூடுவதுதான் உங்களுடைய கொள்கையா என்ற ஒரு கேள்விக்கு இவ்வளவு பெரிய பிரச்சினை தேவையில்லை. ஆலைகளை மூடுவதில்லை என்ற அபிப்பிராயத்திலேதான் நான் ஏற்கெனவே சொன்னேன். புதுக்கோட்டை ஆலைக்கும், அரியூர் ஆலைக்கும் ஒட்டுமொத்தமாக எங்களிடம் கேட்கப்பட்ட தொகை 11 கோடியே 52 இலட்சம். இதிலே 4 கோடியே 45 இலட்சம்தான் principal amount. வட்டி, 7 கோடியே 52 இலட்சம். இந்த 7 கோடியே 52 இலட்சத்தைத் தள்ளுபடி செய்து. இந்த இரண்டு ஆலைகளினுடைய கடனையும் நாங்கள் கட்டியிருக்கிறோம். இதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆலையைத் தொடர்ந்து இயக்க முயற்சி எடுக்கிறோம் என்பதற்கு இதைத் தவிர வேறு என்ன ஆதாரம் வேண்டும். ஆகவே தயவுசெய்து வேறுவிதமாக திசை திருப்புவது என்பது, உண்மையிலேயே நம்முடைய ஒட்டுமொத்த ஜவுளித் தொழிலில் நாம் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இந்த விவாதத்தை இந்த அளவிற்கு நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் கொறடா அவர்கள் கொண்டு சென்றால் அது சற்று சங்கடமான செய்தியாகும். அன்றாடம் இதிலே ஈடுபட்டிருக்கின்ற அனைவருமே ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு இவ்வளவு பெரிய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து இன்று காத்துக் கொண்டிருக்கின்ற வேளையில் இதைப் ,பெரியதொரு விவகாரமாக உருவாக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய பணிவன்பான வேண்டுகோள்.

பிற்பகல் 12-15

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்மீது நான் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் சொன்னார், ஏற்கெனவே மேற்கு வங்காளத்திலே மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்குப் பிழைப்பூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ. 500 கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று. இங்கே அரியூர் கூட்டுறவு நூற்பாலை, சாரம் கூட்டுறவு நூற்பாலை, பிசேரியர் கூட்டுறவு நூற்பாலை, மேலூர் கூட்டுறவு நூற்பாலை, இவையெல்லாம் மூடப்பட்டு பல நாட்கள் ஆகிவிட்டன. வேலூர், அரியூர் கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. மூன்று வருடமாக மூடப்பட்டுவிட்ட பின்னாலும்கூட— இது அலியா, ஆணா, பெண்ணா என்று இல்லாமல், அலியாக இருக்கும்— மூடப்பட்ட தொழிற்சாலை என்று கணக்கு வருமேயானால், மாதம் 250 ரூபாயை அந்தத் தொழிலாளர் துறை கொடுத்திருக்க வேண்டும். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், norms வரவில்லை; அதை மூடிய தொழிற்சாலையாக நாங்கள் கணக்கில் எடுக்கவில்லை என்று, ஒரு *உண்மைக்கு மாறாகச் சொல்லி, ஏமாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர் நலத் துறை, இப்போது 250 ரூபாயை—



**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொல்கிற ஆலைக்கு, நிவாரணத் தொகை ரூ. 250 கொடுக்க வேண்டும் என்ற கருத்தை, இன்னும் சொல்லப்போனால், அந்த தொகுதியைச் சார்ந்த பலரும் வலியுறுத்தியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் சண்முகம் அவர்களும் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் இதை வலியுறுத்தியிருக்கிறார். ஆக இந்தக் கோரிக்கை ஒரு தனிப்பட்ட கட்சியின் ஏகபோக கோரிக்கையாக இல்லாமல் அனைத்துத் தரப்பினராலும் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு முறையாக பதில் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மூடிய ஆலைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அத்தனை தொழிலாளர்களுக்கும் 250 ரூபாயைக் கொடுப்பது என்பது எப்படி என்பதை அறிய, ஒரு Screening Committee அமைத்து, அதிலே நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அத்தனை பேரையும் வைத்து, West Bengal Government-ல் என்ன norms வைத்து இருக்கிறார்களோ, அதைப்போல—உதாரணமாக நான் சொல்ல

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [2000 மே 5

தொழிலாளர்களுடைய நலனை மட்டும் எடுத்துக் கொள்கிறீர்கள். கோடிக்கணக்கிலே முதலீடுகளை அதிலே போட்டு இருக்கிறோமே. அதற்கு லாபம் வரவில்லையே. அதற்கு ஏன் இன்று எங்களை நீங்கள் கேட்கக்கூடாது. கோடிக்கணக்கான முதலீடுகளைப் போட்டு, லாபம் வரவில்லையே என்ற கேள்வியைவிட, தொழிலாளர் நலன் என்பது எல்லோருக்கும் பொது. ஆனால் போட்ட முதலீட்டுக்கு லாபம் இல்லையே. அதற்கு என்ன வழி என்று நீங்கள் கேட்கவில்லையே? ஆகவே தயவுசெய்து நான் கேட்டுக் கொள்வது, இந்திய அளவிலே ஜவுளித் தொழிலினுடைய நிலைமை உங்களுக்குத் தெரியும். அதையொட்டி உங்களுடைய உரை இருப்பதுதான் சாலச்சிறந்தது; ஏற்றுக்கொள்ளக் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிந்து விட்டது. நேரமாகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போதாவது அதிகாரிகளை வைத்துப் பேசி, கூடிய விரைவில்— ஏற்கெனவே நீங்கள் அரியூர் கூட்டுறவு ஆலையைத் திறப்பேன் என்று 3 முறை உறுதிமொழி கொடுத்துவிட்டீர்கள். இன்னும் திறக்கவில்லை. ஆகவே கூடிய விரைவில்—அதைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கதர் வாரியத்தில் [illegible] கருத்தை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 4.45 கோடி ரூபாய் அசல்; 7.7 கோடி ரூபாய் வட்டி. நான் இதற்காக 4.4 கோடி ரூபாயைக் கட்டி, அந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்று இருக்கிறேன் என்பதைத் தெரிவித்த பின்பும், அதை நீங்கள் மீண்டும் வற்புறுத்துவது எந்த விதத்திலே நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை.



2000 மே 5]

**திரு. சி. ஞானசேகரன்:** எப்பொழுது திறக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கூடிய விரைவில் ஒரு வார காலத்திற்குள் திறந்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பனை பொருள் வாரியம் என்று ஒன்றை 1995 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது திறந்தார்கள். கிட்டத்தட்ட 6½ கோடி பனை மரங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கின்றன. 20 இலட்சம் மக்கள் அந்த பனைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அந்த வாரியம் உருவாக்கப்பட்ட காரணத்தினாலோ என்னவோ, அதற்கு போடப்பட்ட I.A.S. Officer-ஐயும் எடுத்துவிட்டார்கள். அதற்கு எந்தவிதமான நிதி ஒதுக்கத்தையும் கொடுக்கவில்லை. அதற்கு மூடுவிழாவே செய்துவிட்டார்கள். கிட்டத்தட்ட 20 இலட்சம் பனைத் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த பண உதவிகூட இல்லாமல் பாவம், நசிந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல பனை பொருளுக்கு இருக்கக்கூடிய— (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** நான் முடித்து விடுகிறேன். இன்னும் ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏகப்பட்ட நேரமாகிவிட்டது. சண்டை போட்ட நேரமே அதிகம். திரு. பி.என். சுப்பிரமணி.

***திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள 10,000 தறிகளில், முயற்சிகள் மேற்கொண்டு சுமார் 25 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

60 வயதைத் தாண்டிய நெசவாளர்களுக்கு வழங்கிவரும் மாத ஓய்வூதியம் ரூபாய் 150 லேயிருந்து 200 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்கிற அறிவிப்பு பாராட்டப்பட வேண்டியதாகும். அதேநேரத்தில், தனியார் நெசவுத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிவகை செய்யக் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணிகளுக்கு மார்க்கெட் கிடைப்பதற்கு வழிவகை காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு தேனாக இருக்கிறது.

கொள்கை விளக்கக் குறிப்பிலே நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 30 சதவிகிதம் துணி நெசவு மூலம், அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. அதைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். ஆகவே இந்தக் கருத்தின்மீது சில விளக்கங்கள் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். 'மியான்மர்' என்று அழைக்கப்படுகின்ற பர்மா நாட்டின் தேசிய உடை லுங்கியாகும். அந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பை உருவாக்கி, ஸ்டால்களை அந்த நாட்டிலே அமைத்து தரமான கைத்தறி லுங்கிகளை அறிமுகம் செய்தால் லுங்கிகளை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உருவாகும். மேலும், ஏற்றுமதி செய்யும் லுங்கிக்கு பதிலாக, அந்த நாட்டிலுள்ள பர்மா தேக்கு மரங்களை இறக்குமதி செய்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தினால், நமது நாட்டில் கட்டடங்கள் கட்ட தரமான மரங்கள் கிடைக்கும். நம் நாட்டில் தயாராகும் கைத்தறி லுங்கியும் விற்பனை ஆகும். மேலும் தமிழ்நாட்டிலேயிருந்து ஆண்டாண்டு காலமாக, பங்களாதேஷ், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு கைத்தறியில் தயாரிக்கப்பட்ட லுங்கிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன் கிழக்காசிய நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, அந்த நாட்டிலுள்ள வங்கிகளில் ஒரு வெள்ளி கட்டினால், 14 ரூபாய் கிடைத்து வந்ததற்கு மாறாக கடந்த இரண்டரை ஆண்டுகளுக்குமுன், 8 ரூபாய் 30 பைசாதான் கிடைத்தது. ஓரளவுக்கு 11 ரூபாய் அளவிற்கு இப்போது கிடைக்கிறது. அதனால் ஓரளவு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு உருவாகியுள்ளது. தற்போது விசைத்தறியினால் தயாரிக்கப்பட்ட லுங்கிகளை, கைத்தறி என்கின்ற I.S.I. முத்திரை குத்தியும் கைத்தறிபோல் துணி ஓரத்தில் சின்ன ஓட்டைபோட்டும் ஏற்றுமதி செய்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



பிற்பகல் 12-25

மேலும் கடந்த 30 ஆண்டுகளுக்குமுன், Bleaching Madras என்னும் துணியை கைத்தறியில் தயாரித்து, தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்து வந்தார்கள். தமிழக கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அதிகமான ஊதியம் பெற்று மகிழ்ச்சியான, வளமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். நாளடைவில் விசைத்தறியால் தயாரான துணிகளை ஏற்றுமதி செய்ததனால், கைத்தறிக்கும், விசைத்தறிக்கும் உள்ள வேறுபாட்டால், அந்த நாடுகள் இறக்குமதி செய்வதை நிறுத்தியதோடு மட்டுமல்லாமல், இறக்குமதி செய்த சரக்கையும் திருப்பி அனுப்புகின்ற அவலநிலை ஏற்பட்டது. இதனால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் மகிழ்ச்சி போய் அல்லல்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே தமிழக அரசும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் இதில் முழுக் கவனம் செலுத்தி, கைத்தறித் துணிக்கென அரசினால் ஒதுக்கப்பட்ட 11 இரகங்களை விசைத்தறியில் தயாரித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தயாராகும் சிட்டா நூலுக்கு இரண்டு சதவிகிதம் வரி உள்ளது அண்டை மாநிலமான ஆந்திராவில் வரியில்லை. கர்நாடகாவில் ஒரு சதவிகிதம் வரி உள்ளது. இதனால் தமிழ்நாட்டில் தயாராகும் கைத்தறி, விசைத்தறி துணிகளுக்கு அடக்கவிலை அதிகமாவதால் மற்ற மாநிலங்களுடன் போட்டிப்போட்டு வியாபாரம் செய்ய முடியாமல் தேங்கி நிற்கிறது. ஆகவே சிட்டா நூலுக்கு உள்ள வரியை இரத்து செய்து, விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ள நெசவுத் தொழிலைப் பாதுகாக்கவும், தொழிலாளர்களின் வாழ்வு மலரவும் சின்னச்சின்ன இழைகளைப் பிரித்து, அமைதியாக, கவனமாக செய்து, வண்ண வண்ண உடைகளைத் தயாரிக்கும் ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 1,467 பெரிய, சிறிய நூற்பாலைகள் இயங்கி வருவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆலைகளில் cone நூலையும், சிட்டா நூலையும் தயார் செய்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையிலுள்ள மில்களில், ஒருசில மில்களைத் தவிர மற்றவற்றில் தரமான நூல் தயாரிக்கப்படுவதில்லை.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மே 5

பகுதியினைச் சேர்ந்தவர். அப்படிப்பட்ட திறமையான நல்லதொரு உறுப்பினரை அமைச்சராகத் தேர்வு செய்து அந்தத் துறைக்கு நியமித்ததன் பலனாக இன்றையதினம் 18 நூற்பாலைகள் தமிழகத்திலே இயங்கி . . .

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன் வரிசையிலே இருப்பவர்கள் எல்லாம் இப்படி எழுதி வைத்துப் படிக்கக் கூடாது. 4 வருடம் ஆகிவிட்டது. பார்க்கிறவர்கள், மற்றவர்கள் எல்லாம் நம்மைப் பற்றி ஏதாவது நினைத்துக்கொள்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எழுதி வைத்துப் படிப்பதற்கும், குறிப்புகளை வைத்துப் பேசுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர் குறிப்பை வைத்துப் பேசுகிறார். திரு எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேப்பரில் எழுதி வைத்துக்கொண்டு, அப்படியே படிக்கக்கூடிய பழக்கம் எனக்கில்லை. குறிப்புக்காக வைத்திருக்கின்றேனே தவிர, வேறல்ல. மேடையிலே பல மணி நேரம் பேசக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல் படைத்தவன் என்பதை என்னுடைய தோழர் இந்திய தேசிய லீகினுடைய கட்சியைச் சார்ந்தவருக்குப் பொறுமையாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே சுட்டிக்காட்டியதற்கு நன்றி சொல்லிக்கொண்டு தொடர்ந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், ஒவ்வொரு துறைக்கும் சரியான அமைச்சரை, முறையாகத் தேர்ந்தெடுத்ததால், அந்தத் துறைகள் இப்போது நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை தமிழக மக்கள் அறிவார்கள். தமிழகத்திலே உள்ள 18 நூற்பாலைகள் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 18 நூற்பாலைகள் நலிவுற்றிருக்கின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டி, NABARD மூலமாக அதற்குக் கடன் உதவி பெற்று, அவற்றைச் செயல்படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே துறையினுடைய அமைச்சருக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றி



2000 மே 5] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள கரூர் கூட்டுறவு நூற்பாலை நாம் ஆட்சிப் பொறுப்பேற்கின்ற நேரத்திலே, நலிந்து இழுத்து மூடப்பட்டிருந்தது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அந்த நூற்பாலையில் பணியாற்றும் ஏறத்தாழ 800 தொழிலாளர்களுக்கு, 6 மாதத்திற்கு மேல் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்லி 1 கோடி ரூபாயை கடன் உதவியாக வழங்கி, உடனடியாக அவர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மேலும் நூல் கொள்முதல் செய்வதற்கும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளியே விற்பதற்கும் உரிய முயற்சிகளை மேற்கொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-35

அந்த ஆலையில் Voluntary Retirement-ல்—விருப்ப ஓய்வு பெற்று, வெளியே செல்வதற்காக பல பேர் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களை உடனடியாக அனுப்பி வைப்பதற்கு போதிய நிதியாதாரம் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, அந்தத் தொகையைப் பெற்று, அவர்களை வெளியிலே அனுப்பிவிடுவோமானால், நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற நூற்பாலையானது, சிறப்பாக நடப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தினை ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். காரணம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கூலி ரூ.100/-க்கு மேலாக இருக்கிறது. ஆகவே தொடர்ந்து அவர்கள் பணியிலே இருக்கின்ற காரணத்தினால் அவர்களை Voluntary Retirement-ல் அனுப்பிவிட்டு, புதியதாக நியமிக்கப்படுபவர்களுக்கு புதிய கூலி நிர்ணயம் அளிக்கப்படுகின்றபோது அந்தக் கூலியின் பயனாக குறிப்பிட்ட தொகை மிச்சமாகும். அப்போது அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு லாபம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தலைவராக பரமத்தி சண்முகம் அவர்களை அமைச்சர் அவர்கள் நியமித்ததற்குப் பிறகு அந்தத் துறை இன்றையதினம் விற்பனையிலே முன்னுக்கு வந்திருக்கிறது.

அதனால் நஷ்டத்தில் இயங்குவது மட்டுமல்லாமல், நூல் தேங்கி நிற்கும் நிலையுள்ளது. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரியூர் மில்லில் கடந்த காலத்தில், தி.மு.க. ஆட்சியில் தயாரான நூல் தரமான நூலாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த மில்லில கடந்த அதி.மு.க. ஆட்சியில் சில வருடங்களாக தரமான பஞ்சு கொள்முதல் செய்யாமையினால், கார்டட் நூல் தயாரித்ததனால், நூல் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. அந்த மில்லில், தரமான பஞ்சை கொள்முதல் செய்தால், அந்த நூல் வேகமாக, தேங்காமல் விற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆலையை சீர்செய்தால் இலாபம் ஏற்படும், நூல் தேக்கம் ஏற்படாது என்ற கருத்தினைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்று, தரமான பஞ்சு வாங்கும் வரதராஜா, கார்த்திகேயா போன்ற தனியார் நூல் வியாபாரிகள் போட்டிபோட்டு, அவர்கள சொல்லும் விலைக்கு மில்களில் தயாராகும் நூலை விற்பனை செய்கிறார்கள். உலகிலேயே தரமான பஞ்சு எகிப்து, சூடான் நாட்டில் தயாராகும் பஞ்சு ஆகும். அந்தப் பஞ்சை கொள்முதல் செய்து, கூட்டுறவு மில்களுக்குக் கொடுத்தால், நூல் தரமாக தயாராகும். அந்த நூலில் துணி தயாரித்தால், துணி தேங்காமலும், உலகத்திலேயே அதிக விலைக்கும் துணியை விற்கலாம் என்ற எனது கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து ஆற்காடு தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூறி முடித்துக்கொள்கிறேன். ஆற்காடு நகரில், கிளைவ் ஏரிக்குச் செல்லும் கால்வாய், தாசிபுரம் ஏரிக்குச் செல்லும் கால்வாய், முப்பதுவெட்டிக்குச் செல்லும் கால்வாய் போன்றவை தூர்ந்துபோய் உள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் நேரில் பார்த்துள்ளார்கள். அந்தக் கால்வாய்களில், மழைக்காலங்களில் நீர் செல்லாமல், நகரின் மத்திய பகுதிக்குச் செல்கிறது. இதனால் பொது சுகாதாரம் கெட்டு, நோய்வாய்ப்படுகின்ற நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே மேற்கண்ட கால்வாய்களை தூர் எடுத்து, சீரமைக்க கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியின் கட்டடங்கள் பழுதடைந்து, மாணவர்கள் விளையாட்டு மைதானங்களில் படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதையும் சீர் செய்து கொடுக்கவேண்டும். ஆற்காடு மருத்துவமனையில், மருத்துவர்கள், உதவியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. அதையும்



போக்கிட வேண்டும். ஆற்காடு நகரில் உள்ள Rural வங்கியானது கடந்த 3 ஆண்டுகளுக்குமுன் Urban வங்கியாக தமிழக அரசால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, ரிசர்வ் வங்கி ஆய்வு செய்து, மும்பையில் உள்ள தலைமை வங்கியின் பரிசீலனையில் உள்ளது. அதை நகர வங்கியாக மாற்ற தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

விருதுநகர், குறிஞ்சிப்பாடி, குடியாத்தம், ஆற்காடு, கடலூர், கும்பகோணம், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், உற்பத்தி செய்யப்பட்டுவரும் கைத்தறித் துணிகளை மாநிலச் சங்கம் உடனடியாக கொள்முதல் செய்ய முன்வராவிட்டால், அப்பகுதி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். எனவே இவர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் உடனடியாக இப்பகுதியிலுள்ள சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை மாநிலச் சங்கத்தின் மூலமாக கொள்முதல் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். தனியார் துறையில் உள்ள துணி, கைலிகளையும் அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டின் கைத்தறி மற்றும் கதர்த் துறைகளினுடைய மானியக் கோரிக்கைகளின்மீது தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களை எடுத்து வைக்க முன் வருகின்றேன். தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால், கதர்த் துறையினுடைய அமைச்சராக நல்ல ஒரு நிர்வாகியைத் தேர்ந்தெடுத்து, அவரை அமைச்சராக நியமித்து அந்தத் துறையானது இப்போது சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல கைத்தறித் துறையினுடைய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கைத்தறித் துறையிலேயே சிறந்து விளங்குகின்ற ஈரோடு

படைத்துள்ளது இந்த அரசு. என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில் எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் சங்கரன்கோயிலில் 10,000 கைத்தறிகள், 10,000 விசைத்தறிகள் சிறப்பான முறையில் இயங்கி பல தொழிலாளர்கள் முன்னேற்றம் அடையக்கூடிய வகையில் தொழில் செய்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது தொழில்கள் எல்லாம் பின்னடைவுபெற்றுள்ளன. சங்கரன்கோயிலில் அரசு மூலம் நடத்தி வந்த 144 என்ற எண்ணுள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மூடி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதனால் பல தொழிலாளர்கள் இன்று வேலைவாய்ப்பு இல்லாமல் வெளி மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். எங்களது சங்கரன்கோயில் தொகுதியைப் பொறுத்தளவில் நெசவுத் தொழிலைச் செய்து வருகின்றவர்களுக்கு, தனியார் உரிமையாளர்கள் மூலமாக பாவு நூல் முறையாகக் கிடைப்பதில்லை. பல கஷ்டங்களுக்கு மத்தியில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு இருந்தாலும்கூட சில இடங்களில் தாமதமாக நூல் கிடைப்பதனால் தொழிலாளர்களின் பணி தினசரி தடைப்படுகிறது. விசைத்தறித் தொழிலாளர்கள் —L D. Bank— நிலவள வங்கி மூலமாகக் கடன் பெற்று வீட்டிற்கு ஒரு விசைத்தறி வைத்து அதன்மூலம் தொழில் செய்து வருகின்றார்கள். விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கியதுபோல் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் பெற்றுள்ள விசைத்தறி நெசவாளர்கள் தொழில் செய்வதற்கு பகல் நேரத்தில் மட்டுமாவது இலவசமாக மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு வருடமும் தைப் பொங்கலுக்கு அரசாங்கத்தின் மூலமாக இலவசமாக வழங்கப்படுகின்ற இலவச வேட்டி சேலைகள் மிகவும் தரம் குறைந்தவையாக வழங்கப்படுகின்றன. அதுவும்கூட வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக வழங்கப்படவில்லை. பெரும்பாலும் அரசு மூலம் வழங்கக்கூடிய கடன்களோ அல்லது மானியக் கடன்களோ ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் கொடுக்க முடியாது. இருந்தாலும் எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்



வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் மனம் குளிரும் அளவுக்குத் தரமான சேலைகளையும், வேட்டிகளையும் தரமான முறையில் இலவசமாகக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இந்த அரசு இலவச வேட்டி சேலையைக்கூட ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க முடியாத அரசாக இருந்துகொண்டிருக்கிறது. வேட்டி, சேலை என்றால் தி.மு.க.வின் சொத்தா? ஏழை எளிய மக்கள், எங்களுக்கு ஏன் இலவச வேட்டி சேலை கூடக் கொடுக்க முடியாத அரசாக இருந்து வருகிறது என்று கேட்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி சேலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசினார். நிச்சயம் நான் தலையிட்டுப் பேசுவதிலே தவறு இல்லை. அப்படிப்பட்ட நல்ல எண்ணம் உங்களுக்கு இருந்த காரணத்தால்தான்—என் குடும்பத்திலே இருக்கின்ற என்னுடைய மகன்கள் உருவாக்கிய கம்பெனியில் சர்க்கரை வியாபாரம் செய்ய—உங்களுடைய ஆட்சிதான் என்னுடைய ஆர்.சி. நம்பரிலே 1½ கோடி ரூபாய்க்கு நூல் வாங்கியதாகப் போட்டு, அப்படிப்பட்ட இலவச வேட்டி சேலைத் திட்டம் அன்று நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் அந்த ஆட்சிக்கே முதல் அடித்தளம், தவறு, முறைகேடு வெளியே வரப்பட்டது. இன்று இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதைத் தரம் குறைந்தது என்று சொல்வது எவ்வளவு தவறு? நியாயமா?

**திரு. சொ. கருப்பசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் சொல்வதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக எங்களுடைய சங்கரன்கோயில் தொகுதியில், இலவச வேட்டி சேலைகள் திருடப்பட்டு அதை கடத்திச் சென்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் — அந்த வேட்டி சேலை—bundels கிட்டத்தட்ட 90 bundles— தாசில்தார் இருந்து பணி செய்யக்கூடிய அந்த அறையில் வைத்து பூட்டப்பட்டிருக்கின்றன. ஆனால வட்டாட்சியர் பணி செய்யக்கூடிய அந்த அறையைப் பூட்டி வைத்ததன் காரணமாக அவர்கள் உட்கார்ந்து பணி செய்யக்கூட இடம் இல்லாமல் அவர்கள் படுகின்ற கஷ்டம் என்னைப் போன்று எங்கள் தொகுதியிலே இருக்கின்ற மக்களும் நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத்தறியிலே நெய்யக் கூடாது என்பதை அங்கே சுட்டிக்காட்டி, கைலிகள் உற்பத்தி செய்யவும், நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் மீண்டும் கைத்தறித் துறைக்கு 30 சதவீதம் தள்ளுபடி வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்காக ஒரு தனி நல வாரியம் அமைப்பது மிக அத்தியாவசியம் என்பதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். விவசாயத் துறையானது எப்படி தமிழகத்திலே அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றதோ, அதுபோன்று கைத்தறித் துறையும், கதர்த் துறையும் தமிழகத்திலே ஒரு முக்கியமான அங்கமாக இருக்கின்றது. ஆகவே விவசாயத் துறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசமாக மின்சாரத்தை வழங்கியிருப்பது போன்று கைத்தறித் துறைக்கும், மின்சாரத்தை இலவசமாக வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கதர் இரகங்களுக்கு சிறப்புத் தள்ளுபடி செய்கின்ற இந்த நேரத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறந்த தினத்திற்காக ஜூன் 3 முதல் 10 ஆம் தேதி வரையும் எங்களுடைய ஒப்பற்ற தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய பிறந்த தினம் ஜூன் 5-ல் வருகின்ற காரணத்தினால், இந்த இரண்டு தினங்களையொட்டி, அன்றையதினம் சிறப்புத் தள்ளுபடி விற்பனையை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளுக்காக தள்ளுபடி விற்பனை செய்கின்றபோது ரம்சான், பக்ரீத் பண்டிகை நேரத்திலேயும் தள்ளுபடி விற்பனை செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கதர்த் துறையைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற அந்தத் துறையினுடைய சார்பாக மலை வாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே தேனீ வளர்ப்பை ஒரு சிறந்த தொழிலாக மலைவாழ் மக்களும், ஆதிதிராவிட மக்களும் தங்களுக்கு உரிய நிலத்திலே பெட்டி வைத்து, அவர்கள் தேனீ வளர்ப்பைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக அப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே ஏற்காடு பகுதியிலே இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு இலவசமாக தேனீ பெட்டிகள் வழங்கிக் கொண்டிருந்தார்கள். அது



இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக அவர்களுக்கு வழங்குவதற்கும், தேனீக்களைப் பிடித்து, அதிலிருந்து தேன் எடுப்பதற்குரிய உபகரணங்களை இலவசமாக வழங்குவதற்கும் வங்கிகள் மூலமாக அவர்களுக்குக் கடன் உதவிகள் கிடைப்பதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற பரமத்தி, சின்ன தாராபுரம் பகுதியிலே பனைபொருள் உற்பத்தி ஏராளமாக இருக்கிறது. அங்கேயிருக்கின்ற பனைத் தொழில் செய்யக்கூடியவர்களுக்கும் கடனுதவி வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த் துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகளில் எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றி.

விவசாயத்தை அடுத்து பெருந்தொழிலாகவுள்ள நெசவுத் தொழிலைச் செய்து வருகின்ற பெரும்பாலான நெசவுத் தொழிலாளர்களை முன்னேற்றச் செய்வது இந்த அரசின் கடமையாகும். ஆனால் கொள்கைக் குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாட்டிலுள்ள 18 நூற்பாலைகள், 1,410 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 144 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் அனைத்தும் நல்லமுறையில் இயங்கி லாபகரமாக ஓடுகின்றனவா என்றால் இல்லை. அப்படி லாபகரமாக ஓடினால், கூடுதலாக நூற்பாலைகளும், கூட்டுறவுச் சங்கங்களும், விசைத்தறிச் சங்கங்களும் உருவாகியிருக்கலாம்.

பிற்பகல் 12-40

நான் எனது தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை வேண்டும் என்று 4 ஆண்டுகள் கத்தியும் இந்த அரசு செவிசாய்க்கவில்லை. ஆனால் 4 ஆண்டுகளாக 4 நூற்பாலைகளை மூடி சாதனை

[திரு. சொ. கருப்பசாமி] [2000 மே 5

காரணம், என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை. கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்குக்கூட கொடுக்க முடியாமல் இன்னும் அதை வைத்துக் கொண்டிருப்பதால் உங்களுக்கு என்ன இலாபம்? ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-45*

அடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பனையேறும் தொழிலை குலத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 6 மாதங்களுக்குத்தான் ஊரிலே தங்குகின்றார்கள். மீதி 6 மாதங்களுக்கு அவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று, காட்டுப் பகுதியிலே இருந்துகொண்டு பதநீர் இறக்கும் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. திருநெல்வேலியைப் பொறுத்தளவில் எங்களுடைய மாவட்டத்தில் தற்போது பனை ஏறினால காவல் துறை உடனடியாகக் கைது செய்து அந்தத் தொழிலைச் செய்ய முடியாத அளவிற்கு இப்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அந்த மக்களெல்லாம் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக தென் மாவட்டங்களிலுள்ள பல இலட்சம் பனையேறும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதநீர் கொடுத்தார்கள். அந்தப் பதநீர் தரமான பதநீர் இல்லை. உண்மையான பதநீர் என்றால் அது சாப்பிடுவதற்குத் தித்திப்பாக இருப்பதோடு உதட்டிலும் ஒட்டும். ஆனால், இது தண்ணீராக.....

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுண்ணாம்பு போடாமல் வேண்டுமென்று கேட்கின்றாரா என்பதை அறிய விரும்புகின்றேன். உண்மையாகவே தரக் கட்டுப்பாட்டின்கீழ் ஆய்வு செய்யப்பட்டுத்தான் பதநீர் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** துணைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன, பதநீரிலேயா?



2000 மே 5]

**திரு. மு. அப்பாவு:** ஆமாம். பதநீரைப் பற்றி நாங்கள்தானே சொல்ல வேண்டும். ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே பனைமரத்தின் அளவுக்கு வளர்ந்திருக்கிறீர்கள். (சிரிப்பு) இதில் என்ன சொல்ல வேண்டும். உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதநீரில் அதிகமான அளவுக்கு சுண்ணாம்பு போட்டுக் கொடுக்காததுதான் உண்மை. உண்மையிலேயே அந்த அளவிற்கு பதநீர் தித்திப்பாக இருக்கும். அந்தப் பனையிலிருந்து இறக்கப்பட்ட பதநீர் என்றால் அதனுடைய அருமையே வேறு. ஆகவே இங்கே இருப்பவர்கள் உண்மையான பதநீரைச் சாப்பிடாதவர்கள் என்பதைத்தான் என்னால் உணர முடிகிறது.

கோ-ஆப்டெக்ஸில் துணிகளெல்லாம் இப்போது தேங்கிக் கிடப்பதால் வியாபாரத் துறையில் மிகவும் பின் தங்கி, பொருளாதார ரீதியில் பின் தங்கிய நிலைமையில் தமிழ்நாடு இன்று சென்று கொண்டிருக்கிறது. காரணம் எங்கே சென்று பார்த்தாலும் கோ-ஆப்டெக்ஸ் கடைகளில் வியாபாரமே நடைபெறவில்லை. குறிப்பாக எங்களுடைய சங்கரன்கோயிலில் 3 கடைகளை வாடகைக்கு எடுத்து அதன் மூலமாகத துணிகள் வியாபாரம் செய்யப்பட்டு வருகின்றன. அதில் இரண்டு கடைகளை மூடிவிட்டார்கள் ஒருகடை மட்டும்தான் திறந்து இருக்கிறது. வியாபாரமே இல்லை என்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. கைத்தறித் துணித் தேக்கம் மிகவும் அதிகமான அளவிற்கு இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் கோ-ஆப்டெக்ஸ் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய நிலையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நம்முடைய கதர்த் துறையைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் மண் பாண்டம் செய்தல், கூடை முடைதல் போன்ற சிறுசிறு தொழில்களையெல்லாம் செய்வதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக மானியங்களை அதிகமாகக் கொடுத்து உதவிட வேண்டும். ஒவ்வொரு கிராமத்தைப் பொறுத்த அளவிலும் இப்படி சிறு தொழில் செய்து வருகின்ற தொழிலாளர்கள் குறைந்த அளவு வருமானத்துடன் வறுமைக் கோட்டிற்குக் கீழ்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒருசில கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக்

கீழே வாழ்ந்து வருகின்ற அந்தச் சிறு தொழிலாளர்களுக்கு முறையாக மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து ஊக்கப்படுத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இப்பேர்ப்பட்ட, ஏழை எளிய தொழிலாளர்கள் அதிகமான அளவுக்கு என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொழிலுக்காக பிற மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமையிலேதான் இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது எனது சங்கரன்கோயில் தொகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துக் கொடுக்கவும், மூடிக் கிடக்கும் ஆலையைத் திறப்பதற்கும் உடனடியாக ஒரு வார காலத்திற்குள் உத்தரவிட வேண்டுமென்று அன்போடு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

பிற்பகல் 12-50

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுண்ணாம்பு போடாத பதநீர் என்று சொன்னார்கள். சுண்ணாம்பு போட்ட பதநீரைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட நேரத்தில் பதநீரைக் காய்ச்சி கருப்பட்டியாக மாற்றவில்லை என்றால், சற்றுக் காலதாமதம் ஆகிவிட்டால் அது சலித்துவிடும். சலித்த பதநீரை வைத்திருந்தால் அதைக் கள் என்று நினைத்து பல பனையேறும் தொழிலாளர்களைக் காவல் துறையினர் கைது செய்து அவர்களைத் தொழிலே செய்யவிடாமல் ஆக்கியிருக்கின்றார்கள். ஆந்திராவில் 10 ரூபாய்க்கு ஒரு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதநீரில் சுண்ணாம்பு போடுவது பற்றித்தான் பிரச்சினை. உடனே அப்படியே நீங்கள் நேராகப் போய்விடுகிறீர்களே, (குறுக்கிட்டு) நீங்களே பனை மரம் உயரம்தான் இருக்கிறீர்கள். உட்காருங்கள். (சிரிப்பு) திரு. பெ. ஆசையன்.



**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் தெரியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகவே தெரியும், என்னுடைய தொகுதியைப் பற்றி. என்னுடைய தொகுதி ஆண்டிப்பட்டி என்பது சாதாரணமாகவே அனுதாபப்படக்கூடிய தொகுதியாகவே மாறியிருக்கிறது. திடீர், திடீரென அ.இ.அ.தி.மு.க.-காரர்களை எங்கிருந்தாவது இறக்குமதி செய்வார்கள். வேட்பாளர் எங்கோ சென்னையிலிருந்து வந்தார் அல்லது வெளியூரிலிருந்து வந்தார் என்றெல்லாம் வருவார்கள். அவ்வாறு வந்தவர்கள் தேர்தலுக்காக ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி வெற்றி பெறுவார்கள் அது கடந்த காலத்தினுடைய வரலாறு.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர், திரு. அ.லெ. சுப்பிரமணியன் தலைமை)*

நான் பொய்யைச் சொல்லவில்லை. ஒரு முறை 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன் அவர்கள் அ.இ.அ.தி.மு.க.-வினுடைய வேட்பாளராக வந்தார். ஆண்டிப்பட்டியிலே வேட்பாளராக நின்றார். ஆண்டிப்பட்டியை நான் அரண்மனைப்பட்டியாகவும், ஆண்டிப்பட்டியை கோட்டைப் பட்டியாகவும் மாற்றப் போகிறேன் என்று அவர் சொன்னார்.

(திரு. இரா. விசுவநாதன், திரு. சொ. கருப்பசாமி மற்றும் திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** என்ன Point of order? திரு. பி.ஆர். சுந்தரம், சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நின்றவர்கள் எல்லாம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். வெற்றி பெற்றதற்குப் பிறகு அவர்கள் கொடுத்த

வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் அங்கு நின்ற உங்களால் உங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத ஆதங்கத்தால்தான் இங்கு இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இப்போது ஆளும் கட்சி. உங்களுடைய குறைகளை வேண்டுமானால் சொல்லுங்கள்; உங்கள் ஆதங்கத்தைத் தெரிவியுங்கள். ஆனால் எங்களுடைய கழகத்தின் சார்பாக அவர் எங்கிருந்து நின்றால் என்ன? தமிழகத்திலே எந்தத் தொகுதியிலும்.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** Point of order என்றீர்கள். அதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பெ. ஆசையன்:** எனவே அவர் என்ன செய்தார் என்று சொன்னால் எதுவுமே செய்யவில்லை. அதற்குப் பின்னால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே அங்கே போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள். அது ஒரு முதலமைச்சருடைய தொகுதியாக இருந்தது. அப்போது அ.இ.அ.தி.மு.க.வும், முதலமைச்சரும் என்ன சொன்னார்கள் என்று சொன்னால் ஆண்டிப்பட்டியை அரசன்பட்டியாக மாற்றப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். அவ்வாறு அரசன்பட்டியாக மாற்றப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இப்போது இங்கு சொன்னார்கள் தேர்தலுக்காக ஒரு நிதிநிலை அறிக்கையை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று. அதனாலேதான் நான் கேட்கிறேன். ஏதோ ஒரு பேச்சுக்காக செயல்படுத்தப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார் நமது மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், ஆண்டிப்பட்டியிலே அண்ணா கூட்டுறவு நூற்பாலை என்று ஒரு நூற்பாலை இருக்கிறது. 18 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன, நட்டத்திலே இருக்கின்றன என்று சொல்கிறார்களே அதிலே ஒரு ஆலைதான் அந்த அண்ணா கூட்டுறவு நூற்பாலை என்பது. அந்த நூற்பாலை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி புரிந்த 15 ஆண்டு காலத்தில் இலாபத்தில் இருந்ததா என்றால் இல்லை. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால்தான் மாண்புமிகு முதலமைச்சருடைய முயற்சியால்தான், இன்னும்கூடச் சொல்லப்போனால் அந்த மாவட்டத்தினுடைய முன்னாள் ஆட்சித் தலைவராகப் பணியாற்றிய சத்தியபாமா அவர்களின் முயற்சியால்தான், இன்னும்கூடச் சொல்லப்போனால் த.மா.கா.வில் இருக்கின்ற அழகராஜா போன்றவர்களுடைய ஒத்துழைப்பால்தான் இப்போது இலாபத்தை ஈட்டிக் கொண்டிருக்கிற



ஓர் ஆலையாக இருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன். அது மாத்திரம் அல்ல. 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டிருக்கிற நெசவாளர்களைக் கொண்டிருக்கிற ஒரு தொகுதி தான், அந்தத் தொகுதி. அது ஜக்கம்பட்டி. அந்த ஜக்கம்பட்டியிலே congested-ஆன பகுதியிலே இருக்கின்ற 14 ஆயிரம் மக்கள் இருக்க இடம் இல்லாமல் தறி இல்லாமல் மிகக் கஷ்டத்தோடு தொழில் செய்து கொண்டிருந்தார்கள். ஜக்கம்பட்டியைச் சேர்ந்த நெசவாளர்கள் நெசவுத் தொழிலிலே முழுவதுமாக ஈடுபட்டிருந்த காரணத்தினாலேதான், உபதொழிலே இல்லாமல் ஈடுபட்டிருந்த காரணத்தினால்தான் காச நோயால் பிடிக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகி பரிகாரம் தேடி 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அலைந்தார்கள். ஆனால் அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான் இப்போது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில், காச நோய்க்கு வைத்தியம் செய்யக்கூடிய வகையில் E.S.I. மருத்துவமனையை இந்த ஆட்சிதான் வழங்கியிருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12.55

அதுமட்டுமல்லாமல் நெசவாளர்களுக்கு 30 சதவீதம் தள்ளுபடியைத் தந்தது யார்? அதுவும் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிதான், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்தான் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இப்போது நான் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன். 10, 15 ஆண்டுகாலம் அனைத்துக் கட்சிகளுமே ஆண்டிப்பட்டியில் போராட்டம் நடத்தினார்கள். எப்படிப் போராட்டம் நடத்தினார்கள் தெரியுமா? அவர்கள் சொன்னதெல்லாம், "வேலை கொடு, வேலை கொடு, வேலை கொடுக்கமுடியாவிட்டால் சோறு போடு, சோறு போடு." இப்படி எல்லாக் கட்சிகளுமே போராட்டம் நடத்தினார்கள். ஆனால் அந்தப் போராட்டம் இப்போது இருக்கிறதா? இந்த நான்கு ஆண்டுகாலத்தில் இருந்ததா என்றால் இல்லை. நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். "நூல் கொடு, நூல் கொடு, தரமான நூல் கொடு" என்ற போராட்டத்தை எல்லாக் கட்சிகளுமே அப்போது நடத்தினார்கள். ஆனால் இப்போது அந்தப் போராட்டம் இருக்கிறதா? இல்லை. "கொள்முதல் செய், கொள்முதல் செய், உற்பத்தி செய்த சேலை, வேட்டியை கொள்முதல் செய்"

என்ற போராட்டத்தை வைத்து தெருவெல்லாம் வந்து நின்று போராடினார்கள். தினமும் போராடினார்கள், அந்தக் கைத்தறி நெசவாளர்கள். ஆனால் இப்போது அத்தகைய போராட்டம் இருக்கிறதா என்றால் இல்லை. கொள்முதல் இப்போது செய்யப்படுகிறது. அவ்வப்போது செய்யப்படுகிறது. அதற்கும் மேலாக ஒரு படி சொல்கிறேன். "பட்டுவாடா செய், பட்டுவாடா செய், கொள்முதல் செய்த சேலைக்கு வேட்டிக்கு பணத்தைப் பட்டுவாடா செய்" என்று போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டம் இப்போது இருக்கிறதா என்றால் இல்லை. இப்போது தரமான நூல் வழங்கப்படுகிறது. ஜனதா இரகச் சேலை உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில் நெசவாளர்களின் பிரச்சினைகளை அணுகிப்பார்த்து, விசைத்தறியாளர்களைச் சார்ந்திருக்கிற கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளையெல்லாம் கணக்கிலே வைத்துக்கொண்டு, இரண்டையும் சரிசமமாகப் பார்த்து அதைச் சரி செய்து திட்டங்களைத் தந்திருக்கிறார்கள்.

கைத்தறி நெசவாளர்களுக்கு 4 ஆயிரம் ஜனதா இரகச் சேலை உற்பத்தித் திட்டத்தை வழங்கியது இந்த ஆட்சிதான். ஜக்கம்பட்டியிலே இருக்கிற மக்களுக்கு வாழ்வளிக்க 4 ஆயிரம் ஜனதா இரகச் சேலை உற்பத்தித் திட்டத்தை வழங்கியது இந்த ஆட்சிதான். அதைப்போல தரமான நூலைக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் தரமான அரசு நூற்பாலையில்தான நூல் வாங்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தைத் தந்து அதையும் சரி செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அரசினுடைய சாயப் பட்டறையில்தான் சாயம் போடப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே தரமான நூல், தரமான முறையிலே சாயம் போடப்படுகின்றது. இவையெல்லாம் சரியான முறையில் செய்யப்படுகிற காரணத்தினால் இப்போது அந்தப் போராட்டங்கள் எல்லாம் இல்லை. நூல்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொள்முதல் உடனுக்குடன் செய்யப்படுகிறது. பட்டுவாடா உடனுக்குடன் வழங்கப்படுகிறது. இவை எல்லாம் செய்யப்படுகிற காரணத்தினால் இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் இங்கே அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இலவச வேட்டி சேலை பற்றிச் சொன்னார்கள். நான் அதை நினைவூட்ட விரும்புகிறேன். இலவச வேட்டி சேலை கொடுக்காமல் விட்டுப்போகவில்லை. அன்றைக்குக் கொடுத்தார்கள். முதியோர் பென்ஷன் வாங்குகிற கிழவர்களுக்கு, முதியோர் பென்ஷன்



வாங்குகிற கிழவிகளுக்கு, ஊனமுற்றவர்களுக்கு என்று கொடுத்துவிட்டு, ஓரளவுக்கு ஒன்றிரண்டு, இங்கொன்றும், அங்கொன்றுமாகக் கொடுத்துவிட்டுப் போனார்கள். ஆனால், இப்போது அப்படியா? அரசு நேரடியாகக் கவனம் செலுத்தி 300 ரூபாய் வரை வருமானம் உள்ள எல்லாக் குடும்பத்திற்குமே வேட்டி சேலை என்று வழங்கி பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிற ஒரு கட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம்; இந்த ஆட்சி என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச வேட்டி சேலைத் திட்டத்திலே தனிப்பட்ட கவனம் செலுத்துகிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அந்த ஆட்சி இருந்தபோது 48 pick-க்கு ஊடை போட வேண்டும் என்கிறது Government specification. ஆனால் 48 pick-க்கு ஊடை போடப்பட்டதா என்றால் இல்லை. 22, 28, 30 என்று ஊடைகள் போடப்பட்ட காரணத்தினால் அந்த நெசவாளர்களுக்குப் பெருத்த லாபம் ஏற்பட்டது. துணிகள் சல்லடை சல்லடையாக இருந்தன. (மணியடிக்கப்பெற்றது) கொசுவலைபோல் கொடுத்தார்கள். அதைத்தான் ஆண்களும் பெண்களும் கொஞ்சம் பேர் கூனிக் குறுகி உடுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் specification படி 48 ஊடை இருக்க வேண்டும் என்று சொன்னால், 48 இருக்க வேண்டும். கொள்முதலிலே கடுமை காட்டினார்கள். கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்கிறபோது 48 pick இல்லாத சேலைகளைப் புறக்கணித்தது. அப்படிக் கொள்முதல் செய்ததன் விளைவாக இப்போது தரமான சேலைகள் எல்லா இடங்களிலும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இப்படி 48 ஊடைகள் போடக் கொடுத்த நூல் அளவைத்தான் அன்றைக்கு அ.இ.அ.தி.மு.க. காரர்களும் கொடுத்தார்கள். 33 ஆம் எண் சேலைகளை உற்பத்தி செய்வதற்கு அப்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொடுத்த நூல்களைத்தான் இப்போது தி.மு.க. ஆட்சி கொடுக்கிறது. அதே நூல்களை வைத்துக்கொண்டுதான் இப்போதும் செய்கிறார்கள். 48 ஊடைகள் போட்டு தரமான சேலைகளை உற்பத்தி செய்து தருகிறார்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவ்வளவு கூடுமையாகப் போராடிக்கொண்டிருக்கிற நெசவாளர்கள் அரசினுடைய போக்கிற்குத் தகுந்தாற்போல், அரசினுடைய நியாயத்திற்குத் தகுந்தாற்போல் மிகச் சிறப்பான முறையிலே நெசவாளர்கள் ஒத்துழைப்பைத் தருவதற்கு, ஆங்காங்கிருக்கிற நெசவாளர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் எல்லாம் சேர்ந்து கூட்டம் போட்டு, அவர்களே அரசாங்கத்தினுடைய அணுகுமுறை சரியாக இருக்கிறது, நாங்கள் 48 ஊடைக்குக் குறையாமல் கொடுக்கிறோம் என்று சொல்லி முன்வந்து செய்த ஒப்பந்தத்தின் பேரில் பல திட்டங்களை நீங்கள் தந்து கொண்டிருக்கிறீர்கள்.

பிற்பகல் 1.00

நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புவது, அன்றைக்குக் கொடுத்திருக்கிற அந்த நூலைத்தான் இப்போதும் கொடுக்கிறோம். இதையே வைத்துக்கொண்டு 33 ஆம் எண் சேலையை உற்பத்தி செய்கிறோம். இந்த 33 ஆம் எண் சேலையை உற்பத்தி செய்கிறபோது அன்றைக்கு 36-ஐயும் 37-ஐயும் உற்பத்தி செய்து அதில் இலாபம் பார்த்த நெசவாளர்களுக்கு இப்போது நட்டம் வருகிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். கைத்தறியில் போடுகிற அந்த நூலை விசைத்தறியில் போட்டால் விசைத்தறியில் இருக்கிற இயந்திரத்தின் பல் சக்கரம் சரியாகச் சுற்றி சரியாக 48 ஆக even ஆக்கித் தருகிறது. ஆனால் கைத்தறியில் 48 நூலைப் போடுகிறபோது அந்த 48-க்கு சரியாக சக்கரம் சுற்றாமல், 42-ம் வரும், 44-ம் வரும் அல்லது 52-ம் வரும், 56-ம் வரும். ஆகவே அந்த நெசவாளர்கள் கஷ்டத்தில் இருக்கிறார்கள். இதைச் சரிசெய்ய முடியாமல் தவிக்கிறார்கள். அதனால்தான் நெசவாளர் பெருமக்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்காக—எல்லா காலகட்டத்திலும் கேட்காமலேயே தள்ளுபடி வழங்கியது மட்டுமல்லாமல்—அஇஅதிமுக ஆட்சிக் காலத்திலே ஒரு சேலைக்கு 20 ரூபாய் கூலியாகக் கொடுத்ததை இந்த ஆட்சி 32.50 ஆக உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வேளையில் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அந்த மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலவச வேட்டி சேலை உற்பத்தி செய்ய 33 ஆம் எண் சேலைக்கு வழங்கப்பட்டு வருகிற அந்த நூலை அதற்குமேலும் ஆறு களி நூல் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று பரிசீலனை செய்து உரிய பரிகாரம் செய்து வழங்க வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் வேண்டுகோள் வைத்து அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.





நெசவாளர்களுக்காக எத்தனையோ திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. உதாரணமாக ஓய்வூதியத் திட்டம். இந்த ஓய்வூதியத் திட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 200 ரூபாய் வழங்கும் திட்டம். மற்றும் சேமிப்புத் திட்டங்கள்; அதைப்போல இன்சூரன்ஸ் திட்டம். நெருக்கடியாக வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்குத் தறியுடன்கூடிய வீடுகள். இவைகள் எல்லாம் கடனாக வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வைத்துக்கொண்டு சரியான முறையில் சரியான திசையில் அவர்கள் அணுகிக்கொண்டு இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நல்ல வாய்ப்புள்ள காலமாக இதைக் கருதுகிறார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த ஆண்டு சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய வேண்டுகோளையெல்லாம் ஏற்று, ஓர் உயர்மட்டக் குழுவை அனுப்பிவைத்து அந்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின்பேரில் கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கிற கஷ்டநஷ்டங்களை எல்லாம் ஆராய்ந்து, விசைத்தறிக்கும் கைத்தறிக்கும் உள்ள ஒற்றுமையையும் முரண்பாடுகளையும் கண்டறிந்து, முரண்பாடுகளைச் சரிசெய்து அதை எப்படி இலாபகரமாக நடத்தவேண்டும், ஆக்கபூர்வமாக நடத்த வேண்டும் என்று ஆய்வு செய்து சரியான திக்கிலே அதைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அமலாக்கப் பிரிவைப் பொறுத்தமட்டும் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர், (திரு. அ.வெ. சுப்பிரமணியன்):** நேரமாகிவிட்டது. அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பெ. ஆசையன்:** அமலாக்கப் பிரிவைப் பொறுத்தமட்டில், அதன் ஆய்வு முறை, அணுகு முறை பற்றி இந்த அவையிலேயே சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. அந்தக் கருத்துக்களின்

அடிப்படையில், கைத்தறியில் தயாராகும் shade மற்றும் விசைத் தறியில் தயாராகும் shade ஆகியவற்றை அதில் கணக்கிட்டுச் சொன்னார்கள். சில இடங்களில் கைத்தறிக்கும் விசைத்தறிக்கும் சேர்த்து ஒரே முதலாளியாக, ஒரே அணுகு முறை கொண்டவர்களாக, ஒரே குடும்பத்தைப் போல தொழில் செய்து வருகிறார்கள். அப்படித் தொழில் செய்து வருகிறபோது, அந்த இடங்களிலே விசைத்தறியில் சில சிக்கல்களை உண்டு பண்ணினால் கைத்தறியும் பாதிக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கைத்தறியில் நெருக்கடி செய்தால் shade பிரச்சினையைப் பொறுத்தமட்டில் விசைத்தறியும் பாதிக்கும். எனவே அந்த இடங்களிலே விசைத்தறி, கைத்தறி நெசவாளர்களுடைய மனநிலையை அறிந்து அந்த அமலாக்கப் பிரிவு சட்ட திட்டங்களைக் கொஞ்சம் தளர்த்திச் செயல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மாத்திரம் இந்த நேரத்தில் வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு பா. வேல்துரை. (குறுக்கீடு) என்ன?

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order. ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஆசையன் அவர்கள் ஆண்டிப்பட்டி கூட்டுறவு நூற்பாலை இலாபத்தில் இயங்குவதற்கு இந்த அரசுதான் முழுக் காரணம் என்று சொன்னார்கள். அதேபோல மற்ற கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் நட்டத்தில் இயங்குவதற்கும் இந்த அரசுதான் காரணம் என்பதை அவர் ஒப்புக்கொண்டதற்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** ஒரு சிறு விளக்கம். ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. ஆசையன் அவர்கள் சொன்னார்கள், எதிர்க்கட்சி உறுப்பினர் அதற்குப் பதில் சொன்னார். கைத்தறி சம்பந்தமாக ஒரு தகவலை இந்த அவைக்குச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தமிழ்நாட்டைப்போல மகாராஷ்டிரா மாநிலமும் கைத்தறியில் முன்னணியில் இருக்கிற மாநிலம். நமது மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் தலைவராகிய நானும் மற்றக் குழு உறுப்பினர்களும் அதிகாரிகளும் அந்த மாநிலத்திற்கு ஆய்வுப் பயணம்



மேற்கொண்டபோது, அந்த மாநிலத்தின் இரண்டு அமைச்சர்கள், அதிகாரிகளுடன் நாங்கள் பேசினோம். நான் பேசுகின்றபோது, நமது கொள்கைக் குறிப்பில் உள்ள இலவச வேட்டி சேலைத் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் இறந்தால் 40,000 ரூபாய் உதவித் தொகை போன்ற திட்டங்களையெல்லாம் அவர்களிடம் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, அந்த இரண்டு அமைச்சர்களும் சொன்னார்கள் "நீங்கள் எங்களுடைய மாநிலத்திற்கு வந்து எங்கள் திட்டங்களைப் பற்றி அறிய வந்திருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய மாநில திட்டங்களைப் பற்றிக் கேட்டதற்குப் பிறகு, இந்தியாவிலேயே இப்படிப்பட்ட திட்டம் எங்கும் கிடையாது. நாங்கள் உங்களுடைய மாநிலத்திற்கு வருகிறோம், முதல்வரிடத்திலே சொல்லுங்கள் என்று சொன்னார்கள்" என்ற தகவலை, இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி நூற்பாலையிலே இந்த அரசு வந்த பின்பு, தொடர்ந்து இலாபம் பெற்று வருகின்ற அடிப்படையிலேதான் அந்தச் செய்தி சொல்லப்பட்டது. அதற்கு முன்பு, அந்த ஆலை நட்டத்திலேதான் இயங்கிக் கொண்டிருந்தது. இரண்டுவிதமான இலாபம் இருக்கிறது. இரண்டு ஆலைகள் தொடர்ந்து இலாபத்தைப் பெற்று வருகின்றன, இந்த அரசு வந்த பின்பு. அதுபோக, இந்த ஆண்டு மட்டும் இலாபம் பெற்ற ஆலைகள் என்று 6 வருகிறது. ஆகவே, நிகர இலாபத்திற்கும் மற்ற இலாபத்திற்கும் வித்தியாசம் உண்டு. இந்த அரசு வந்ததிலிருந்து ஆண்டிப்பட்டி ஆலை நிகர இலாபத்திலே இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன், நீங்கள் இப்படிச் சொன்னால், அதற்கு அவர்கள் தரப்பிலிருந்து பதில் சொல்வார்கள், போன ஆட்சிக் காலத்திலே என்ன நடந்தது என்று. எதற்கு அது? விடுங்கள். திரு. பா. வேல்துரை.

பிற்பகல் 1.10

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால் நான் இதிலே குறிப்பிட விரும்புகிறேன். அந்த பேட்டை நூற்பாலை, ஒரு தாய் நூற்பாலை. இப்பொழுதுதான் அது நம்முடைய சலுகைகளை வழங்கக் கோரி வருகிறது. அதில் ** என்கிறார். அங்கே அவ்வப்போது நூலை வாங்கி, உடனுக்குடன் வர வர, கூடச்சுட நெய்து கொண்டிருக்கிறார்கள் எப்பொழுது ஸ்டாக் வைத்தார்கள்? பழைய ஆட்சிக் காலத்தைப் பற்றிச் சொல்கிறாரோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மில் இப்போது கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் நட்டத்தில் இருக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கியில் கிட்டத்தட்ட 12¼ கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள் அதில் ஒரு பைசாகூட திருப்பிச் செலுத்த முடியவில்லை அவர்களால். அந்த அளவிற்கு ஏற்கெனவே நிருவாகத்தில் ஏகப்பட்ட செலவு ஆகிறது என்று மில்லிலே போய்க் கேட்டால் சொல்கிறார்கள். இப்பொழுதுகூட பிரச்சினை வந்தது. நாங்களெல்லாம் போனோம். அதில் முக்கியமாக பாதிச் செலவு, நிர்வாகச் செலவு. தேவையில்லாத அதிகாரிகள், தேவையில்லாத ஊழியர்கள். இதுபோன்ற பிரச்சினைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும். அமைச்சர்கூட நட்டத்தில் இருக்கிறது என்று சொன்னார். இந்தியா முழுவதும் இந்தத் துணிநூல் தொழில் நட்டத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவற்றைப் புனரமைப்புச் செயவதற்கு நாம் என்ன செய்கிறோம்? வேகமாகச் செய்யவில்லையென்றால், தொழிலாளர்களுடைய நிலை என்னவாகும்? இதில் நீங்கள் தனியாக சிறப்புக் கவனம் செலுத்தி உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் ஆகப் பிறகும் நட்டம் என்று சொல்லிக் கொண்டிருந்தால், இன்னும் சரி செய்யப்படவில்லையென்று சொன்னால், அந்த நிறுவனத்தை மூட வேண்டிய நிலை வரும். மூடுகிற நிலை வருகிறபோது தொழிலாளர்களுடைய நிலை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அதேபோன்று மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் தொழிலாளர்களுக்கு V.R.S. கொடுக்க மறுக்கிறார்கள். அந்தத் தொகுதி M.L.A. அபுல்ஹசன் அவர்களே சொன்னார்கள். தொழிலாளர்கள், V.R.S. கொடுங்கள், நாங்கள் போகிறோம் என்று சொன்னால்கூட V.R.S. கொடுக்கத் தயாராக இல்லை. இரண்டாவதாக அந்த நிறுவனத்திலே தொழிலாளர்களே பஞ்சை வாங்கி நூலை நூற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் உடனடியாக அரசே தலையிட்டு, கூடுதலாக நிதி ஒதுக்கி, அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கைத்தறித் துறையைப் பொறுத்தவரை அதைக் காப்பாற்றவே முடியாதோ என்ற நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஏனென்றால், கைத்தறி நெசவாளர்களெல்லாம் கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருக்கிறார்கள். அதற்கு 19% வட்டி. 19% வட்டிக்கு சங்கங்களில் பணம் வாங்கி அந்தச் சங்கங்களை நடத்தினால், அந்த நெசவாளர்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கும்போது, மானியத்தை வட்டியில் வரவு வைத்துவிடுகிறார்கள். அந்த நிலை உடனடியாக நீக்கப்பட வேண்டும். வட்டியை வரவு வைப்பதிலே ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்று முறையாகச் செய்வார்கள் என்று சொன்னால் எளிதாக இருக்கும் என்று நெசவாளர்கள் சொல்கிறார்கள். அதற்கான நடவடிக்கையை நீங்கள் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஓய்வூதியம் 200 ரூபாய் கொடுக்கிறீர்கள். கிட்டத்தட்ட 6 ஆயிரம் பேருக்குத்தான் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். முறையாகக் கொடுப்பதற்கு, அதிலுள்ள தடையை நீக்கினால், கிட்டத்தட்ட 30 ஆயிரம் நெசவாளர்கள் ஓய்வூதியம் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. அதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நெசவாளர்கள் இறந்துவிட்டால் குடும்ப ஓய்வூதியம் 250 ரூபாய் கொடுக்கிறீர்கள். அதை 300 ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று நெசவாளர்கள் கேட்கிறார்கள். அது நியாயமானது. அதையும் நீங்கள் வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று குடும்ப ஓய்வூதியம் 10 ஆண்டுகள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள்

*திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை, கதர்த் துறை மானியங்களிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது நிறுவனங்களைப் பொறுத்தவரையில், இப்போது தமிழ்நாட்டிலே அநேகமாக எல்லா நிறுவனங்களுமே நட்டத்திலேதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நாங்கள் கூட அருப்புக்கோட்டையிலே ஒரு விசைத்தறிக் கூடத்தைப் பார்க்கச் சென்றிருந்தோம். அங்கே 90 தறிகள் ஓடுவதற்குப் பதிலாக 45 தறிகள்தான் ஓடிக்கொண்டிருந்தன. அந்தத் தறிகள் ஏன் இப்படி நட்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன என்று கேட்டபோது "நாங்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை அரசுக்கு, அரசு நிறுவனங்களுக்கு, மாணவர்களுக்கு வழங்குகின்றோம். ஆனால் அதற்கான பணப் பட்டுவாடா செய்வதற்கு ஓர் ஆண்டு ஆகின்றது. பணப் பட்டுவாடா உடனடியாக நடப்பது இல்லை. ஆகவே முதலீடு இல்லாமல் எங்களுடைய தொழில் நசிந்து கொண்டிருக்கிறது" என்று அப்போது அந்த மில்லைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசாங்கம் துணியை வாங்குகிறது; அந்தத் துணிகளுக்கு உடனடியாக அரசாங்கமே, அரசினுடைய நிறுவனங்களுக்குப் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால், அந்த நிறுவனங்களை எப்படி நடத்த முடியும்?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது விசைத்தறி தொழில் சங்கத்தைப் பற்றியா அல்லது வேறு சங்கங்களைப் பற்றியா?

**திரு. பா. வேல்துரை:** விசைத்தறி. எனவே அந்த நிறுவனங்கள் இலாபத்தில் இயங்க வேண்டுமென்றால், அரசாங்கம் உடனடியாகப் பணப் பட்டுவாடாவைச் செய்ய வேண்டும். நீங்கள் இலவச வேட்டி கொடுக்கிறீர்கள், சேலை கொடுக்கிறீர்கள், uniform கொடுக்கிறீர்கள். அதுபோல இந்தப் பணப் பட்டுவாடாவை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லையென்றால் அந்த நிறுவனங்களை நட்டத்திலேயிருந்து மீட்கவே முடியாது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** இந்த அடிப்படையிலேதான் நம்முடைய வரவு செலவு, எவையெவை



பலவீனமான சங்கங்களாக இருக்கின்றனவோ, அவற்றுக்குத்தான் F.D.S.-லே முதல் கட்ட பேமென்ட் கிடைக்கிறது. ஏதாவது உங்களுக்கு தெரிந்திருந்தால், அதைக்கண்டிப்பாக எனக்குத் தெரிவித்தால் உடனடியாக அந்தப் பணத்தை அளிக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

**திரு. பா. வேல்துரை:** துணைத் தலைவர் அவர்களே, பல நிறுவனங்களுக்குச் சென்றோம். அந்த நிறுவனங்களில் எல்லாம் இதைத்தான் சொல்கிறார்கள். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்திலே பேட்டை நூற்பாலை ஒன்று இருக்கிறது. உங்களுக்கும் தெரியும். போன வருடம் புனரமைப்பிலே பணம் கொடுத்தீர்கள். ** நீங்கள்தான் விளக்கம் சொல்ல வேண்டுமேதவிர, நாங்கள் எதுவும் இதிலே சொல்லமுடியாததால் . . . . . .

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எனக்கும் இதுவரை வரவில்லை. ** தயவுசெய்து அப்படிப்பட்ட விவரங்கள் இருந்தால் அந்த விவரங்களைக் கொடுத்த பின்பு எனக்கும் அதைத் தெரிவித்த பின்பு, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்வதுதான் நியாயமேயொழிய யார் செய்திருந்தாலும் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடியவன் நான்தான். துறை என்னிடம்தான் இருக்கிறது. ஆகவே யார் பெயரிலும் நான் அதைத் தள்ளி விட்டுச் செல்லத் தயாராக இல்லை.

ஆனால் எனக்குத் தெரியாத ஒன்றை ** சொல்வது, தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டும். அவர் உண்மையான விவரத்தைக் கொடுத்தால் அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். அதாவது, நீங்கள் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டு, ** அதை முன்கூட்டியே அதற்கான ஆதாரத்தைக் கொடுத்திருந்தால், அமைச்சரிடம் சொல்லி அதற்குப் பதிலைச் சொல்ல முடியும். இதுபற்றிப் பலமுறை இந்தச் சபையிலே வலியுறுத்திச் சொல்லப்பட்டும் மீண்டும் மீண்டும் அதையேதான் நீங்கள் சொல்கிறீர்கள். அதனால் அது அவைக்குறிப்பிலே இடம் பெறாது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. பா. வேல்துரை] [2000 மே 5

துறை. அந்த வாரியத்திற்கு ஒரு தலைவர். இதுபோன்ற வாரியம் தமிழ்நாட்டிலே செயல்படாமல் இருக்கிறது என்று சொன்னால், இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஏனென்றால் பனைத் தொழில் என்பது மிகவும் கஷ்டமான தொழில். ஒரு பனை மரம் பலனுக்கு வர வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 50 வருடங்களாகும். 30 வருடங்களிலிருந்து 50 வருடங்களான பிறகுதான் அந்தப் பனை மரமே பலனுக்கு வரும். ஆனால் இப்போது பனை மரங்களையெல்லாம் வெட்டி அழிக்கிற நிலை உள்ளது. செங்கமால் என்ற இடத்திலே மரங்களை வெட்டுகிற நேரத்தில் பனை மரங்களையும் வெட்டுகிறார்கள். இதனால் பனைத் தொழில் நசிந்து வருகிறது. எனவே பனைத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது பனைத் தொழில் கடன்களைக்கூட ஓரளவுக்கு கேட்கும்போது இந்த அரசாங்கம் தள்ளுபடி செய்தது. அது வரவேற்கக்கூடியது. ஆனால் இப்போது பனை ஏறுகிறவர்கள், எங்கள் தென் மாவட்டங்களில் complete-ஆக police raid-ஆல் பாதிக்கப்படுகிறார்கள். இப்போது காஞ்சிபுரத்திலேகூட ஒரு போலீஸ் அதிகாரியே பனை மரத்திலே உள்ள அந்தக் கலசத்தைப் பார்த்து சுட்டிருக்கிறார். இன்னொரு ஊரில் ஆள் வைத்து பனையில் உள்ள பாளைகளையெல்லாம் வெட்டிப் போட்டிருக்கிறார்கள். அவன் செய்கிற தொழில் எவ்வளவு மோசமான, எவ்வளவு சங்கடமான தொழில். அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபடுகிறவர்களைப் பார்த்து "நீங்கள் கள் குடித்திருக்கிறீர்கள், கள்ளை விற்கிறீர்கள்" என்று சொல்லி, —உண்மையிலேயே ஒரு சிலர் அந்தமாதிரி தவறு செய்யலாம். ஆனால் தவறு செய்கிறவர்கள்மீது நீங்கள் வழக்கு போடுவதைப்பற்றி நாங்கள் யாரும் குறை சொல்லவில்லை— நல்லவர்கள், உண்மையான பனை ஏறுகிறவனைக்கூட மிகுந்த சங்கடப்படுத்துகிற நிலை இப்போது தென் மாவட்டங்களிலே மிக அதிகமாக இருக்கிறது. நாங்கள்கூட, இரண்டு மூன்று நிகழ்ச்சிகளில் பார்த்து அந்த ஊரில் பேசி பனை மரத்தைக்கூட யாரும் போடாதீர்கள் என்று சொல்லி, அந்தமாதிரி தவறுகள் நடக்கும் என்றால் நாங்களேகூட, காவல் துறைக்குச் சொல்லியிருக்கிறோம். ஆனாலும் அரசு உடனடியாக இந்தப் பனை ஏறும் தொழிலாளிகளைத் தேவையில்லாமல் தொந்தரவுபடுத்துவதை நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.



2000 மே 5]

**திரு. பா. வேல்துரை:** இப்போது மீனவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுப்பது போன்ற நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறோம். அதுமாதிரி இந்தப் பனைத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். சித்த மருத்துவத்தினுடைய மகிமை பற்றி இந்தச் சபையிலே சொல்வார்கள். ஆனால் இப்போது சித்தாவிலே உள்ள கசப்பான மருந்துகளைக்கூட, அந்தக் காலத்திலே கருப்புக் கட்டியை வைத்து இடித்து அந்தக் கருப்புக் கட்டியின் உள்ளே வைத்து சாப்பிடச் சொல்வார்கள். அந்த அளவிற்கு இந்த கருப்புக் கட்டிக்கு நல்ல மருத்துவ சக்தி உண்டு. இப்போது தமிழகத்திலே குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து கொடுக்கிற பாலிலேகூட அரசாங்கம் கருப்புக் கட்டியைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால், இந்தக் கருப்புக் கட்டியினுடைய உபயோகம் அதிகமாக இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த நிலையை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

மண்பாண்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், மண்பாண்டத் தொழில் என்னுடைய தொகுதியிலே, காருக்குறிச்சியிலே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த காலங்களிலே, காருக்குறிச்சி மண்பாண்ட சொசைட்டியிலே பல இலட்சத்திற்கு ஊழல் நடந்தது. அதற்கு விசாரணை வைப்பதற்காக பல முறை அரசுக்கு பல மனுக்களைக் கொடுத்தும்கூட இன்றுவரை அவற்றிற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால், அந்த நஷ்டங்களை எல்லாம் மண்பாண்டத் தொழிலாளர்களுடைய கடனிலே கொண்டுபோய் கணக்கு வைக்கப்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் அந்தக் கடனைச் செலுத்த வேண்டுமென்று இப்போது நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே யார் தவறு செய்து இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்து, அவர்கள்மீது அந்தச் சுமையை ஏற்ற வேண்டுமேதவிர, ஏழைகள்மீது சுமையை ஏற்றக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். சின்னசெங்கம்பாளையம் போன்ற இடங்களில் அவர்கள் மண் அள்ள முடியவில்லை. மண்ணை அள்ளினார்கள் என்றால், ரொம்ப அநியாயமாகப்

[திரு. பா. வேல்துரை] [2000 மே 5

பிடிக்கிறார்கள். சின்ன குடிசைத் தொழில் செய்கின்ற அவர்கள் மண்ணை அள்ளுவதற்கு அனுமதியை உடனடியாக வழங்கி, அந்தத் தொழில் சிறப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு தந்ததற்காக உங்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order?

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்கள் பேசுகிறபோது ** என்றுதான் சொன்னார்கள். யார் மீதும் அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. விதி 93-ன்படி குற்றச்சாட்டு என்று சொன்னால்தான் ஆதாரம் காட்ட வேண்டுமென்று இருக்கிறதேயொழிய. ** என்பதற்கு பதிலாக அமைச்சர் சொல்லலாமேயொழிய, அதை அவைக்குறிப்பிலிருந்து எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை அவைக்குறிப்பிலே ஏற்றிக்கொள்ளும்படி தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றாக சட்டம் பேசுகிறீர்கள். உங்களுக்கு ஒரு சட்டத்தை ஞாபகப்படுத்துகிறேன். இந்த நாற்காலியிலே யார் உட்கார்ந்தாலும், அவர்தான் பேரவைத் தலைவர். மாற்றுத் தலைவர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் உட்கார்ந்து ஒரு தீர்ப்பு கொடுத்தாலோ, திரு. பெரியசாமி ஒரு தீர்ப்பு கொடுத்தாலோ, நான் பேரவைத் தலைவர் என்று வந்து அதை மாற்றினேன் என்றால், நாளைக்கு மாற்றுத் தலைவர் பட்டியலில் எங்கள் பெயர் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள். சட்டம் எப்படி என்று கேட்டீர்கள் என்றால், இந்த நாற்காலியில் யார் உட்கார்ந்து இருக்கிறார்களோ, அவர்கள்தான் பேரவைத் தலைவர். இருந்தாலும், என்ன பிரச்சினை சொன்னார்கள் என்பதை நான் Record-ஐப் பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போது நீங்கள்தான் பேரவைத் தலைவர்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2000 மே 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவர் நீக்கியதை நான் திருப்பி ஏற்றுவது என்றால், இது என்ன? (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** The Speaker can even correct it.

**HON. SPEAKER:** No, No. That is what I am saying, Don't lose your temper. Please listen. I won't ever put you on a panel of Chairmen, because you don't understand that. But your party is represented. So, whoever sitting here is the Speaker and he takes a decision. I will go into it and see what is there. மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் ஐந்தாவது முறையாக மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கின்ற மகத்தான நல்வாய்ப்பைக் கொடுத்த தமிழக முதல்வரும், எங்கள் குடும்பத் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். கதர் கிராமத் துறையைப் பொறுத்தவரையில், ஆங்காங்கே கிராமங்களில் கிடைக்கின்ற மூலப்பொருட்களை வைத்து உற்பத்தி செய்து, கிராமத் தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற விதத்தில் இந்த வாரியம் நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. மும்பையிலே இருக்கின்ற கதர் ஆணைக் குழு, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களையும் ஆய்வு செய்தபோது, அரியானா மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்திலுள்ள கதர் கிராமத் தொழில் வாரியம்தான் இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்று ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, அந்த அளவிற்கு கதர் வாரியம் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வாரியத்தில் 88,116 கைவினைஞர்கள் பணிபுரிந்து பயனடைந்து வருகிறார்கள். இதில் 35 ஆயிரம் பெண் கைவினைஞர்கள் இப்போது தொழில் புரிந்து வருகிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. கடந்த 4 ஆண்டுகளில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த வாரியம் சிறந்து விளங்க வேண்டும் என்று பல நேரங்களில் ஆலோசனைகளை வழங்கியதோடு இதற்கு நிதி ஆதாரங்களையும் தந்திருக்கிறார்கள்.

இறந்த பிறகு அந்தக் குடும்பங்களுக்கு 20 வருடங்கள் வழங்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை இருக்கிறது. 10 வருடங்களிலே நிறுத்துவது என்பது சரியாகத் தெரியவில்லை. ஆகவே 20 ஆண்டுகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியில், கல்லிடைக்குறிச்சி மற்றும் வீரவநல்லூரில் உள்ள நெசவாளர்களெல்லாம் கடன் சுமையால் நெசவுத் தொழிலை விடக்கூடிய அளவுக்கு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு குறைந்த வட்டியில் கடன் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பொழுது நெசவாளர்களை உடனடியாகக் காப்பாற்றும் நடவடிக்கை என்று சொன்னால், 19 சதவீத வட்டி என்பதை, குறைந்த வட்டியில் நீங்கள் அவர்களுக்குக் கடன் வழங்கினால், நெசவாளர் சங்கங்களை வீழ்ச்சியிலிருந்து தடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அடுத்து பத்தமடையில் பாய் நெசவு. பாய் நெசவில் உலகிலேயே வேறு எவரும் அந்தப் பெயரில் தயாரிக்கக் கூடாது என்று சொல்லி World Trade Organisation வற்புறுத்தியிருக்கிறது. இது பாராட்டக்கூடியது, வரவேற்கக்கூடியது. ஆனால் பத்தமடை பாய் உற்பத்தியே இல்லாமல் இருக்கிறது. உற்பத்தி குறைந்து விட்டது.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும். நான் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறேனா என்பது வேறு.

**திரு. பா. வேல்துரை:** நான் நீங்கள் வந்ததைப் பார்க்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் எங்கே உட்கார்ந்து கொண்டிருந்தாலும் அவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும். அமைச்சரைப் பார்த்துப் பேசக் கூடாது.

**திரு. பா. வேல்துரை:** கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்று சொல்வதுபோல், பாய் தொழில் முழுமையாக நசிந்து அழிந்து போகிற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. பாய் நெசவிற்கு



உடனடியாக நல்ல தொழிற் கூடங்களை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்து குறைந்த வட்டியில் கடன் வழங்கி—அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்து—பாய் நெசவினை ஊக்கப்படுத்தி அவர்களுக்காக தனியாக மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விற்பனைச் சந்தைகளிலே இடம் கொடுத்து பத்தமடை பாய் உற்பத்திக்கு புத்துணர்வு ஊட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பனைத் தொழிலைப் பொறுத்தவரை, பனை வாரியம் 1995-ல் உருவாக்கப்பட்டது. வாரியம் உருவாக்கப்படுவதற்கு முன்பாகவாவது மும்பையிலிருந்து கதர் வாரியத்தின் மூலமாக சுமார் 8, 8½ கோடி ரூபாய் வழங்கி அந்த வாரியத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆண்டுதோறும் பணம் வழங்கியிருந்தார்கள். ஆனால் 1995-ல் வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, ஒரு பைசாகூட இப்போது வரைக்கும் நிதியே ஒதுக்கப்படவில்லை. அந்தப் பனை வாரியத்திற்கு அங்கீகாரம்கூட கொடுக்கவில்லை. அங்கீகாரம் கொடுத்தாலாவது NABARD வங்கியின் உதவியையோ அல்லது மற்ற ஏதாவது உதவிகளையோ பெற முடியும். ஆனால் அந்தப் பனை வாரியம் எதற்காகத் தொடங்கப்பட்டது? பனை வாரியம் என்ற ஒன்று இயங்குகிறதா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். வேல்துரை, நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை. அமைச்சரை பிறகு பதில் சொல்லச் சொல்கிறேன்.

**திரு. பா. வேல்துரை.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை வாரியத்திலே கிராம அளவில் கிட்டத்தட்ட 1008 பனை உற்பத்தியாளர் சங்கங்கள் இருக்கின்றன. 7 மாவட்ட பனைப் பொருள் சம்மேளனங்கள் இருக்கின்றன. ஒரு மாநில பனைப் பொருள் கூட்டுறவு இணையம் இருக்கிறது. இவ்வளவு இருந்தும், அதிலே இருக்கிற அதிகாரிகளுக்குக்கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலை. கிட்டத்தட்ட 6 மாதங்களாக சம்பளம் கொடுக்கவில்லை அவர்களுக்கு. அந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடே இல்லாத ஒரு

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [2000 மே 5

பிற்பகல் 1.25

கதர் வாரியத்தில் இருக்கின்ற அலகுகள், சங்கங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளுக்கு, அரசாங்கத்தினுடைய தொழில் நிறுவனங்களுக்கு பொருட்கள் சப்ளை செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு ஆணை நிலை எண் 283-ன்படி ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்த காரணத்தால்தான் இந்த வாரியம் சிறந்து விளங்குகிறது. அதனுடைய அடிப்படையில்தான் அரசாங்கத்தில் இருக்கிற பல்வேறு துறைகளிடமிருந்து order-கள் பெற்று கிராமத் தொழில்கள் மற்றும் பல்வேறு தொழில்கள் இப்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தோல் தொழில் பிரிவு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிராமத் தொழில்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் இந்த அரசாணை எண் 283 ஆகும்.

கடந்த மாதத்திலேகூட, இந்தத் துறைக்கு 2 கோடி ரூபாய் மதிப்புள்ள order, காவல் துறையிலிருந்து காலணிகள் சப்ளை செய்வதற்கு வந்திருக்கிறது. இதற்கான ஆணையைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் தங்குவதற்காக இப்போது கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளுக்குத் தேவையான மரச் சாமான்கள் அனைத்தையும் கதர் வாரியம்தான் நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில் கதர் வாரியத்திற்கு மட்டும் 14 கோடியே 93 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாயும் சர்வோதயச் சங்கங்களுக்கு 23 கோடியே 98 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் தலைவர் கலைஞர் அவர்கள் தள்ளுபடி மானியம் அளித்து, இந்த கதர் வாரியம் வளர்வதற்கும், செயல்படுவதற்கும் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



[திரு. அந்தியூர் ப. செல்வராசு]

2000 மே 5]

கதர் விற்பனையைப் பொறுத்தமட்டில் இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 103.84 கோடி விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் கிராமத் தொழில்களைப் பொறுத்தவரையில், இந்த 4 ஆண்டுகளில் விற்பனை செய்த மொத்தக் குறியீடு 1,320 கோடியே 78 இலட்சம் ஆகும். இந்த 4 ஆண்டுகளில் மும்பையில் இருக்கிற கதர் ஆணையத்தின் மூலம் கடன் உதவி பெற்று தொழில் புரிந்த வகையிலும், கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் புரிந்த வகையிலும், வாரியத்தில் இருக்கின்ற அலகுகள் தொழில் புரிந்த வகையிலும், இந்தக் குறியீடு அடங்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் இந்த வாரியத்தில் பணிபுரிகின்ற சுமார் 2200 நெசவாளர்களுக்கு அச்சு விழுதுகள் ரூ.27.75 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு இந்த மானியத்திற்கு அதிக நிதி ஒதுக்கித் தரவில்லை என்று சொன்னார்கள். அதை மனதில் வைத்து, கருத்திலே கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு உறுப்பினர்கள் என்னிடத்தில் நேரடியாகச் சொன்னார்கள். இந்த வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். 1-1-1996-க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு ரூ.68.54 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. 1-4-1998-லிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ரூ.312.97 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் இறுதியாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேல்துரை அவர்கள் பனை வாரியத்தைப் பற்றி சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பனை வாரியத்தைப் பொறுத்தவரையில்—இன்றைக்குப் பத்திரிகை செய்தியைக்கூடப் பார்த்திருப்பீர்கள்—14-2-1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் பதநீர்

தலைமை அலுவலகத்திற்கே சென்று அங்கேயிருக்கின்ற பதநீரை அருந்திவிட்டு, அதைப் பாராட்டிவிட்டு, அங்கே ஒரு குறிப்பை எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1.30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல நேரம் நீட்டிக்கப்பெறுகிறது

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** அந்த அளவிற்கு சிறப்புமிக்க பனை வாரியம் இப்போது நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. 1008 பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் இதில் செயல்படுகின்றன. இதிலே பனைத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கின்ற வகையில் அரசாங்கத்தினுடைய பிற துறைகள் என்று சொல்லப்படுகின்ற பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளுக்கு ஆண்டுதோறும் பனை விதைகள் சப்ளை செய்யப்படுகின்றன. 1996-97 முதல் கடந்த ஆண்டு வரை பனைத் தொழில் அபிவிருத்திக்கு மட்டும் 72.72 இலட்சம் ரூபாய் பகுதி 2 திட்டத்தில் மானியமாக அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. கடந்த ஆண்டில் பனைத் தொழிலாளர்கள் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு கடன் பெற்று, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை இருந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் இந்த விவரத்தை எடுத்துச் சொன்ன நேரத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு அந்த 3 கோடி ரூபாயை இன்றைக்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் இருக்கின்ற 8 கோடி பனைமரங்களில் 5 கோடி பனை மரங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளில் ஒரு பாடத்தைச் சொல்வார்கள். "பனை மரமே பனை மரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே நான் வளர்ந்த காரணத்தை நண்பர்களே சொல்கிறேன்" என்ற ஒரு பாடலை ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். பனை மரத்தினுடைய அனைத்து பாகங்களும் பொதுமக்களுக்கு உபயோகமாக இருக்கிறது. இப்போது இந்தியாவிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பனைப் பொருட்களில் 77 விழுக்காடு தமிழகத்திலேதான் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற பனைத் தொழில் உற்பத்தியான ரூ.194.98 கோடியில், தமிழ்நாட்டில் மட்டும் ரூ.142.27 கோடிக்கு பனைப் பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல. பனைத் தொழிலில் தயாரிக்கப்படும் பனைநார் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தப் பனைநார் பெல்ஜியம், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு தூத்துக்குடியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் இனி வரும் ஆண்டில் சுமார் 2 கோடி ரூபாய் அளவிற்கு பனைப் பொருட்கள் ஏற்றுமதி செய்ய உத்தேசமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, இந்த ஆண்டு நடைமுறையில் வர இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இத்துறையைத்தவிர, என்னிடம் இன்னொரு துறை ஒன்று இருக்கிறது. பூமிதான வாரியம். இந்த பூமிதான வாரியத்தில் 27,538 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இதிலே 18,626 ஏக்கர் நிலங்கள் இப்போது தானமாக வழங்கப்பட்டிருக்கின்றன. 8,912 ஏக்கர் நிலம் மீதி இருக்கிறது. இதில் வழக்குகளில் சம்பந்தப்பட்ட நிலங்கள் 1,320 ஏக்கர். இந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி 548 ஏக்கர் நிலங்கள் 585 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. வீட்டுமனைப் பட்டா அல்ல, விவசாய நிலப் பட்டா என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு சார்ந்த துறைகள், பள்ளிக்கூடங்கள், அரசு மருத்துவமனைகள், மின்சாரத் துறையில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக நிலங்கள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ... அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் மேட்டூர் பாலசுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை கோபால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேட்டூர் தொகுதி அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேட்டூர் தொகுதி ஜலகண்டபுரத்தில் 1.89 ஏக்கர் நிலம் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டம், பவானியில் ஜம்பை பகுதியில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி

இருந்தாலும் புதுக் கதா என்று நேற்று அறிவித்தார்கள். இது தயார் செய்யப்பட்டு மக்களுக்குப் புழக்கத்தில் வரும்போது, மக்கள் அணிகின்ற நேரத்தில், அதற்குத் தனியாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பெயரைச் சூட்ட இருக்கின்றார்கள். ஆகவே இந்த நிதியாண்டில் ஒரு புது இரக கதர்த் துணியை இப்போது அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில் கதர் அணிகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவரும் கதர்த் துணிகள் அதிக விலையில் விற்கப்படுவதால் எங்களால் வாங்கி அணிய முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அத்தனை பேரும் கேட்டுக்கொண்டார்கள். குறிப்பாக பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் பெரியசாமி போன்றவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நம்முடைய வி.கே. இலட்சுமணன் போன்றவர்கள், எல்லாம் என்னிடத்தில் சந்திக்கின்றபோதெல்லாம அடிக்கடி கூறுவார்கள். அவர்களுடைய கருத்தை வைத்து, ஆண்டு முழுவதும் கதர் வாரியத்தில் உற்பத்தி செய்கின்ற கதர், பட்டு அனைத்து இரகங்களுக்கும், 20 சதவிகிதம் தள்ளுபடி மானியம் அளிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, இப்போது கதர் வாரியத்தின்கீழ் வரும் விற்பனை நிலையங்களில் மொத்த விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, பிற துறைகளில் தயாரிக்கின்ற டான்டீ, டாம்ப்கால் மற்றும் ஆவின் போன்ற பொருட்களை இந்த வாரியத்தினுடைய அலகுகளில் வைத்து விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டு அதை பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த இருக்கின்றோம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 23 பேர் 55 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்தேன். அந்த வெட்டுத் தீர்மானங்களில் சில ஏற்கக்கூடியதாக இருக்கின்றன. சில தீர்மானங்கள் படிப்படியாக நிறைவேற்றக்கூடியதாக இருக்கின்றன. உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் கனிவுடன் பரிசீலித்து, எதிர்காலத்தில் கண்டிப்பாக நிறைவேற்றுவேன். ஆகவே உங்களுடைய வெட்டுத் தீர்மானப் பிரேரணைகளை திரும்பப்



பெற்றுக் கொண்டு அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை வழங்குமாறு அன்போடு கேட்டு, இந்த அளவுக்கு என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர். எல்லோரும் சனி, ஞாயிறு என்பதால் ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பேசி முடித்தால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, துணிநூல் துறை சார்பில் ஐந்தாவது தடவையாக இந்த அவையிலே மானியக் கோரிக்கையை முன்வைத்து உங்கள் அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்ற, மிகப் பெரிய பொறுப்பை எனக்கு அளித்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்களுக்கும், சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து இன்றுவரை சிறப்பாகப் பணியாற்றிய எனக்கு ஒரு நல்ல துறையைக் கொடுத்து அதிலே ஈடுபட வைத்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் எல்லாப் புள்ளிவிவரங்களும் கொடுக்கப்பட்டு, அதையே நான் மீண்டும் இங்கே பேசிக் கொண்டிருப்பதிலே அர்த்தம் இல்லை என்று நினைக்கின்ற காரணத்தால், பொதுவாக என்னுடைய துறை எப்படிச் செயல்படுகிறது என்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை செயல்படுவதிலே இருக்கின்ற குறைபாடுகள், நிறைவுகள் என்ன என்பதை யார் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு பக்குவம், எனக்கு இந்த இரண்டு ஆண்டு காலத்திலே வந்திருக்கிறது. தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன வார்த்தையை 10 தினங்களுக்கு முன்பு படித்தேன். 50, 55 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன வார்த்தை அது. Think about tomorrow. But act for today— 'இன்றைக்காக நீ உழை'. இதற்கு நான் தமிழ் அர்த்தம் கொடுகக வேண்டியதில்லை. அந்த அடிப்படையில்தான் நான் இங்கே ஞானசேகரன் அவர்கள் சொன்னாலும், நண்பர் சுப்பராயன் அவர்கள் சொன்னாலும், அண்ணன் அழகிரியைப் போன்றவர்கள் சொன்னாலும (குறுக்கீடு) அவரை எப்போதும் அண்ணன் அழகிரி என்றுதான் சொல்வேன்.

கட்டுவதற்கும், ஒரு துணை மின் நிலையம் கட்டுவதற்கும் பூமிதான நிலம் தானமாக வழங்கப்பட்டது. ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு 1 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேரூர் நடராஜன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கோவை மாவட்டம், மயிலேரிபாளையத்தில் 3 ஏக்கர் நிலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் பல்வேறு கட்டங்களில் பல்வேறு திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் பேசுகிறபோது பதநீரின் தரம் குறைவானதாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் அது மாறுபடும். தண்ணீர் இருக்கின்ற இடங்களில் அதனுடைய தன்மை மாறுபடும். வறட்சிப் பகுதிகளில் இருக்கின்ற பதநீர் தன்மை மாறுபடும். ஆகவே பதநீரைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு மாவட்டம் தரம் மாறுபடும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

இறுதியாக சில அறிவிப்புகளைச் செய்து என்னுடைய உரையை நிறைவு செய்ய இருக்கின்றேன். நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பெரியசாமி அவர்கள் பவானி சாயத் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாமல் அதனுடைய உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதனை அடிப்படையாக வைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்ன நேரத்திலே அந்த உபகரணங்கள் வாங்குவதற்கு இந்த ஆண்டு 17 இலட்சம் ரூபாய் அனுமதி அளித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி ஈரோடு மாவட்டம் காங்கேயம், கடலூர் மாவட்டம் பண்ருட்டி, கரூர் மாவட்டம் பெருமாள்மலை போன்ற பகுதிகளில் இருக்கின்ற சோப்பு அலகுகளுக்கு, நவீன முறையில் சோப்பு உற்பத்தி செய்வதற்கு 4.00 இலட்சம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டு



இருக்கிறது. சென்னை கிண்டி மற்றும் நாகர்கோவில் போன்ற பகுதிகளில் நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, காலணி அலகுகளை நவீனப்படுத்துவதற்கு 12 இலட்சம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரும்பாலும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் நிதி ஆதாரங்கள் இல்லாமல் மிகவும் நலிவடைந்து இருக்கின்றது என்று சொன்னார்கள். அதை மையமாக வைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்ன நேரத்திலே, இந்த இணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றி வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் பேவின் செல்வின் அவர்கள் இந்த வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆலோசனையின்படி மும்பை கதர் ஆணையத்தினுடைய ஆணையைப் பெற்று பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் நிதி அளிக்கப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது வளர்ந்து வரும் நாகரிகத்திற்கேற்ப மக்கள் காலையிலே உடுத்துகின்ற ஆடையை மாலையில் உடுத்துவது இல்லை. ஆகவே மனித சக்தி இயந்திரத்தால் நெய்யப்படுகின்ற இந்தக் கதர் ஆடைகளை மக்கள் பெரிதும் விரும்புகின்றார்கள். அவர்களுடைய கலாச்சாரத்திற்கு, நாகரிகத்திற்கு ஏற்ப, இப்போது ஒரு புது இரக ஆடையைத் தேர்வு செய்து அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். நேற்றைக்குக்கூட அதனுடைய sample-ஐ மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் காண்பித்தபோது மிக மகிழ்ச்சியடைந்து, 'இதுமாதிரி ஒரு துணியை அறிமுகப்படுத்தியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இது ஏழைஎளிய மக்களும், நடுத்தர மக்களுக்கும், ஏன் எல்லோருமே பயன்படுத்தக்கூடிய ஒரு நல்ல இரகமான துணியாக இருக்கிறது; இதை நல்லமுறையில் உற்பத்தி செய்யுங்கள்' என்று சொன்னார்கள். அதற்கு பெயரை இன்னும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்வு செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கொஞ்சம் இளைஞராகக் காட்சியளிக்கிறார். அதற்கு என்ன இரகசியம் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** ஆகவே பொதுப்படையாக 4 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையைப் பற்றி நான் இப்போது சொல்லத் தேவையில்லை. ஆந்திரம் மற்றும் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து பஞ்சு வியாபாரிகளுடைய குப்பைக் கூளங்களுக்கு Dumping yard— ஆக நூற்பாலைகள் எல்லாம் இருந்தன. அந்தப் பஞ்சுக் கடனை இந்த அரசு கட்டியிருக்கிறது. கோ-ஆப்டெக்சிலே ஆந்திராவிலே இருந்து வாங்கப்பட்ட 12 கோடி ரூபாய் சல்லடைத் துணிக்கு இந்த அரசு பொறுப்பேற்று அதை ஒழுங்குபடுத்தி இன்று கோ-ஆப்டெக்ஸ் ஓர் ஒழுங்குமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேபோல 1200-க்கு மேற்பட்ட சங்கங்கள் என்று சொன்னார்களே, அவற்றில் கணக்கே முடிக்காமல், ஆண்டாண்டுக்காலம் கணக்கு எழுதி வைத்தே 43 கோடி ரூபாய் தள்ளுபடி மானியம், முறைகேடான மானியம்—நாளும், ஏன், உயர்மட்டக் குழுவிலே மாண்புமிகு தாமரைக்கனி, நண்பர் பெரியசாமி, அனைவரும், அனைத்து கட்சியினரும் சேர்ந்து எடுத்த முடிவின்படி — 43 கோடி ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. இது தெரியாத செய்தியல்ல.

அதேபோல இலவச வேட்டி, சேலை, இரண்டு கோடி வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யும்போது தவறு நடப்பதற்கு வாய்ப்புண்டு. ஆனால் இந்த நாட்டிலே இருக்கின்ற நிலை என்னவென்றால் எங்கே நம்முடைய தலைவர் சென்றார்களோ அல்லது நம்முடைய பேராசிரியர் சென்றார்களோ, அங்கே ஒரு சேலை சற்று சல்லடையாகத் தெரிந்தாலும்கூட 'பாருங்கள்' என்று கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டதற்குக் காரணமே இதற்கு முன்பிருந்த ஆட்சியினுடைய அலங்கோலம்தான். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இலவச வேட்டி சேலையைப் பொறுத்தவரையிலே சரோடுதான் மார்க்கெட் முதலிலேயே சொல்லி வைத்து. கடந்த காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தால் இலவச வேட்டி சேலை சந்தைக்கு வரக்கூடும் என்று முன்னேற்பாடாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சில நடவடிக்கைகளை எடுத்தோம். அதனுடைய விளைவு தெற்கு மாவட்டங்களிலே 200 பகுதிகளிலேயிருந்து வருகின்ற இலவச வேட்டி சேலைகள் கைப்பற்றப்பட்டன; வழக்குப் போடப்பட்டது. அதனுடைய



விளைவு, இலவச வேட்டி, சேலையிலே தவறு செய்யக்கூடாது என்ற ஓர் எண்ணம் உருவாகியது. ஆனால் இன்று ஒரு நிலை. சங்கரன்கோயிலில் நண்பர் கருப்பசாமி அவர்களுடைய தொகுதியிலேயே அது நடந்தது என்றால், அதையும் நாங்கள் முன்னேற்பாடாக அவர்கள் ஒரு வழிமுறை வைத்தால் நாம் ஒரு வழிமுறை வைக்க வேண்டும், இது ஜனவரி மாதத்திலே நடைபெறுகின்ற விநியோகம், ஆகவே, நாம் கண்காணிப்பது பிப்ரவரியிலே இருக்க வேண்டும் என்று இந்த ஆண்டு வைத்த காரணத்தினால்தான், பொங்கல் முடிந்து, இலவச வேட்டி, சேலை கொடுத்து, புகார்கள் எங்கும் இல்லை என்ற நிலையிலே இருந்துதான், சங்கரன்கோயில் இலவச வேட்டி, சேலைத் திருட்டு வெளியே வந்தது. சட்டமன்ற உறுப்பினருக்கே உரிமையுண்டு; அவருடைய தொகுதியிலே அவரே சென்று கொடுக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. அப்படி இருந்தும் எப்படி அங்கே 90 பேல் இலவச வேட்டி, சேலை வெளியே வராமல் முடங்கிக் கிடந்தது என்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்தான் பொறுப்பேற்க வேண்டுமேயொழிய, நான் அல்ல. அவருக்கு உரிமை கொடுக்காமல் இருந்தால் அதைச் சொல்லலாம். அப்படி உரிமை கொடுத்து, இன்றுவரை இலவச வேட்டி சேலையை மிகச் சிறப்பாக விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். இங்கேகூட சொன்னார்கள். ஒருசில இடங்களிலே பணம் கொடுக்க வேண்டும், பாக்கி இருக்கிறது என்று நிதி நிலைமையை அனுசரித்து நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே எங்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை.

பிற்பகல் 1-45

அடுத்து உயர்மட்டக் குழு மிகச் சிறப்பாக ஏறத்தாழ 24 பரிந்துரைகளைச் செய்திருந்தது. அந்த 24 பரிந்துரைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு 70 கோடி ரூபாய் செலவினங்கள் அளிக்கப்பட்டு, அதிலே உயர்மட்டக் குழு அளித்த பரிந்துரைகளை அப்படியே கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். 'இவ்வளவுதானா, இன்னும் இதற்கு மேலா; இது கிடைத்தால் போதுமா; நெசவாளர்களுக்கு நலன் கிடைக்குமா' என்றெல்லாம் கேட்டார்கள். 'ஆம்' என்று சொல்லித்தான் அதைப் பெற்றோம். அதனுடைய பயனை நாம் இன்று அனுபவிக்கிறோம். ஆனால் இங்கே தொடர்ந்து ஒரு வார காலமாகப் பேசிக்கொண்டிருக்கிறபொழுது, நான் யாரையும் குறைத்து மதிப்பிடவில்லை. நண்பர் சுப்பராயன் அவர்கள் GATT

ஒப்பந்தத்தையொட்டி, W.T.O.-வைப் பற்றி அவர் சொன்ன வார்த்தைகளெல்லாம் மிகவும் ஆழமான, அழுத்தமான, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வாதம். ஓர் அச்ச உணர்வு. காரணம், நாம் ஏமாறக்கூடாது என்ற அடிப்படையிலே நாம் அதிலே இருக்க வேண்டும் என்பதிலே, எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. அதனுடைய விளைவுதான் Seattle-ல் நடந்த மாநாடு கூட. வேளாண்மைத் துறையையொட்டிய பல ஒப்பந்தங்களுக்காகவே Seattle மாநாடு. அந்த Seattle மாநாட்டிலே நாம் ஏமாறவில்லை. ஏமாற முடியாத அளவிற்கு நம்முடைய மத்திய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் Seattle-லேயே அதைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டு வந்திருப்பதை நண்பர் சுப்பராயன் அவர்களும் அறிவார்கள்; நாமும் அறிவோம். W.T.O. ஒரு வழிப் பாதை அல்ல, W.T.O. இருவழிப் பாதை. அது நமக்குத் தேவை. அது நமக்குத் தேவை என்றாலும், அச்சம் ஏன் வருகிறது என்றால், வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயன்தான் இந்த நாட்டை ஆண்டான். போர்ச்சுக்கீசியன்தான் இந்த நாட்டை ஆண்டான். நம் நாட்டை அடக்கக்கூடிய பொருளாதார வலுவை வியாபாரி என்ற போர்வையிலே யாராவது திணித்து விடுவார்களோ என்ற அச்சம் சுப்பராயன் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை. அந்த அடிப்படையிலேதான் இன்று நம்முடைய ஏற்றுமதி இருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே ஏற்றுமதியிலே இருக்கின்ற சங்கடங்களை நாம் அறிவோம். அந்தச் சங்கடத்திற்காகத்தான் கடந்த ஆண்டு திட்டமிட்டு, முதற்கட்டமாக சோதனையாக நம் ஏற்றுமதிக்கு வேண்டிய ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். அங்கே ஒரு சபையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** ஏற்றுமதிக்கு வேண்டிய உற்பத்தி 'deemed export', exports இதிலே நாம் எப்படிச் செயலாற்றுவது என்று ஓர் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க நாங்கள் முயற்சி செய்தோம். முதலிலே பொதுவாக, financial indiscipline என்பது இந்தத் துறையிலே தொடர்ந்து இருந்து வந்த ஒன்று. Financial indiscipline கடந்த ஆண்டிலே ஒழுங்குபடுத்தப்பட்டு, 1999 செப்டம்பரையே எங்களுடைய ஆண்டு இறுதியாக வைத்து, அதுவரை தள்ளுபடி மானியத்தை வழங்கி இருக்கிறோம். அதற்குப் பின்பு



எடுத்த முயற்சிதான் deemed export and export. Export-லே Co-optex 3 கோடி, $2\frac{3}{4}$ கோடி, $1\frac{1}{2}$ கோடி, இந்த ஆண்டு 5 கோடி என்ற அளவிலேதான் இருந்தது. ஆனால் deemed export என்ற முறையிலே நான் கடந்த ஆண்டு இந்த அவையிலே உறுதியளித்தேன். 25 கோடி, இந்த ஆண்டு ஏற்றுமதிக்கான உற்பத்தியை உற்பத்தி செய்து ஏற்றுமதியாளரோடு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் ஒரு புதிய அணுகுமுறையை, செலவினத்தைக் குறைக்கின்ற வகையிலே கடைப்பிடிக்கலாம் என்று அந்த அறிவிப்பினை இங்கே நான் செய்தேன். அதிலே நான் முழுமையாக வெற்றி பெற்றுவிட்டேன். உதாரணத்திற்கு நான் சொல்வது, 25 கோடி ரூபாய் ஏற்றுமதி ஆகிவிட்டது. 25 கோடிக்கு 5 கோடி ரூபாய் லாபம் பெற்றிருக்கிறோம். சொன்னால் நம்பமாட்டீர்கள்; நாளை கணக்குப் போட்டு, என்னைப் பிடிக்கலாம் என்றுகூட நினைப்பீர்கள். உண்மையாகக் கிடைத்திருக்கின்ற ரொக்க இலாபம் 5 கோடி ரூபாய். இதை யாரும் மறுக்க முடியாது. 'சென்கோடெக்ஸ்' என்ற ஓரே சங்கம், கே. சின்னசாமி கவுண்டர் அவர்கள் மறைந்த பின்பு, அதற்குத் தலைவர் போடப்படவில்லை. அந்தச் சங்கம் நம்முடைய திட்டத்தையேற்று, பல தறிகள் இன்று deemed export-லே உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1.50

அதுமட்டுமல்ல. அவர்கள் நூலை கிரயம் கொடுத்து வாங்குவதில்லை. அதற்குச் சாயம் அவர்களே போடுவதில்லை. இந்த இரண்டும் இல்லாத காரணத்தினால், அவர்களுக்கு முதலீடு தேவையில்லை. ஆனால் ஏற்றுமதியாளர்களோடு நாம் ஒப்பந்தம் போடுகின்றபோது குறைந்தபட்சம் 18 சதவிகிதம் லாபத்தோடு, அந்த deemed export-இன் உற்பத்தி இருக்க வேண்டும் என்று நாம் தெரிவித்திருக்கிறோம். ஆனால் கரூர் பகுதியிலே அவர்களுடைய தேவையை அனுசரித்து நேர, காலத்தை அனுசரித்து, 25 சதவிகிதம்கூட இலாபம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இன்று ஏற்பட்டு, அந்த 'சென்கோடெக்ஸ்' ஒன்று மட்டும், 1 கோடி ரூபாய் மாதம் ஒன்றுக்கு உற்பத்தி, மாதம் ஒன்றுக்கு 25 இலட்சம் ரூபாய் ரொக்க இலாபம். ஆனால் cash credit-க்குப் போக வேண்டிய கட்டாயமில்லை, தேவையுமில்லை. 3,53,00,000 ரூபாய் அவர்களுக்கு cash credit. ஆனால் அவர்கள் இந்த தடவை 1 கோடி ரூபாய்க்கு உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். அதுவும் உள்நாட்டுத் தேவைக்கு

உற்பத்தி செய்வதற்காக வாங்கப்பட்ட நாலுக்கேயொழிய வேறல்ல. 20 சதவிகிதம் இலாபத்தைப் பெறுகின்ற எக்ஸ்போர்ட் நாலுக்கு நாம் எந்தவிதமான முதலீடும் இல்லாமல், இந்த அளவுக்கு இதைச் சிறப்பாகக் கொண்டுவரக்கூடிய ஒரு வாய்ப்பு இதிலே இருக்கிறது. இது கொல்லைப் புறத்திலே நடந்து கொண்டிருந்தது. இதில் ஒன்றும் மறைக்க வேண்டிய அவசியமில்லை. கொல்லைப்புறத்திலே நடந்ததை, நேர் வழிக்குக் கொண்டு வந்த ஆட்சி, கலைஞர் அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) கொல்லைப்புறத்திலே வேறு காரணத்திற்காக அது நடந்தது. அதை நான் விளக்க விரும்பவில்லை. விளக்கினால், அது நமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. ஆனால், நேர் வழி செய்து விட்ட காரணத்தால், இன்று இங்கே சொன்னார்களே, நிதி ஒதுக்கீட்டிலே ஏன் குறைவு என்றால், தள்ளுபடி மானியத்தை முறையாக இறுக்கிப் பிடித்த காரணத்தினாலே ஏற்பட்ட குறைவு. இன்னும் இருக்கிறது. இன்னும் குறைய குறைய உற்பத்தி, இலாபம் இரண்டும் பெருகக்கூடிய வாய்ப்பும் நிச்சயம் எதிர் காலத்திலே உண்டு. ஆனால் அதே நேரத்திலே நாங்கள் வேளாண்பொருட்கள், மற்றவற்றை தாராளமயமாக்கியிருக்கிறோம். அதனால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றியெல்லாம் நாம் அச்சப்படுவது நியாயம். அச்சப்படுகின்ற காரணத்தினால்தான் இன்று சேயிலையினுடைய இறக்குமதியிலே நாம் பெரிய அளவிலே அதற்கு வரி போடக்கூடிய ஒரு சூழ்நிலை டெல்லியிலே உருவாகி இருக்கிறது. கோழி இறைச்சிக்குக்கூட, 100 சதவிகிதம் வரி என்பது நம்முடைய ஒப்பந்தம். அதே நேரத்திலே நம்முடைய நலனும் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு நாம் அந்தப் பணியிலே இப்போது ஈடுபட்டு வந்திருக்கிறோம். அதோடு மட்டுமல்ல. பொதுவாக, உலக அளவிலே ஒப்பந்தம் என்பது நம்முடைய உற்பத்தி உலக அளவிலே இருக்கின்ற உற்பத்தி. நாம் ஏதோ உள்நாட்டு உற்பத்தியை நினைத்துக் கொண்டு இருந்தால், நிச்சயம் எதிர்காலத்திலே நாம் இதிலிருந்து மீள முடியாது. 2005-லே நாம் வெளிநாட்டோடு போட்டி போடுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவது என்பதிலே என்ன தவறு? இன்று ஒன்றுமே இல்லை; அடிப்படைக் கட்டமைப்பே இல்லை. 25 கோடி ரூபாய் நாம் உற்பத்தியின் மூலம் பெற்றிருக்கிற இலாபம் 5 கோடி ரூபாய். இன்று ஒன்றுமே இல்லை. Information Technology-யிலே யாரும் கிட்டே வர முடியவில்லை. ஏன்? கேட்பவர்களே, தமிழர்கள் என்று கேட்க பயந்து, South Indian தேவை என்று உலகமே கேட்டுக்



கொண்டிருக்கிறது. நாம் வெற்றி பெறவில்லையா? நாம் இதிலே இன்று கொடி கட்டிப் பறக்கவில்லையா? இதிலே திறமைதான் முக்கியமே தவிர, முதலீடு முக்கியம் அல்ல. அதே நிலைதான் W.T.O.—வைப் பொறுத்தவரையிலேயும். இதைப் பொறுத்தவரையிலே என்னுடைய கணக்கு Free trade all over the world is a natural right. இதை யாரும் தடுத்து விட முடியாது. இதை யாரும் தடுக்கக் கூடாது. தடுப்பது நம்முடைய எதிர்காலத்திற்கு நிச்சயம் சரிப்பட்டு வராது. ஆகவேதான் நான் இதை இங்கே சொல்லவில்லை. இந்தப் பொதுவுடமைத் தத்துவத்திற்கு நாம் மட்டும்தான் சொந்தக்காரர்கள் என்று நான் நினைக்கவில்லை. நான் பிறகு அதற்கு வருகிறேன். அதைப் போலவே, நான் கடந்த 2 ஆண்டு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுப்பராயனை வைத்து தத்துவம் பேச ஆரம்பித்தீர்களேயானால், பெரிய ஆபத்து.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** நான் குறிப்பிடுவது அதைப்பற்றி அல்ல. ஆபிரகாம் லிங்கன் வாழ்ந்த இடத்திற்குச் சென்றபோது, அங்கே ஒரு வாசகத்தைப் பார்த்தேன். அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். உண்மையிலே நான் அதை ஒரு படம்கூட எடுத்தேன்.

"You cannot strengthen the weak by weakening the strong; you cannot enrich the poor by impoverising the rich; you cannot further brotherhood of man by inciting class hatred".

இதைத்தான் உலகத்திலே இருக்கின்ற மிகப் பெரிய தலைவர்களும் சொல்கிறார்கள். நாம், அதை ஏகாதிபத்திய நாடு என்று கருதாமல், அங்கும் நமக்கு வாழ்வு இருக்கிறது, அங்கும் நாம் அவர்களுடன் சமமாக வாழக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்ற அடிப்படையிலேதான நம்முடைய உற்பத்தி எதிர்காலத்திலே இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான், பல நலத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, மூன்றரை இலட்சம் நெசவாளர்கள். ஆனால் நலத் திட்டங்கள் முறையாகப் போய்ச் சேரவில்லை என்று அடையாளம் காட்டப்பட்டபோது, அடையாள அட்டை சற்று தாராளமாகக் கொடுத்ததும். இருக்கின்ற நிலை, I

இலட்சத்து 74 ஆயிரம் பேர்தான். இதற்கு முன்பிருந்த ஆட்சியில் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் பேர் இன்று 1.74 இலட்சம் என்றால் மீதி எங்கே? ஏறத்தாழ ஒன்றே முக்கால் இலட்சம் நெசவாளர்கள் எங்கே போனார்கள்? எப்படித் தவறு நடந்தது? எப்படி அந்த ஆட்சி இருக்க முடியும்? எப்படி நட்டப்படாமல் வாழ்வது? சங்கங்களுக்கு 19 சதவீதம் கடன் என்றார்களே, வேறு வழி என்ன? ஆகவே இப்படிப்பட்ட Financial indiscipline கடந்த காலத்திலே இருந்தது. அவையெல்லாம் மாற்றப்பட்டதன் காரணமாகத்தான் இன்று அடையாள அட்டை கொடுக்கப்பட்ட பின்பு 250 ரூபாய் பெறுவதிலே, பிரச்சினையில்லை; 150 ரூபாய் பெறுவதிலே பிரச்சினையில்லை. காப்புறுதித் திட்டத்திலே இன்று 50,000 ரூபாய் பெறுவதிலே பிரச்சினையில்லை; அவர்கள் அடையாளம் காட்டப்பட்டுவிட்டார்கள் என்பதை நாம் யாரும் மறுக்கக்கூடாது. இவை எல்லாம்தான் ஓர் அரசினுடைய செயலாக இருக்க வேண்டும். இவை எல்லாம்தான் ஓர் அரசு செய்யக்கூடிய பணியாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே நெசவாளர் குழந்தைகளுக்கு, தாய்மார்களுடைய பிரசவத்திற்கு இப்படி பல சமூக நலத் திட்டப் பணிகளுக்குத் தேவையான, அவர்களுடைய மேன்மையை பார்க்கக்கூடிய அளவிற்கு பல திட்டங்கள், அரசினுடைய திட்டங்கள் இன்று நேரிடையாக, நெசவாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யார் ஆட்சிக்கு வந்தாலும், யார் அதிலே தலையிட்டாலும், நிச்சயம் இதிலே செயலாற்றக்கூடிய வாய்ப்பை, எதிர்காலத்திலே தவறு செய்ய இயலாத வாய்ப்பை, இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை நாம் தயவுசெய்து மறந்துவிடக்கூடாது.

அதேபோல ஜரிகை. நான் இதைச் சொல்ல வேண்டியதுகூட இல்லை. இருந்தாலும் சொல்ல இருப்பதற்கு காரணம், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய ஊர்வலத்திலே, மக்கள் தலைவர் சொல்லவில்லை, அதிலே வந்த சண்முகம் என்ற பாராளுமன்ற உறுப்பினர், அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர், ஜரிகை சேலையிலும் இலவச வேட்டி சேலையிலும் ஊழல் என்று சொன்னதாகச் சொன்னார்கள். இந்த அரசு வந்த பிறகுதான், ஜரிகைக்கு விலையை நாம் நிர்ணயம் செய்தோம். அதற்கு முன்பு, ஜரிகை விலை சூரத்காரர்களால் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் நாம் வந்த பின்பு எப்படி நிர்ணயம் செய்தோம் என்றால், மாதம் ஒரு தடவை மும்பை சந்தையிலே தங்கத்தினுடைய விலை, வெள்ளியினுடைய விலை, உற்பத்திக்கு ஆகின்ற labour cost அதற்கு மேலே ஏற்படுகின்ற இலாபம், இதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படை. இந்த அடிப்படையிலே ஜரிகை உற்பத்தி தரமாக்கப்பட்டு, இன்று அதனுடைய முறை தெளிவாக்கப்பட்டு, அடுத்த ஒப்பந்தம் சூரத்திலேயிருந்து, அவர்கள் இங்கே வந்து போட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஆக இதிலே இதைவிட முறைகேடு இல்லாமல் ஒழுங்குபடுத்துவதற்கு வேறு வாய்ப்பு உண்டா என்றால், நிச்சயம் இல்லை.





சத்யம் கமிட்டியைப் பற்றிச் சொன்னார்கள். சத்யம் கமிட்டியைப் பற்றி, இந்த அரசுக்கு வேறுபாடான அபிப்பிராயம், ரிசர்வேஷன் உண்டு. அது நமக்கு மட்டுமல்ல, மத்திய அரசிற்கும் உண்டு. எல்லோருக்கும் இருந்த காரணத்தால்தான், அந்த ஒதுக்கீடு என்பதிலே யாரும் தலையிட முடியாத அளவிற்கு ஒரு சூழ்நிலை அதிலே மாறி இருக்கிறது. அதேபோன்றுதான் கோ-ஆப்டெக்ஸ். இன்று கோ-ஆப்டெக்ஸ் மிகச் சிறப்பாக, அதுவும் குறிப்பாக கடந்த கால அனுபவத்தை, அதனால் ஏற்பட்ட தண்டனையை உணர்ந்து, கூட்டுறவிலே இருக்கின்ற நெசவாளர்களைத் தவிர, நெசவாளர் சங்கங்களைத் தவிர, கைத்தறியைத் தவிர, வேறு எதுவுமே கொள்முதல் செய்யக்கூடாது என்று ஒரு சட்டம் போட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. சில தேவைகள் இருக்கின்றன. திருப்பூர் பனியனைப் போன்றவை எல்லாம் தேவைப்படுகிறது. ஆனால் நாம் திருப்பூர் பனியன்களுக்காக அதை எடுத்தால், வேறு சிலர் ஆந்திராவிலே சேலை வாங்குவதற்காக அதைப் பயன்படுத்திவிடுவார்கள். அதனால் அதற்குப் பயந்து கொண்டே அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் வாழக்கூடிய ஒரு கட்டாயம் கோ-ஆப்டெக்ஸுக்கு இருக்கிறது. அதனாலும் ஒரு இலாபம். ஆனால் எங்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதேபோலத்தான் விசைத்தறி. விசைத்தறிச் சங்கங்கள் அனைத்துமே கூட்டுறவுச் சங்கங்களாக இருக்கின்றன. விசைத்தறிச் சங்கங்களுக்குப் பிரச்சினையில்லை. காரணம் இலவச வேட்டி, சேலை கொடுக்கப்படுகிறது. அதுவும் கைத்தறிக்காக ஒரு ஆண்டு முழுமைக்கும் கொடுத்துவிட்டு, அதற்குப் பின்பு நாம் விசைத்தறிக்கு ஒதுக்குகின்றோம். அதிலே சங்கத்திலே இருக்கின்ற விசைத்தறியாளர்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால் வெளியிலே இருக்கின்ற விசைத்தறி உரிமையாளர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கிறது. அதிலே நாம் எந்த

அளவிற்கு ஈடுபட்டுச் செயலாற்ற முடியும் என்பதைப் பற்றி எதிர்காலத்திலேதான் நாம் சிந்திக்க வேண்டும்.

நூற்பாலைகளைப் பற்றி மிகவும் விளக்கமாகப் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) அதுதான் விளக்கம். அவையிலே ஒன்று, வெளியிலே ஒன்று சொல்வது என்னுடைய பழக்கம் அல்ல. 5 கோடியோ, 10 கோடியோ அள்ளித் தாருங்கள் என்றால், அரசாங்கப் பணம் என்பதால் அள்ளிக் கொடுத்துவிட முடியாது. 10 கோடியைக் கொடுத்தால் நீங்களும் நடத்த முடியாது. நானும் நடத்த முடியாது. உரிய கடன், உரிய அட்டாச்மென்ட், உரிய ஜப்தி, இத்தனையும் வைத்துக்கொண்டிருக்கின்ற அவற்றை ஒவ்வொன்றாக ஒழுங்குபடுத்தி, இப்போது ஒரு சீருக்குக் கொண்டு வந்திருக்கின்றோம். இதுவே, 11 ஆம் தேதி இந்த மானியம் நடைபெறுவதாக இருந்தால், பேச்சு வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஆனால், 5 ஆம் தேதி வந்த காரணத்தால், சிலவற்றை மாற்ற வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே நிச்சயம் ஆலைகளைப் பற்றிய முழுமையான விளக்கம் உங்களுக்கு விரைவிலே கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டு என்பதை நான் தெளிவாகச் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**HON. THIRU N.K.K. PERIASAMY:** Please do not interfere. I request you, Sir... (Interruption) There is no explanation needed now. Better you explain afterwards. *(குறுக்கீடு)* By what way?

**HON. SPEAKER:** Please sit down.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசலாமா?

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர் சொல்வதை—விவரமாக—சொல்வதைப் புரிந்து கொண்டுவிட்டீர்கள். (குறுக்கீடு) வழக்கம்போல நீங்கள் எழுந்து நின்று, உங்களுடைய (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். அமைச்சர் என்ன சொல்ல வருகிறார் என்றால், ஏற்கெனவே 11 ஆம் தேதி மானியக் கோரிக்கை வைத்திருந்தது. அன்றைக்கு எல்லா அறிவிப்புகளையும் செய்யலாம் என்று, பல ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருந்தார்கள்.



எதிர்பாராத வகையிலே 5 ஆம் தேதி என்று மாற்றிவிட்டார்கள். இன்னும் சில நாட்களுக்குள்ளே நல்ல தெளிவான விளக்கம் உங்களுக்குக் கிடைக்கும் என்று அமைச்சர் சொல்கிறார். சில பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார். அதைத்தான் அவர் சொல்கிறார். அதுதான் எனக்குப் புரிந்த அர்த்தம். உங்களுக்குப் புரியவில்லை என்றால், நான் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** 3 வருடமாக அது மூடிக் கிடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், நான் என்ன சொல்கிறேன் என்றால் (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் இருங்கள். நீங்கள் உட்காருங்கள். திரு. ஞானசேகரன், நீங்கள் 15 தடவை என் அறையிலே இதைப்பற்றிப் பேசி இருப்பீர்கள். நீங்களும், அமைச்சரும் என்னை வைத்துப் பேசினீர்கள். அமைச்சர் வேலூருக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன் என்றார். நீங்கள் இரண்டு பேரும் ஏன் இன்னும் ஒன்றாகப் போகவில்லை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது நேரம் 2 மணி ஆகின்றது. இப்பொழுது நீங்கள் எழுந்து நின்று இப்படிப் பிரச்சினையைக் கிளப்புவதற்கு நான் அனுமதி கொடுக்க மாட்டேன். மாண்புமிகு அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடு) பொதுவாக ஞானசேகரனுக்கு ஒரு கருத்தைச் சொல்கிறேன். நீங்கள் சொன்னீர்கள் என்பதனாலே சொல்கிறேன். அன்றைக்கு ஒரு நாள் உங்களிடம் நான் ஞாபகப்படுத்தினேன். இன்றைக்கும் நீங்கள் பாருங்கள். உங்கள் கட்சியின் சார்பிலே பேசிய முதல் உறுப்பினர் இப்போது அவையிலே இல்லை. இது ரொம்ப மோசமான மரபு. எந்த உறுப்பினர், எந்த மானியக் கோரிக்கையிலே பேசினாலும், அமைச்சர் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்பதற்கு உட்கார்ந்து இருக்க வேண்டும். ஒரு மரியாதை இருக்க வேண்டும். ஆனால் நான்தான் பேசுவேன், நான்தான் பேசுவேன் என்று உங்களிடத்திலேயும் சண்டை போட்டு, என்னிடத்திலும் சண்டை போட்டு, பேசிவிட்டு, அமைச்சர் பதில் சொல்கிறபோது இல்லை என்றால், அது ரொம்ப மோசமான மரபு. இனிமேல் அந்த மாதிரி இருக்கக் கூடாது. நீங்கள்தான் உங்கள் உறுப்பினருக்குச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அதெல்லாம் கிடையாது. (சிரிப்பு) இதுதான் உண்மை.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதை கருப்பசாமி கேட்கலாம். விசுவநாதன், நீங்கள் கேட்கக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் இப்போது அனுமதி கொடுக்கவில்லை. குறுக்கிட்டால் உங்களை வெளியேற்றுவேன். இது உறுதி. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** நான் புள்ளிவிவரங்களைக் கையிலே வைத்திருப்பதால் அதைச் சொல்லிவிடலாம் என்று நினைத்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தமட்டில், தேசிய அளவில் தனியார் கூட்டுறவு நூற்பாலைகள் செயல் இழந்து இருக்கும் இந்த நேரத்தில், அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி மற்றும் பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம் ஆகியவை நிகர இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கடந்த ஆட்சிக் காலத்திலே அரசியல் நிர்பந்தத்தால் மூடியிருந்த புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலை தற்போது Cash profit-ல் இயங்கி வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டையினுடைய அணுகுமுறைதான் எதிர்காலத்திலே அரியூருக்கும், சாத்திற்கும் கூட பிடிக்கப்பட்டு, நிச்சயம் இதே அவையிலே அப்படிப்பட்ட இலாபத்தைச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே ஞானசேகரனுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கடந்த ஆட்சிக் காலத்தில் நிர்வாகச் சீர்கேட்டால் 200 பேர் செய்ய வேண்டிய இடத்திலே 600 பேர் இருந்தார்கள். இவற்றையெல்லாம் நான் சொல்ல வரவில்லை. ஆனால் நிச்சயம் நூற்பாலைகளை எக்காரணம் கொண்டும் ஓட்டாமல் விடுவது என்கின்ற அபிப்ராயம் இந்த அரசுக்கு இல்லை. அதுவும் குறிப்பாகக் கைத்தறி நெசவாளர்களுக்கு என்று இருக்கிற அரசு இந்த அரசு. அதற்காக தேவையற்ற முறையிலே, இந்த அரசு எந்தக் காலத்திலும் அரசினுடைய பணத்தைச் செலவு செய்ய இயலாது; ஒத்துக்கொள்ள



முடியாது. ஆகவே நான் இதோடு முடித்துக் கொண்டு அறிவிப்புகளை மட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நம்முடைய . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் தனிப்பட்ட முறையிலேயா சங்கரன்கோயில் சட்டமன்ற உறுப்பினருடைய பெயரிலே குற்றச்சாட்டுச் சொன்னீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இனிமேல் எழுந்து நின்றால் நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) புது உறுப்பினர் என்றால் நீங்கள் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். எல்லோரும் முதலில் உட்காருங்கள். நான் அவரை விளக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் இடையிலே பேசக் கூடாது. உங்களில் யாருக்கும் பேச அனுமதி கிடையாது. எல்லோரும் உட்காருங்கள்.

*பிற்பகல் 2-05*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போங்கள். வெளியே போங்கள். நீங்கள் போய்விட்டு வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் எதற்கெடுத்தாலும் வெளியே போங்கள், வெளியே போங்கள் என்று சொல்கிறீர்கள்.

(திரு. பி.ஆர். சுந்தரம் வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்குள்ளாக நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? அவர் வெளியே போகச் சொல்கிறார். நீங்கள் எல்லாம் அவர் பின்னால் போங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** அவர் தவறாகச் சொல்லியிருக்கிறார்.

(திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்காகத்தானே அமைச்சரைக் கேட்கிறேன்!

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்கு இருக்கின்ற உரிமையைத்தான் எடுத்துச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் அவர் பேரில் குற்றச்சாட்டு எதையும் சொல்லவில்லையே?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** இல்லை. அவருக்கு இருக்கின்ற உரிமையைத்தான் சொன்னேன். அதேபோல நம்முடைய வேல்துரை அவர்கள் தெரிவித்த நூல் இருப்பு குறித்த விவரத்தையும் நான் அறிந்து, என்னால் இயன்ற செய்தியை உடனடியாகத் தெரிவிக்கின்றேன் என்பதையும் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்கள் கேட்டதிலே ஒரு நியாயம் இருக்கிறது. 1995-96 வரை ரூ. 43 கோடி, 1996-97-லே ரூ. 6 கோடி. 1996-97 என்பது நம்முடைய ஆட்சி. ஆனால் 1996வரை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. உயர்மட்டக் குழு 1995-96 வரை கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டுவிட்டது. அதற்குப் பின்பும் அரசு உச்சவரம்பு நிர்ணயித்திருந்தும், ஒரு சில சங்கங்கள் அதற்கு மேல் ஒரு தொகையை, தள்ளுபடி மானியமாகக் கணக்கு எழுதி வந்த தொகைதான் இந்த ரூ. 7 கோடி. இந்த ரூ. 7 கோடியையும் நாம் விடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் தொடர்ந்து இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு. அதுவும் எனது மாவட்டத்திலேயே ரூ 7 கோடி நான் கொடுத்தேன் என்றால், நாளை இதைவிட ஒரு பெரிய குற்றச்சாட்டு— கோர்ட்டிற்குச் செல்வதற்கே— கிடைக்காது. ஏனென்றால், எப்படி ஈரோடு மாவட்டத்திற்கு மட்டும் உச்சவரம்பு இல்லை. இந்த ரூ. 7 கோடி எப்படிக் கொடுக்கப்பட்டது என்று நாளை மறுநாளோ அல்லது அடுத்த நான்கு ஆண்டுகள் கழித்தோ வந்தால், அதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அது பொதுப்படையாக எடுக்கப்பட வேண்டிய முடிவு. அது எக்காரணம் கொண்டும் நான் இங்கே எடுத்துச் சொல்லக்கூடிய முடிவு அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. நா. பெரியசாமி எழுந்து நின்றார்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி 2.00 ஆகிறது ஒவ்வொருவராக இப்படிக் குறுக்கே பேசிக்கொண்டிருந்தால் எப்படி?

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் 200 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 1996 அக்டோபர் மாதத்திற்கு முன்பாகவே விற்பனை எல்லாம் ஆகிவிட்டது. அதுகுறித்து முறைப்படி ஒவ்வொரு சங்கமும் கணக்கு அனுப்பியிருக்கிறது. மத்தியக் கூட்டுறவு வங்கியும் அந்தக் கணக்கை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆடிட்டில் எல்லாம் குறித்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு அரசு நடத்திய தேர்தல் மூலமாக நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு உச்சவரம்பை எங்கேயும் மீறவில்லை. அதற்கு முன்பு மீறிய வகையில் ரூ. 7 கோடி நிராகரிக்கப்பட்டதனால், ஈரோடு மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வளவும் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகி, போனஸ் கொடுக்க முடியாத நிலை வந்திருக்கிறது; வேலை கொடுக்க முடியாத நிலைமை வந்திருக்கிறது. தொடர்ந்து நஷ்டத்திலே போவதற்கு அது ஒரு காரணமாக இருக்கிறது. ஆகையால் இதை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த கருத்தையொட்டிச் சொல்கிறேன். பன்னிபாளையத்தில் நடைபெறாத ஒன்று ஈரோட்டிலே எப்படி நடைபெறலாம்? ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லையா.? சேலம் மாவட்டத்திலே உச்சவரம்பு மீறப்படவில்லை. வேறு மாவட்டங்களிலேயும் உச்சவரம்பு மீறப்படவில்லை. ஈரோடு மாவட்டத்திலே, பக்கத்திலே இருக்கின்ற ஒரு சில சங்கங்களிலும் இந்த உச்சவரம்பு மீறப்பட்டதை நாம் எல்லோரும் சேர்ந்துதான் ஒழுங்குபடுத்த வேண்டுமேயொழிய, நான் மட்டும் தனியாக ஒழுங்குபடுத்திவிட முடியாது. ஆகவே தயவுசெய்து நேரம், காலம், பசி இவற்றை அனுசரித்து நான் என்னுடைய அறிவிப்புகளைத் தெரிவித்து முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** நேரம், காலம், பசி இவற்றைவிட இந்தப் பிரச்சினை முக்கியமானது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** நான் ஒத்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** அறிவிப்புகள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில், நெசவாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் தற்போது வழங்கப்படும் தொகையான ரூ. 40,000-லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்த ஆணையிட்டார்கள். பணியிலிருந்து இறக்கும் நெசவாளர்களுக்கு ஏற்கெனவே கோ-ஆப்டெக்ஸ் ரூ. 8,000 வழங்குகிறது. அதனை ரூ. 10,000 ஆக உயர்த்தி, ஆக மொத்தம் ரூ. 60,000 பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் ரூ.150-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கருணையுடன் அளித்தார்கள் ஆனால் குடும்ப ஓய்வூதியம் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிரமத்தினால், நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுவதிலுள்ள சிரமத்தைத் தவிர்க்க, நெசவாளர் ஓய்வூதியத்திற்கு உள்ள விதியே குடும்ப ஓய்வூதியத்திற்கும் வரும் நிதியாண்டிலிருந்து பின்பற்றப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) இது ரொம்ப முக்கியமான விஷயம். O.A.P.க்கு இருக்கின்ற விதியிலே இந்தக் குடும்பப் பென்ஷனுக்கும், அதை சுலபமாகச் செய்து, அது அதற்கு உரியது, தகுதியானது என்ற அடிப்படையிலே ஒரு முடிவு எடுத்து, இந்த நிதியாண்டிலிருந்து குடும்ப ஓய்வூதியத்திற்கு நெசவாளர்களிடமிருந்து சந்தா வசூல் செய்யப்படமாட்டாது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

ஏற்றுமதி விற்பனையை மேம்படுத்த இயக்குநர் அலுவலகத்தில் விற்பனையாளர்களுக்கும், விற்கும் சங்கங்களுக்கும், வாங்குபவர்களுக்கும் உதவியாக, ஏற்றுமதி செய்யும் காலம், வடிவமைப்பு, வியாபார ரீதியான உதவி, வெப்சைட், ஈ-காமர்ஸ், மாதிரித் துணிகளின்



காட்சியமைப்பு ஆகிய வசதிகள் கொண்ட, வியாபாரிகளும், விற்கும் சங்கங்களும் பேசுவதற்கு உதவியாக ஒரு நிலையம் அமைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே கடந்த ஆண்டிலே ரூ. 25 கோடி என்றிருந்த ஏற்றுமதி இலக்கு, வரும் நிதியாண்டில் ரூ.100.00 கோடி அளவிற்கு உயர்த்தி ஏற்றுமதி செய்யத் துறையால் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்றுமதியும் ஒரு மொத்த விற்பனையாக இருப்பதால், Deemed Export and Direct Export ஆகிய இரண்டிற்கும் தள்ளுபடி மானியத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) Deemed Export and Direct Export ஆகிய இரண்டிற்கும் தள்ளுபடி மானியம் பெறத் தகுதி உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாக உதவி இயக்குநர் அலுவலகத்தில் கணினி அமைக்கப்பட்டு, இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கணினி மையத்தால் இணைக்கப்பட்டு, துறையின் அனைத்து விவரங்களும் கணினியில் இந்த நிதியாண்டில் அமைக்கப்படவுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005-ல் வரவிருக்கும் W.T.O.வைச் சந்திக்க அனைத்து ஏற்பாடுகளும் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்றுமதியை மேம்படுத்தியதன் மூலமாக, நெசவாளர்கள் ஊதியம் பல மடங்கு உயர்த்தப்பட்டு—இன்று சென்கோடெக்ஸிலே குறைந்தபட்ச ஊதியமே 155 ரூபாய். அதிகபட்ச ஊதியம் சில பேர் 300 ரூபாய். அந்த அளவிற்கு தினம் ஏற்றுமதிக்குச் சென்ற காரணத்தால் ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய வருவாயும் பெருகியுள்ளது. ஏற்றுமதியை மேம்படுத்தியதன் மூலமாக நெசவாளர்கள் ஊதியம் பல மடங்கு உயர்த்தப்பட்டு—சங்கத்தின் வருவாயும் பெருகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சங்கம் காஞ்சிக்கோயிலில் கேஷ் கிரடிட்டே வேண்டாம் என்று அவர்கள் பணம் 20 இலட்சம் டெப்பாசிட் ஆகியிருக்கிறது.

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [2000 மே 5

ஏற்றுமதிக்கு அவர்கள் சென்ற காரணத்தால் Cash Credit வேண்டாம் என்று F.D. போடுகின்ற அளவிற்கு அந்தச் சங்கம் ஏற்றுமதியிலே இன்று சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

விற்பனைச் சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை மேம்படுத்த சந்தைக்குத் தேவையான வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றுமதி ரகம் உற்பத்தி செய்ய நெசவாளர்களுக்கு ஈரோடு, சேலம், கரூர், கோவை, தருமபுரி ஆகிய பகுதிகளில் பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றுமதி செய்யும் சங்கங்களை ஊக்கப்படுத்த ஏற்றுமதி செய்யும் நெசவாளர் சங்கங்கள் நிர்வாகக் குழு மற்றும் ஊழியர்களுக்கு, விற்பனையில், அதாவது ஏற்றுமதியாகின்ற விற்பனையில் ஒரு சதவீதம் ஊக்கத் தொகை இந்த நிதியாண்டில் வழங்கப்படவுள்ளது. ஏனென்றால் அவர்கள் உழைக்கின்றார்கள். ஏற்றுமதி உற்பத்திக்காக உழைக்கின்ற அவர்களுக்கு Corporate Sectors எல்லாம் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலும் நிர்வாகிகளுக்கும், பணியாளர்களுக்கும் ஓர் ஊக்கம், கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே 1 சதவீதம் கொடுக்கலாம் என்ற நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

W.T.O. குறித்து ஏற்கெனவே ஏற்படுத்திய ஒரு கருத்தரங்குடன், உலகச் சந்தையில் W.T.O. யுகத்தில் ஏற்றுமதியாளர்கள் சங்கம், HEPC, Pedexil ஆகியோர் மற்றும் IIT, SIMA, SITRA, ANNA UNIVERSITY ஆகிய பிரதிநிதிகளுடன் அடுத்த காலாண்டில் ஒரு கருத்தரங்கு அமைக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்தரங்கின் முக்கிய நோக்கம்— ஏற்றுமதி செய்யக்கூடிய துணிகளின் நூலின் தரம் மற்றும் விற்பனை மேம்பாட்டு யூகங்களை உலகளவில் கண்டறிவதற்கு இந்தக் கருத்தரங்கு உபயோகமாக இருக்கும்.



2000 மே 5] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

துறை அலுவலர்களுக்கு ஏற்றுமதி மற்றும் W.T.O. குறித்துப் பயிற்றுவிக்க அண்ணா பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து செயல்படுத்தபட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்றுமதியை ஊக்குவிக்க ஏற்றுமதியாளர்களுக்கு, சிறந்த ஏற்றுமதியாளர் விருது வழங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர் சங்கங்கள் சீராக உற்பத்தி செய்யவும், விற்பனையை மேம்படுத்தவும், சென்னை அண்ணா நகர், மதுரை எழுகடல், பாண்டிச்சேரி, கொச்சி, தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள விற்பனை வளாகங்களில் உள்ள காட்சியறைகளை நவீனப்படுத்த ரூ. 50.00 இலட்சம் செலவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கோவையில் உள்ள விற்பனை வளாகம் ஜூன் மாதத்தில் திறக்கப்பட உள்ளது. அதேபோல காஞ்சிபுரத்தில் அமைக்கப்படவுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினுடைய வளாகம் இந்த ஆண்டில் விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டி மானியத் திட்டத்தை நடுவண் அரசு மாற்றியமைத்ததால் வட்டி மானியத்தை மாநில அரசு நிதியிலிருந்து கொடுக்க வேண்டியுள்ளது. கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் கடந்த நிதியாண்டில் வட்டி மானியமாக ரூ. 4 கோடி வழங்கி உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்ததற்கிணங்க, நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களுக்கு Brand Name மற்றும் patent வழங்கப்படவுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா கூட்டுறவு நூற்பாலை மற்றும் பாரதி கூட்டுறவு நூற்பாலை ஏற்றுமதிக்குச் செல்கின்ற இந்த நேரத்திலே அந்த இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளும்—I.S.O. 9000 Series அடிப்படையிலே தரம் மேம்படுத்தப்பட உள்ளன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.



திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.32,08,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையில் வெள்ளி இழை உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வண்ணம் மத்திய அரசின்கீழ் இயங்கி வரும் Non-ferrous Metal Technological Development Council உதவியுடன் வெள்ளி இழை தயாரிக்க, தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, இந்த ஆண்டு இந்தத் தொழில் நுட்பம் மூலம் வெள்ளி இழை உற்பத்தித் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்றால் இந்த வெள்ளி இழை இழைக்கின்ற சாமர்த்தியம் 5 குடும்பங்களால் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்ற நிலையிலே இருந்தது. நாம் அதிலிருந்து மீண்டு வரக்கூடிய வாய்ப்பிற்காக இதைச் செய்திருக்கிறோம்.

நெசவாளர்களுக்கு சென்னிமலையில் ஒரே இடத்தில் 1,010 வீடுகள் கட்ட 51.99 ஏக்கர் இடம் வாங்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரின் சராசரி கிரயத் தொகை ரூ. 1,36,742. பக்கத்திலேயே 4 இலட்சம் ரூபாய் ஒரு ஏக்கருக்கு என்று வாங்கியிருக்கிறார்கள். நேர்மையாக, மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடந்த காரணத்தால், இன்று ஒரு ஏக்கர் 1,36,742 ரூபாய்க்கு, கிரயச் செலவு உட்பட அடக்கி, ஒவ்வொருவருக்கும் 3½ சென்ட் வீதம், அதற்கு 10,000 ரூபாய் அவர்கள் கட்டி, இன்று ஒட்டுமொத்தமாகக் கிரயம் செய்யப்பட்டு—மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்து விட்டது. 42,000 ரூபாய் மானியம் இதிலே கிடைக்க இருக்கிறது. உற்பத்தியாளர்களுக்கு எதிர்காலத்திலே நல்ல உற்பத்தித் திட்டத்தைக் கொடுத்த காரணத்தால், இன்று துணிந்து அவர்களே 10,000 ரூபாய் கொடுத்து 1,010 வீடுகளையும் இன்றைக்குக் கிரயம் செய்து கொடுக்க---நிலம் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிவாகச் சொல்வது, நான் ஒன்றும் யாருக்காகவும் சொல்லவில்லை. நான் என் மனதிலே பட்டதைக் கடைசியில் சொல்லியாக வேண்டும். கைத்தறித் துறையில், கலைஞர் அரசின் திட்டங்களை நிறைவேற்ற எனக்கு உறுதுணையாக இருந்த கைத்தறித் துறைச் செயலாளர், கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் மற்றும் கைத்தறித் துறை இயக்குநர் ஆகியோருக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களெல்லாம் இணைந்து இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியாது. அந்த அளவிற்கு ஒற்றுமையோடு இருந்த காரணத்தால்தான் இந்த அளவிற்குச் செயலாற்ற முடிந்தது.





மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த 65 வெட்டுத் தீர்மானங்களையும் படித்தேன். உங்கள் அரிய கருத்துக்கள் எல்லாவற்றுக்கும்—காலத்தின் அருமை கருதி—என்னால் தனித்தனியாக விளக்கங்கள் கொடுக்க இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைப் பார்க்கின்றபோது, எனக்கு வெளிநாட்டிலே பிடித்த ஒரு தலைவர் ஜான் எஃப். கென்னடி ஆவார். அவருடைய லைப்ரரியை எல்லாம் சென்று பார்த்திருக்கிறேன். அவருடைய வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன்:

"All this will not be finished in the first 100 days; Nor it will be finished in the first 1000 days; Nor in the life of this Administration; Nor even perhaps in our life time on this Planet. But, let us begin." அதே வார்த்தைகளைத்தான் நானும் சொல்கிறேன். நாம் எல்லோரும் தொடர்ந்து முயற்சி செய்து அந்தப் பணியிலே ஈடுபடுவோம்.

இங்கே வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்த நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள், அந்த வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்தத் துறை இன்னும் சிறப்பாகப் பாடுபட நல்ல ஆலோசனைகளை எனக்கு அளித்து, அதையொட்டி அரசு கோரிய தொகையை அளிக்க உங்களுடைய அனுமதியை வேண்டி, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 26—கதர் கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26—கதர் கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது

*பிற்பகல் 2-20*

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.186,75,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



[பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (8-5-2000) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*191. மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)*

*192. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய சாதனைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)*

*193. கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 2000. (தமிழ், ஆங்கிலம்)*

*194. மானியக் கோரிக்கை எண் 26—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)*

*195. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)*

அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.



திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

## இணைப்பு-I

[346 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்

### கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

I. முன்னுரை

1.01 கைத்தறி மற்றும் துணிநூல் துறை 1956 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, தனித் துறையாக இயங்கத் தொடங்கியது. இத்துறைக்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் துறைத் தலைவராக உள்ளார். தலைமை அலுவலகத்தில் பல்வேறு பதவி நிலைகளில் அலுவலர்களும், சரக அளவில் துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்களும் துறைத் தலைவர் அவர்தம் பணியினை ஆற்ற உதவி புரிந்து வருகின்றனர். மொத்தம் உள்ள 18 சரக அலுவலகங்களில் இரண்டு சரகங்கள் துணை இயக்குநர்களை அலுவலகத் தலைவராகக் கொண்டும், மற்ற சரகங்கள் உதவி இயக்குநர்களை அலுவலகத் தலைவராகக் கொண்டும் இயங்கி வருகின்றன. தலைமை அலுவலகத்தில் இயக்குநருக்கு உதவியாக மூன்று இணை இயக்குநர்களும், அதாவது ஒரு இணை இயக்குநர் கைத்தறி பொறுப்பிலும், மற்றொருவர் துணிநூல் பொறுப்பிலும் மூன்றாவது இணை இயக்குநர் சீருடை பொறுப்பிலும் உள்ளனர். நிதித் துறையின் துணை செயலர் பதவி நிலையில் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ஒருவரும், தொழிலாளர் துறையின் துணை ஆணையர் பதவி நிலையில் தொழில் உறவு ஆலோசகர் ஒருவரும் இயக்ககத்தில் உள்ளனர். துறையின் திட்டங்கள் முழுவதையும் திட்டமிட்டு வகுத்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்புகளை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கவனித்து வரும் நிலையில், சரக அளவில் அரசின் கொள்கைகள் மற்றும் இயக்குநரின் உத்தரவுகளை

[2000 மே 5

செயல்படுத்துவதுடன் பிரதம நெசவாளர் கூட்டுறவு. சங்கங்களின் செயல்பாடுகளையும் சரக துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர்.

1.02 "கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண் 25-ன் கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில். பின்வரும் விவரப்படி ரூ.186.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| கோரிக்கை எண் | திட்டம் சாராதது | திட்டம் சார்ந்தது | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநில அரசு திட்டம் | மைய அரசு திட்டம் | மைய அரசு உதவி | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 25.கைத்தறி மற்றும் துணிநூல் | 139.47 | 0.01 | 2.58 | 44.64 | 47.23 |

| திட்டம் மற்றும் திட்டம் சாராதது மொத்தம் | திரும்ப வசூலிப்பதை கூட்டுக. | பெரு மொத்தம் |
|---|---|---|
| 7 | 8 | 9 |
| 186.70 | 0.06 | 186.76 |

1.03 நாட்டின் மரபு மற்றும் பண்பாடு ஆகியவற்றினை பாதுகாப்பதிலும் பொருளாதார வளர்ச்சியிலும் கைத்தறித் தொழில் பெரும் பங்கினை வகிக்கிறது. "கிராமங்களே நமது நாட்டின் முதுகெலும்பு" என தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களால் குறிப்பிடப்பட்டது போல கைத்தறித் துறை கிராமப்புறத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளது. நம்முடைய கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் நீண்ட பாரம்பரிய கலையாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது.



2000 மே 5]

1.04 நுகர்வோரின் தேவைக்கேற்ப துணி வகைகளை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்யும் சாதகமான சூழ்நிலை கைத்தறித் தொழிலுக்கு உள்ளது. இது தவிர, மிகக் குறைந்த மூலதனத்தில் இயற்கைச் சூழலுக்கேற்ப செயல்படும் தன்மையைப் பெற்றுள்ளது. நம்முடைய நாகரிக மரபை வெளிப்படுத்தும் ஒரு கலையான நெசவுத்தொழில் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வருகிறது.

1.05 மாநில அரசின் தீவிர முயற்சியின் காரணமாக, விசைத்தறி மற்றும் ஆலை ஆகியவற்றின் எதிர்ப்பையும் மீறி கைத்தறித்தொழில் திறம்பட செயல்படுகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கான நலவாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது. மைய அரசு திட்டங்கள் உட்பட பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்துவதில் இது சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

1.06 மாநில துணி நெசவுத் தொழிலின் வரலாற்றில் முதன் முறையாக தமிழக அரசால் 1998 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மாநில துணி நெசவுக் கொள்கை, தற்போது கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது. கைத்தறித் தொழிலின் பாரம்பரியத்தை பாதுகாத்தல், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தித் திறனை முழுமையாக எய்தல் மற்றும் அதிக வருவாய் ஈட்டுதலை இந்த துணி நெசவுக் கொள்கை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. துணி நெசவுக் கொள்கையானது கைத்தறி, விசைத்தறி, ஆலை, பின்னலாடை, ஆயத்த ஆடைகள், வளர்ச்சிக்கும் ஏற்றுமதிக்கும் உறுதுணையாக உள்ளது. பஞ்சு உற்பத்தியினை அதிகரித்தல், தரமான நூலினை உற்பத்தி செய்தல், பதனிடும் வசதியினை அதிகரித்தல், நிலையான ஏற்றுமதிக்கான வழிவகைகளை ஒவ்வொரு நிலையிலும் ஆராய்தல் ஆகியவை துணி நெசவுக் கொள்கையின் நோக்கங்களாகும். தமிழ்நாடு அரசின் துணி நெசவுக் கொள்கையினை முனைப்புடன் செயல்படுத்திடவும், இக்கொள்கையினை மதிப்பீடு செய்திடவும், அதே நேரத்தில் தேசிய துணி நெசவுக் கொள்கையுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதை கண்காணிக்கவும் மாநில அரசு "மாநில நெசவுப் பெருமன்றம்" ஒன்றினை அமைத்துள்ளது.

[2000 மே 5

1.07 கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த போதிலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் தடையின்றி கிடைக்கச் செய்ய, அவை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

1.08 இந்தியாவின் மிகத் தொன்மையான தொழிலான துணி நெசவுத் தொழில் நாட்டின் அன்னியச் செலாவணி ஈட்டுவதில் பெரும் பங்கு வகிக்கிறது. நமது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் துணி நெசவுத் தொழிலின் பங்கு 30 சதவீதத்திற்கும் மேற்பட்டதாகும். இந்திய பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிக்கும் துணித்தொழில், தொழில் உற்பத்தியில் பெரும் தொழிலாக விளங்குகிறது. பஞ்சை அடிப்படையாகக் கொண்ட துணித்தொழில் போதிய அளவு தரமான பஞ்சு கிடைக்காமை மற்றும் பஞ்சு விலை ஏற்றம் இவற்றால் பெரும் இடர்ப்பாடுகளை சந்தித்து வருகிறது. இந்த இடர்ப்பாடுகளுக் கிடையிலும் கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் தேவையை தமது முழுமையான உற்பத்தி மூலம் பூர்த்தி செய்து வருகின்றன.

1.09 மக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. தாராளமயமாக்கப்பட்ட உரிம முறைகளினால் விசைத்தறித் தொழில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில், சுமார் 4.00 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன.

1.10 ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிகூடத்துடன் இணைந்த வீட்டு வசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர்கள் வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம், கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை தமிழ்நாடு அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது.



2000 மே 5]

1.11 தமிழ்நாட்டில் 801 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும் 600 சிறிய நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. தமிழகம் மகாராஷ்டிரா மற்றும் இதர மாநிலங்களிலுள்ள பின்னலாடைத் தொழில் மற்றும் விசைத்தறிகளுக்குத் தேவையான கூம்பு நூலையும், கைத்தறிகளுக்குத் தேவையான சிட்ட நூலையும் இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

## 2. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின் தாக்கம்

2.01 1995 ஆம் ஆண்டில் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் உலக வர்த்தகம் முழுமையும் கவனிப்பதுடன் இந்த ஒப்பந்தம் கட்டுப்பாடுகள் ஏதுமற்ற சுதந்திரமான உலக வர்த்தக சூழ்நிலையை உருவாக்க உறுதி கொண்டுள்ளது. எனவே, உள்நாட்டுச் சந்தையிலும் வெளிநாட்டுச் சந்தையிலும் பன்னாட்டு நிறுவனங்களுடன் இந்திய நிறுவனங்கள் போட்டியிட வேண்டியுள்ளது. உலகத் துணி வர்த்தகம் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின் இணை ஒப்பந்தங்களில் ஒன்றான துணி மற்றும் துணிநூல்களுக்கான ஒப்பந்தத்தின்கீழ் வருகிறது. மற்ற தொழில்களைப் போலவே துணித்தொழிலும் சந்தையில் தனது இடத்தை தக்க வைத்துக்கொள்ளவும் புதிய சந்தைகளில் நுழையவும் பெரும் போட்டியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. 1-1-2005-ல் துணி வர்த்தகம் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்துடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுவிடும். தமிழ்நாட்டில் கைத்தறிகளுக்கு சந்தையில் கணிசமான பங்கை பெற நல்ல வாய்ப்பு உள்ளது. எனினும், நமது துணித் தொழில் விலைரீதியாகவும், தரரீதியாகவும் சிறந்து விளங்கும் மற்ற வளரும் நாடுகளுடன் போட்டியிட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

2.02 துணித்தொழிலையும் குறிப்பாக, கைத்தறித் தொழிலையும் இச்சூழ்நிலையை எதிர்கொள்ள தயார் செய்வதற்கென துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தால் ஏற்படும் தாக்கத்தை ஆராய தனிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு இத்தாக்கத்தை விளம்பரப்படுத்த ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது, கைத்தறி

நெசவாளர்கள், துணி உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த விழிப்புணர்வு முகாம்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அரசு உதவியை எதிர்நோக்காமல் பழமையான துணி ரகங்களிலிருந்து சந்தையில் விலைபோகக்கூடிய விலை உயர்ந்த ரகங்களுக்கு உற்பத்தியை மாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், உலகச் சந்தையில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் போட்டியிடும் வகையில் உலகத் தரத்தை உறுதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தங்களினால் ஏற்படும் சவால்களை எதிர்நோக்க துறை முழுமையாக தயார் நிலையில் உள்ளது.

## 3. ஏற்றுமதி

3.01 நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டும், அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் நல்ல இலாபத்துடன் இயங்கும் நோக்கத்துடனும், உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடச் செய்வதில் கைத்தறித்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

3.02 200 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 10,000-க்கு மேற்பட்ட தறிகள் ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு ரூ. 25.00 கோடி அளவிற்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ஏற்றுமதி ரக தறிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.03 ஏற்றுமதியின் அவசியத்தை நெசவாளர்கள் உணரச் செய்யவும், ஏற்றுமதி ரக உற்பத்தில் அவர்களை ஊக்குவிக்கவும் துறை சந்தை நிலவரங்கள் மற்றும் ஏற்றுமதி ரக உற்பத்தியின் அவசியம் குறித்து கருத்தரங்கினை நடத்தியது. மேலும் ஈரோடு, கரூர், சென்னை ஆகிய இடங்களில் வாங்குவோர் மற்றும் விற்பனையாளர்கள் கூட்டங்களை நடத்தி அவற்றில் பல்வேறு கைத்தறி ரகங்களுக்கான உத்தரவுகள் பெறப்பட்டன. இத்தகைய கூட்டங்களை மாநிலத்தில் மற்ற இடங்களிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தங்களை செயல்படுத்தும்போது நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பலத்த



போட்டியினை எதிர்நோக்க வேண்டியிருப்பதால், வரும் ஆண்டுகளில் ஏற்றுமதிக்கு அதிக் முக்கியத்துவம் கொடுக்க துறை முடிவு செய்துள்ளது.

3.04 ஏற்றுமதி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கோடு இயக்ககத்தில் ஏற்றுமதி தகவல் மற்றும் காட்சிக்கூடம் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் கைத்தறி ரகங்களை விருப்பமுள்ள வாங்குவோர் அறியும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதியை அதிகரிக்கவும், ஏற்றுமதியாளர்களிடமிருந்து உத்தரவுகள் பெறவும் ஏற்றுமதி விற்பனையை செயல்படுத்துவதை ஒருங்கிணைக்கவும் இயக்ககத்தில் "ஏற்றுமதி பிரிவு" ஒன்று ஆரம்பிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## கைத்தறிகள்

### பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 31-3-2000 அன்றைய தேதியில் மொத்தம் 1410 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் சுமார் 2.90 இலட்சம் கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் யாவும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 950.00 இலட்சம் மீட்டர் அளவுக்கு பல்வேறு வகைப்பட்ட கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறே ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 450.00 கோடி அளவிற்கு இச்சங்கங்கள் விற்பனையை மேற்கொண்டு வருகின்றன. தமிழக அரசினால் தீட்டப்படும் கைத்தறி நெசவாளர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நெசவாளர் நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் யாவும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக மட்டுமே கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

## 5. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

5.01 பட்டு கைத்தறி நெசவாளர்களின் நுண் திறத்தினால் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் மற்றும் சேலம் மையங்கள் புகழ் பெற்று விளங்குகின்றன. இருபக்கக்கரை, நுண்கலை வடிவங்கள், சேலை தலைப்புகளின் கோர்வை நெசவு, மற்றும்

வனப்புமிகு ஜரிகை வேலைப்பாடு முதலியவை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகளின் சிறப்பு அம்சங்களாகும். தமிழகத்தில் தற்போது 96 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 56,517 பட்டு கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் மட்டும் ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 120,00 கோடி மதிப்புள்ள 24.00 இலட்சம் மீட்டர் பட்டு ரக துணி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு சுமார் ரூ. 185.00 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. தமிழக அரசு செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் இச்சங்கங்கள் வாயிலாக அவற்றில் உள்ள பட்டு கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

5.02 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பட்டு ரக ஜவுளி உற்பத்திக்குத் தேவையான கச்சாப்பட்டு மற்றும் தயார்ப்பட்டினை காஞ்சிபுரத்தில் உள்ள "டான்சில்க்" எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையத்திலிருந்து மட்டுமே கொள்முதல் செய்து வந்தன. அக்டோபர் 1997 முதல் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மேற்படி "டான்சில்க்" நிறுவனத்திலிருந்து மட்டுமல்லாது காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்தால் நடத்தப்படும் பட்டு ஏலத்தில் நேரடியாகப் பங்கேற்று பட்டு கொள்முதல் செய்திடவும் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், ஆண்டொன்றுக்கு சுமார் 3.00 இலட்சம் கிலோ பட்டு நூலை உபயோகப்படுத்துகின்றன. தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளி இழையான சரிகை, பட்டுப்புடவைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தியில் ஒரு முக்கியமான மூலப் பொருளாகும். பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 56000 கிலோ கிராம் சரிகை தேவைப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலை ஆண்டொன்றுக்கு சுமார் 17000 கிலோ கிராம் உற்பத்தி செய்து, சங்கங்களின் மொத்தத் தேவையில் 30 விழுக்காட்டினை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. எஞ்சிய சரிகைத் தேவைகளுக்கு, தமிழக அரசால் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மைய சரிகை கொள்முதல் குழு மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இக்குழு பிரதி மாதமும் அந்தந்த





மாதத்தில் நிலவும் தங்கம் மற்றும் வெள்ளி விலைகளை நிர்ணயிக்கிறது. தமிழ்நாடு சரிகை ஆலையின் சோதனைக் கூடத்தில், சரிகையின் தரம் சோதனை செய்யப்படுகிறது. விநியோகம் செய்யப்பட்ட சரிகையின் தரம் குறைந்து இருந்தால் சரிகை நிராகரிக்கப்படுகிறது. இவ்வாறான நடைமுறைகளின் காரணமாக சரிகையின் தரம் உறுதி செய்யப்பட்டு, இது பட்டு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களின் தரத்தில் பிரதிபலிக்கிறது.

## 6. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

6.01 தமிழகத்தில் தறியில்லாத ஏழை நெசவாளர்களின் குறைகளை நீக்கும் வகையில் மாநில அரசு தொழிற்கூட அமைப்பிலான தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கியது. இத்தகைய தொழிற்கூடங்களில், நெசவாளர்களுக்கு தறிகள் வழங்கப்பட்டு, நூலும் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு மாநிலத்தில் அமைக்கப்பட்ட 190 சங்கங்களில், 114 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தற்போது 11774 தறிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் 1999-2000 ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 58.01 இலட்சம் மீட்டர் மற்றும் 56.23 இலட்சம் மீட்டர் ஆகும். மேற்கண்ட 114 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், ஆதிதிராவிடர்கள் மட்டும் பயன்பெறும் வகையிலும், 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் மட்டும் பயன்பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

6.02. தொழிற்கூடம் அமைப்பிலான கட்டடங்களில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருவதால் தொழிற்சாலைகளுக்கான சட்டம் மற்றும் விதிமுறைகளின் கீழ் உள்ள அனைத்து விதிகளும் இச்சங்கங்களுக்கு பொருந்துகின்றன. இதன் காரணமாக கூடுதல் செலவினம் ஏற்படுகிறது. பெரும்பாலான சங்கங்கள் சட்டபூர்வமான பட்டியல்களைக்கூட எதிர்கொள்ள சிரமப்படுகின்றன. எனவே, இலாபகரமாக செயல்பட வாய்ப்பிருப்பின் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாக மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது.

இதுவரை 12 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

7. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல்.

7.01 கைத்தறி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி மறுநிதி உதவித்திட்டத்தின்கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவை மூலமாக சலுகை வட்டி விகிதங்களில் நிதியுதவி அளித்து வந்தன. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை மூலதனத்திற்காக தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளும் பகிர்ந்து கொள்ளும் வகையில் அரசால் 3% வட்டி மானியம் அளிக்கப்பட்டு வந்தன. கோ-ஆப்டெக்ஸ்க்கு விற்பனை மூலதனக்கடன் அளிப்பதற்கென தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு 1% மானியம் அளிக்கப்பட்டது. இந்த நடைமுறை 30-9-1996 வரை அமலில் இருந்தது. நபார்டு நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கைத்தறி வளர்ச்சி ஆணையர், புதுதில்லி அவர்களால் இந்த நடைமுறை 1-10-1996 முதல் மாற்றியமைக்கப்பட்டது.

7.02 இந்த திருத்தியமைக்கப்பட்ட நடைமுறையின்படி நடைமுறை மூலதனம், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமான வங்கி வட்டி விகிதங்களிலேயே வழங்கப்படுகிறது. ஆனால் 3% வட்டி மானியம் அரசினால் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. தற்போதைய திருத்திய விற்பனை மேம்பாட்டு திட்டத்தில் வட்டி மானியம் நிறுத்தப்பட்டுள்ள போதிலும், இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவது மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

7.03 தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) 1999-2000 ஆம் நிதியாண்டிற்கு பிரதம நெசவாளர் சங்கங்களுக்கும், தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) ரூ. 512.57 கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித்துள்ளது.



7.04 தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) தறி ஒன்றுக்கு 1999-2000 ஆம் ஆண்டுக்கு அனுமதித்துள்ள நடைமுறை மூலதனத்தின் அளவு மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள மூலதனத்தின் அளவு பின்வருமாறு:-

| வ.எண் | தறிகளின் வகை | தறி ஒன்றுக்கு 1999-2000 ஆம் ஆண்டுக்கு நிதி உதவி | 2000-2001 ஆம் ஆண்டுக்கு நபார்டு நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட நிதி உதவி. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | பருத்தி | 16,500 | 16,500 |
| 2. | தனி ரக பருத்தி | 27,000 | 29,000 |
| 3. | பட்டு | 38,000 | 40,000 |
| 4. | பாலியஸ்டர் | 27,000 | 28,000 |
| 5. | விசைத்தறி பருத்தி | 37,000 | 37,000 |
| 6. | விசைத்தறி பட்டு | 26,000 | 26,000 |
| 7. | விசைத்தறி பாலியஸ்டர் | 24,000 | 24,000 |

8. விற்பனை மேம்பாட்டு உதவித்திட்டம்/ தள்ளுபடி மானியத் திட்டம்

8.01 கைத்தறித் துணி வகைகளின் விற்பனைக்கென்று வழங்கப்படும் உதவிகளில் தள்ளுபடி மானியம் வழங்குவது மிகவும் முக்கியமானதாகும். ஆலைகள் மற்றும் விசைத்தறித் துணிகளுடன் போட்டியிட்டு விற்பனை செய்வதற்கு உகந்த வகையில் கைத்தறித் துணிகளின் விலையினைக் குறைத்து விற்பனை செய்து விற்பனையினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

122/2002

## 5-5-2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 275-318 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை | 318-320 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | 320-324 |
| (அ) இராஜபாளையம் சுப்புராஜ காட்டன் மில் பிரச்சினை | 320-323 |
| திரு. இரா. தாமரைக்கனி | 320-322 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 322-323 |
| (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நீரோடிப் பகுதியில் மீனவர்களுக்கான தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளது | 323-324 |
| *திரு. டி. மணி | 323-324 |
| *மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் | 324 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) ஓசூர் தாலுகா, பாகலூர் ஏசியன் பேரிங்ஸ் ஆலை பிரச்சினை | 325-327 |
| (ஆ) பாகப் பிரிவினையாகும் சொத்துக்களுக்கான முத்திரைத் தீர்வையைக் குறைத்தல் | 328-334 |
| 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | |
| தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 334-335 |

8.02 மத்திய அரசினால் 1989-1990 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்துடன் இத்திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 75% நிதி உதவி தள்ளுபடி மானியத்திற்கும் மீதமுள்ள 25% நிதி உதவி (1) வட்டி மானியம், (2) பங்கு மூலதனம்/ விற்பனைக் கூடங்களை அமைப்பதற்கு நிதி உதவி/ விளிம்புத் தொகை மற்றும் (3) மத்திய மற்றும் மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்படும் திட்டங்களுக்கு அளிக்கப்படுகின்றன. மத்திய அரசு இத்திட்டத்தில் முதலில் 1-4-1998-லும் பின்னர் 1-4-1999-லும் தள்ளுபடி மானியத்திற்கான நிதி உதவியினை குறைத்தும், கட்டமைப்பு வசதிகளுக்கான உதவியினை கீழ்க்குறிப்பிட்டுள்ளபடி அதிகரித்தும் சில மாற்றங்களை செய்துள்ளது.

| ஆண்டு | விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம் | | | |
|---|---|---|---|---|
| | தள்ளுபடி மானியம் | தள்ளுபடி மானியம் அல்லாத இனங்கள் | | |
| | | கொள்முதல் விற்பனைக் கூடம் நவீனமயமாக்குதல் | போக்குவரத்து செலவு/கண்காட்சிகளில் பங்கேற்றல் | நவீன வடிவமைப்பு கணிப்பொறி உதவியுடன் நவீன வடிவமைப்பு/ திறமை மிக்க வடிவமைப் பாளரை நியமித்தல். |
| 1998-1999 | 50% | 20% | 20% | 10% |
| 1999-2000 | 25% | 30% | 30% | 15% |

8.03 விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தில், 75% நிதி உதவி தள்ளுபடி மானியத்திற்கு வழங்கப்பட்டு வருவதனை 1998-1999 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்திடவும், திருத்திய வழிமுறைகளை 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்திடவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கோரிக்கையினை



ஏற்பதற்கில்லை என்று தெரிவித்துள்ள மத்திய அரசு. நடைமுறையிலுள்ள விற்பனை மேம்பாட்டுத் திட்டமும் 1-4-2000-க்குப் பின்னர் தொடராது என்றும் தெரிவித்துள்ளது.

8.04 விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் 1998-1999 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளுக்கு வேண்டிய தொகையான மத்திய அரசின் பங்கான ரூ.4195.75 இலட்சம் மாநில அரசுக்கு வழங்க மத்திய அரசு கோரப்பட்டது. 1998-1999 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. 2097.55 இலட்சம் மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.2098.20 இலட்சம், இவற்றில் 1998-1999 ஆம் ஆண்டுக்கு மட்டும் நிலுவைத் தொகையில் ரூ.700.00 இலட்சம் மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மைய அரசால் ஒரு புதிய திட்டம் உருவாக்கப்பட்டு அதன் மூலம் திருத்தப்பட்ட வடிவில் நிதி உதவி பெறும் வாய்ப்பு உள்ளது.

| வரிசை எண் | ஆண்டு | விற்பனை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கோரப்பட்ட தொகை. | வழங்கப் பட்டுள்ள தொகை | பெறப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | 1998-1999 | 2097.55 | 700.00 | 1397.55 |
| 2. | 1999-2000 | 2098.20 | . | 2098.20 |
| | மொத்தம் | 4195.75 | 700.00 | 3495.75 |

8.05 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவி வந்த பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவைகளை நிவர்த்தி செய்வதற்கு அமைக்கப்பட்ட "உயர்மட்டக்குழு" பல்வேறு பரிந்துரைகளை அளித்தது. இப்பரிந்துரைகளின்படி மாநில அரசு தள்ளுபடி மானிய கொள்கையினை மாற்றியமைத்து மே 1998 முதல் சில்லரை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி வழங்கி ஆணையிட்டுள்ளது.

8.06 விற்பனை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசு, மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து தள்ளுபடி மானியத்திற்கு கடந்த 5 ஆண்டுகளில் வழங்கியுள்ள நிதி உதவி விவரம் கீழ்வருமாறு:-

223318


பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள் 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்
(ஆ) கோரிக்கை எண் 26—கதர்-கிராமத் தொழில்கள் — 335-453

*மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி — 335,346,355, 356,368,370, 379,382,385, 386,397,409, 410,411, 427-447

*மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு — 341,346,398, 419-427

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் — 347-356

*திரு. கே.ஆர்.ஜி. தனபாலன் — 356-362

திரு. வி.ஜி. தனபால். — 362-364

*திரு. நா. பெரியசாமி — 336,341,364-372,448,450

திருமதி ஆர். சரஸ்வதி — 372-377

திரு. சி. ஞானசேகரன் — 335-336,341, 378-380,382-387,418,419, 437,447,450

*திரு. பி.என். சுப்பிரமணி — 387-391

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் — 391-395

*திரு. செ. கருப்பசாமி — 395-400,439

திரு. பெ. ஆசையன் — 401-408

*திரு. பா. வேல்துரை — 340,345,410-418,449,452

7. அறிவிப்பு—

உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்குதல் — 346

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 453


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 23, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031**
**2000 மே 5, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

**'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படி கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரி செய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்துச் செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 521, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**521—**

**இலவச திருக்குறள் புத்தகம்**

***20740**—**திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளில் பயிலும் ஆறாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக திருக்குறள் புத்தகம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2000 மே 5

| வருடம் | பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள். | கோ-ஆப்டெக்ஸ் | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1995-1996 | 2706.73 | 1392.82 | 4099.55 |
| 1996-1997 | 2628.81 | 1456.74 | 4085.55 |
| 1997-1998 | 2355.85 | 1456.74 | 3812.59 |
| 1998-1999 | 9540.55 | 1965.85 | 11506.40 |
| 1999-2000 | 3871.00 | 1629.00 | 5500.00 |

**9.** **இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்**

9.01 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், கட்டுமர மீனவ ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும், கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து அரசு செயல்படுத்தி வருகிறது. பொங்கல் 2000 பண்டிகைக்கு 77.10 இலட்சம் சேலைகள் மற்றும் 70.42 இலட்சம் வேட்டிகள் ரூ.112.24 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான சேலை மற்றும் வேட்டிகள் முழுவதும் தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் துணிகள் உற்பத்தி செய்யும்பொழுது அதன் செலவு மற்றும் பதனிடுதல் ஆகியவற்றின் தரம் பல்வேறு நிலைகளில் உறுதி செய்யப்பட்டு வருகிறது. எவ்விடத்திலிருந்தும் எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காமல் இலவச வேட்டி சேலைகள் முழுவதும் 8-1-2000-க்கு முன்னதாகவே விநியோகிக்கப்பட்டன.

9.02 2001-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான நடப்பு ஆண்டு உற்பத்தி, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் தொடங்கப்பட்டுவிட்டது. பொங்கல் 2001-க்குள் உற்பத்தி செய்து வழங்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2000 மே 5]

**10.** **பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்**

10.01 சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் 1985-86ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நலத் துறையிடமும், தைத்த சீருடைகளை வழங்கும் பொறுப்பு கல்வித் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டு உள்ளது துணிகளை வழங்கும் பொறுப்பு மற்றும் பட்டியல் மீது பணம் பெற்று வழங்கும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

10.02 1999-2000 ஆம் ஆண்டிற்கு மொத்த சீருடைத் துணி தேவையான ரூ.117.30 இலட்சம் மீட்டர் துணிகள் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டு விட்டன.

10.03 இது தவிர, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைகளுக்கும் 1999-2000ஆம் ஆண்டிற்கு ரூ.21.31 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளன

**11.** **கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**

11.01 கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 1975-76 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு வீதம் தமது பங்காக செலுத்துகின்றனர். அவர்கள் பெறும் கூலியின் மீது மாநில அரசு ரூபாய்க்கு 4 காசு வீதம் தனது பங்காக வழங்கி வருகிறது. இத்தொகை அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டு அதற்கு 7 விழுக்காடு வட்டி வழங்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர மாநில அரசு கூடுதலாக 5% வட்டி வழங்கி இவ்வட்டியைக் கொண்டு நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 31-3-2000 நிலவரப்படி, 91876 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

[2000 மே 5

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளில் பயிலும் ஆறாம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக திருக்குறள் புத்தகம் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் இந்திய அளவில் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதா? ஆம் எனில், அதன் விவரம் என்ன என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதனுடைய விவரம் தேவையானால் தனியாக ஒரு கேள்வி அனுப்ப வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பொது மறையாக இருக்கின்ற திருக்குறளை மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக வழங்குவது என்பது மிகப் பெரிய செலவினத்தை அரசுக்கு ஏற்படுத்தாது. ஏற்கெனவே நூலகத் துறையை நிர்வகித்து வரும் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள், இந்தப் பொது மறையை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலமாக மிகப் பெரிய ஓர் உந்துதலை ஏற்படுத்த முடியும். ஆகவே திருக்குறளை வழங்குகின்ற முடிவினை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குப் பாடப் புத்தகம் இலவசமாக வழங்கப்படுகிறது. திருக்குறள் போன்ற புத்தகத்தை ஒரு குறிப்பிட்ட சிறப்பு அடையாளமாக வழங்குகின்றபோதுதான் அதிலே மாணவர்களுடைய கவனம் செல்லுமே தவிர, ஒரு சாதாரண விளம்பரத்தை மற்றவர்களிடத்திலே விநியோகிப்பதைப்போல புத்தகத்தை மட்டும் தருவதனாலே அந்த ஊக்கம் [illegible]



2000 மே 5]

புத்தகம் கிடைத்தது என்ற காரணத்தினால் உடனே அதனிடத்திலே மதிப்பு கூடிவிடாது. இன்னும் சொல்லப்போனால் இலவசமாகக் கொடுத்தே பல பொருள்கள் மதிப்பு இழந்திருக்கின்றன. ஆகவே அது அல்ல. அதைவிட திருக்குறளில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கு ஏற்றவகையில் பள்ளி மாணவர்களுக்கு, காலையில் நடைபெறுகிற இறைவணக்கம் அல்லது தமிழ் வணக்கம் அல்லது கூட்டு வழிபாடு நேரத்திலே ஒரு திருக்குறளைச் சொல்லி விளக்கம் சொல்வதற்கும், மாணவர்களுக்கு ஒழுக்கத்தை உணர்த்தக்கூடிய முறையில் நடக்கக்கூடிய வகுப்பில் சில மணி நேரங்கள் திருக்குறளினுடைய பெருமையை அவர்களுக்கு எடுத்து விளக்குவதற்கும் ஒரு தொடர் முயற்சி நடைபெற்று வருகிறது. பாடப் புத்தகங்களிலேயும் ஒவ்வொரு வகுப்பிலேயும் சில திருக்குறள்களாவது இடம் பெற்று வருகின்றன. ஆகவே திருக்குறள் ஈடுபாடு வந்து விடுமானால் ஒருவேளை அவர்களுக்குப் புத்தகம் வழங்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படலாம். அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறுவது அல்லது வெற்றி பெறுவது என்ற அந்த அடிப்படையில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்குவதன் மூலமாகவே திருக்குறளுக்குப் பெருமை சேர்க்க முடியும். அப்படிப் பலவகையில் திருக்குறள் பயில ஆர்வம் ஏற்படுத்தலாம். வெறும் இலவசப் புத்தகம் என்பது மட்டும் அந்தப் பெருமையைச் சேர்க்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபை தொடங்கும்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் திருக்குறளைச் சொல்லி சட்டசபையை ஆரம்பிக்கிறார்கள். அதேமாதிரி பாராளுமன்றத்திலும், மற்ற மாநிலச் சட்டசபைகளிலேயும் உலகப் பொது மறையான திருக்குறளைச் சொல்லித்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா? அதேமாதிரி நம்முடைய control-ல் உள்ள உள்ளாட்சித் துறைகளிலேயும் மன்றங்களின் கூட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னால் திருக்குறளைச் சொல்லி ஆரம்பிக்க வேண்டும் என்று நீங்கள் ஆணையிடுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டசபைக்கு எப்படி ஓர் இறையாண்மைத் தகுதி இருக்கிறதோ அதைப்போல

[2000 மே 5

14.02 இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்பும் ஏற்படுகிறது. 1998-1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் திருத்திய விதிமுறைகளின்படி 920 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட அரசு முதல் தவணையாக ரூ. 116.24 இலட்சம் (மைய அரசு ரூ. 84.04 இலட்சம், மாநில அரசு ரூ. 32.20 இலட்சம்) மான்யமாக வழங்கியுள்ளது. மைய அரசு இரண்டாம் தவணையாக ரூ. 84.04 இலட்சம் விடுவித்துள்ளது. இதனையும் மாநில அரசு தனது பங்காக ரூ. 32.20 இலட்சத்துடன் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 116.24 இலட்சம் விடுவித்துள்ளது.

14.03 தற்போது துணி நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கும் நோக்கத்தோடு மைய அரசு "சுவரன் ஜெயந்தி ஆவாஸ் யோஜனா" என்ற புதிய கடன் மற்றும் மானிய திட்டத்தினைக் கிராமப்புற வளர்ச்சித் துறையின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை ஏற்கெனவே நடைமுறையிலுள்ள தறிக்கூடம் அமைக்கும் திட்டத்துடன் இணைத்து சென்னிமலையில் 1010 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தறிக்கூடத்துடன் கூடிய வீடு ஒன்றுக்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதி உதவி வழங்கப்படுகிறது.

| | | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|---|
| (1) | மத்திய அரசின் மானியம் | ரூ. | ரூ. |
| | (அ) கிராம வளர்ச்சித் துறை (வீட்டிற்கு) | 20,000 | 20,000 |
| | (ஆ) கைத்தறி வளர்ச்சி ஆணையரின் மானியம் (தறிக்கூடத்திற்கு) | 7,000 | 10,000 |
| (2) | மத்திய அரசின் கடன்: | | |
| | (அ) கிராம வளர்ச்சித் துறை | 40,000 | 40,000 |
| (3) | மாநில அரசின் மானியம் | 7,000 | 7,000 |
| | மொத்தம் | 74,000 | 77,000 |



2000 மே 5]

## 15. தறிக்கூடம் அமைக்கும் திட்டம்

வீட்டுடன் கூடிய தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தைத் தவிர ஏற்கெனவே வீடுகள் உள்ள நெசவாளர்களுக்கு தறிக்கூடம் அமைக்க மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. கிராமப்பகுதியில் ஒரு தறிக்கூடம் அமைக்க ரூ.7,000/-ம் நகர்ப்பகுதியில் ஒரு தறிக்கூடம் அமைக்க ரூ.10,000/- மானியமாக வழங்கப்படுகிறது. 1999-2000-ஆம் ஆண்டுக்கு 1672 தொழிற்கூடங்கள் அமைக்க நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அதில் முதல் தவணையாக ரூ.59.96 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, 1998-99-ஆம் ஆண்டு திட்டத்திற்கான இரண்டாவது தவணையாக ரூ.55.92 லட்சம் மைய அரசால் விடுவிக்கப்பட்டு, அதை மாநில அரசு ஏப்ரல் 2000-ல் விடுவித்துள்ளது. மேலும் 168 தொழிற்கூடங்கள் கட்டுவதற்காக ரூ.14.06 இலட்சம் கோரி முன்மொழிவு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 16. கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு செறிவுத்திட்டம்

16.01 நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தோடு 100 விழுக்காடு மானியத்துடன் உள்ளமைப்போடு கூடிய ஆரம்ப சுகாதார மையங்களும் அமைக்க நல்வாழ்வு செறிவுத் திட்டம் 1992-93-ஆம் ஆண்டு முதல் மைய அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

*மருத்துவச், செலவினங்களை திரும்ப வழங்குதல்.

*கண் சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்ப வழங்குதல்.

*குடிநீர் வழங்குதல்.

*மகப்பேறு உதவி.

*குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஈட்டுத்தொகை.

*ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள்.

பாராளுமன்றத்திற்கு இறையாண்மைத் தகுதி உண்டு. மற்ற மாநில சட்டசபைகளுக்கும் ஒரு சிறப்பு உரிமை, தகுதி உண்டு. எனவே அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர அவர்களுக்கு நாம் சொல்வதற்கு, நமக்கு அந்தத் தகுதியும், உரிமையும் இருப்பதாக அவர்கள் ஏற்கமாட்டார்கள். மற்றும் ஒன்று. ஒன்றியக் கூட்டங்களில் அல்லது ஊராட்சி மன்றக் கூட்டங்களில் திருக்குறளைச் சொல்லித் தொடங்க வேண்டுமென்று கேட்பது, சட்டசபை அளவிற்கு அங்கே உறுப்பினர்களோ அல்லது ஒரு பெரும் கூட்டமாகவோ இருக்கக்கூடிய வாய்ப்பு மிகவும் குறைவு. கூட்டம் ஒழுங்காக நடந்தாலே போதும். (சிரிப்பு) ஆகவே திருக்குறளைச் சொல்லுங்கள் என்றால் யார் யார் வந்தபிறகு சொல்வது என்பதிலேயே நேரம் போய்விடும். தாமரைக்கனி அவர்களுக்கு இவற்றிலெல்லாம் நீண்ட அனுபவம் இருந்தும்கூட திருக்குறளினிடத்திலே தனக்குள்ள ஈடுபாட்டைக் காட்டுவதற்காக அவர்கள் கேட்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *522*, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**522—**

**வண்டிப் பாலம்**

***21277—திரு. வை. சிவபுண்ணியம் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோட்டூர் ஒன்றியம், கண்டகிரயம் கிராமம், மன்னார்குடி ஒன்றியம், காவேரிக் கோட்டம் இணைப்புக்கு கோரையாற்றில் ஒரு வண்டிப் பாலம் அமைத்துத் தர அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட வண்டிப் பாலம் 25 மீட்டர் அமைக்க உத்தேசமாக ரூ.25 இலட்சம் செலவாகும் எனக்





கருதப்படுகிறது ரூபாய் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளை ஒன்றிய அளவில் எடுத்துச் செய்ய வழிவகையில்லை. மேலும் ஒன்றிய நிதி நிலையும் போதுமானதாக இல்லை. எனவே மேற்படி பாலம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுமேயானால் இது பற்றிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டகிரயம் காவேரிக் கோட்டம் வண்டிப் பாலம் மிக அவசியத் தேவையாக இருக்கிறது. குறிப்பாக பெருமழையின் போது எங்கள் மாவட்டத்திலே கடுமையான வெள்ளப் பெருக்கு கோரையாற்றிலேதான் வரும். இந்தப் பகுதி மக்கள் அந்தப் பகுதியிலே மாட்டிக் கொண்டபோது, மிகப் பெரிய சிரமத்தோடு அரசு அவர்களையெல்லாம் 3 நாட்கள் கழித்துத்தான் மீட்க முடிந்தது. அதிலேயிருந்து தொடர்ந்து அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்து வருகிறார்கள். இப்போது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வழங்கலாம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்கிறார்கள். ஒரு பாலத்திற்கே கணிசமான நிதியை ஒதுக்கிவிட்டால், தொகுதி முழுவதிலேயும் பல கோரிக்கைகள் இருப்பதை நிறைவேற்ற இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதற்கு ஏதாவதொரு மாற்று ஆலோசனையை அமைச்சர் அவர்கள் சொல்ல முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனுடைய நிதி நிலையையும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். 31-3-2000 தேதி நிலவரப்படி மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய நிதி அப்போதிருந்தது 17,55,000 ரூபாய். கோட்டூர் ஒன்றியத்தில் 8,06,000 ரூபாய். இப்போது என்ன நிலை? உயர்ந்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்பது பற்றி இந்த 1½ மாதத்திலுள்ள விவரம் எனக்குத் தெரியாது. இருந்தாலும் இதிலே 50 சதவிகித நிதி எப்போதும் Savings ஆக இருக்க வேண்டும். அவற்றையெல்லாம் கழித்துப் பார்த்தால் இந்தப் பாலம் கட்டுவதற்குப் பணம் இல்லை. மற்ற வேலைகளைப் பற்றியும் யோசிக்கிறோம். ஆனாலும் இதுபோன்ற பாலமும் முக்கியம் என்பதை நான் உணர்கிறேன். இவற்றை 2, 3, வகைகளாகப் பிரிக்க வேண்டியிருக்கிறது. இப்போது NABARD-லே நாம் சிறிய பாலங்கள், சாலைகள் இவைகளுக்காகக் கொஞ்சம் நிதி கேட்டு, அதற்காகக் குறிப்பிட்ட பணிகளை எடுத்து அனுப்பி அதிலே அவர்கள்

11.02 இத்திட்டத்தின்கீழ் 1999-2000-ஆம் ஆண்டிற்கு மாநில அரசு பங்காக ரூ. 394.32 இலட்சமும், 7 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ. 530.13 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 12. கைத்தறி நெசவாளர்கள் குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

12.01 நெசவாளர்களின் வீடு, நெசவு உபகரணங்கள் போன்றவற்றிற்கு ஏற்படும் இழப்பு மற்றும் அவர்களுக்கு விபத்தினால் மரணம் ஏற்பட்டால் பாதுகாப்பு வழங்கும் வகையில் புதிய காப்பீட்டுத் திட்டத்தை மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் விபத்தில் மரணமடையும் நெசவாளர்களுக்கு மட்டுமே பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதால், இத்திட்டத்தில் பங்கு பெறுவதில்லை என்று முடிவு செய்த தமிழ்நாடு அரசு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள குழுக் காப்பீட்டு திட்டத்தினை தொடர்ந்து 1999-2000 ஆம் ஆண்டும் செயல்படுத்த வேண்டும் என மைய அரசைக் கோரியது. எனவே தமிழ்நாடு அரசின் சுய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு காப்பீடு திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைக்காமல் மாநில அரசே செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக ரூ. 40,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முனைமத் தொகைக்கான மைய அரசின் பங்கு ஒவ்வொரு வருடமும் கோரப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 1999-2000-ஆம் ஆண்டிற்கு மைய அரசின் பங்காக ரூ. 36,67,360/- விடுவித்துள்ளது.

12.02 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் போது அறிவித்ததற்கிணங்க காப்பீட்டுத் தொகை 1-4-2000 முதல் ரூ. 40,000/-லிருந்து ரூ. 50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 13. மைய சிக்கன நிதித் திட்டம்

மைய சிக்கன நிதித் திட்டமானது மாநில அரசினால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையான ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், நெசவாளர் தாம் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு செலுத்துவதைத் தவிர மைய அரசும் தனது பங்காக ரூபாய்க்கு 4 காசு வீதம் அளிக்கின்றது. மைய அரசின் பங்குத் தொகையையும் அரசு கணக்கில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இட்டு வைக்கப்பட்டு அதற்கும் 7 விழுக்காடு வட்டி மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 272.43 இலட்சம் வழங்கக்கோரி மைய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு மைய அரசிடம் இருந்து ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. மைய அரசு 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைத்தொகை ரூ. 335.49 இலட்சத்தினை விடுவித்துள்ளது. இதில் மாநில அரசு ரூ. 210.00 இலட்சத்தினை விடுவித்துள்ளது.



## 14. நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்

14.01 நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் மானிய உதவியுடனும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தில் கடன் தொகையையும் பெற்று செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் பங்கேற்று மானியம் வழங்கி வருகின்றது. ஒரு தறிக்கூடத்துடன் கூடிய வீடு அமைக்க தற்போது வழங்கப்பட்டுவரும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:

| | கிராமப்புறம் (ஒரு தறிக்கூடத்துடன் | நகர்ப்புறம் கூடிய வீட்டுக்கு) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மத்திய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| பயனீட்டாளர் பங்கு | 3,000 | 5,000 |
| மொத்தம் | 68,000 | 72,000 |